ஆனந்த போதினி

1928 - 29

JL
Y54 2em211,9
N28.2.4
129830-

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு.

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம் ஏ, எல்.டி,

தொகுதி - ௨] | விபவஹ - சித்திரைமீ | [பகுதி - ௪


உள்ளடக்கம்.


| | |
|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை ... ... | ௱௨௧ |
| விரதப் பகுதி : சோமவார விரதம்... ... | ௱௨௩ |
| பொது விஷயங்கள் : வாழ்க்கையின் நோக்கம் | ௱௨௬ |
| கல்வி ... ... ... | ௱௩௰ |
| ஒழுக்கமுங் கல்வியு மோரிரு கண்கள் ... | ௱௩௨ |
| வாய்மை ... | ௱௩௩ |
| அறிவியல் பகுதி : ஞாயிற்றின் கதிர்கள் ... | ௱௩௪ |
| மாதர் பகுதி : பெண்கல்வி ... ... | ௱௩௭ |
| மாணவர் பகுதி : ஒரு புத்திமதி ... ... | ௱௩௮ |
| தொழிற் பகுதி: நெய்தற்றொழில்... ... | ௱௩௯ |
| குடும்ப வைத்தியம் ... ... | ௱௪௧ |
| செங்குந்தர் கிளர்ச்சி ... ... | ௱௪௨ |
| செய்தித் திரட்டு ... ... .. | ௱௫௫ |
| பாமாலைப் பகுதி ... ... ... | ௱௫௫ |
| செங்குந்த சீமான்களுக்கு 2 விண்ணப்பங்கள்... | ௱௫௯ |
| செங்குந்தர் பஞ்சாங்கம்... ... ... | ௱௬௰ |



## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

கெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

Registered No. 1514.

# செங்குந்த மித்திரன்


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

| தொகுதி - உ | விபவஸு - சித்திரைமீ | பகுதி - ச |
|---|---|---|



25 SEP 1928


முருகன் துணை.

சூலம்பிடித் தெமபாசஞ் சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன்றனக் கொருகாலு மஞ்சேன் கடன்மீதெழுந்த
ஆலங்குடித்த பெருமான் குமா னறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### சென்னையில் செங்குந்த மாணவர் விடுதி

சென்ற மாதத்து மித்திரனில் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிருவாக சபையின் தீர்மானங்கள் சில பிரசுரஞ் செய்யப்பட்டிருந்தன. அவற்றுள் அதி முக்கியமான ஒன்றைப்பற்றி இங்குச் சில குறிப்புக்கள் எழுத விரும்புகின்றோம்.

**சென்னையில் செங்குந்த மாணவரின் நிலைமை**

செங்குந்த மாணவர் விடுதியொன்று சென்னையில் தனியாக நம்மவர்க்கென அமைந்திருக்க வேண்டுமென்னும் அவா சில நாளாக நம்மவருள் சிலர் மனதில் அடிக்கடி எழுவதுண்டு. உயர்தர கல்வியையும் தொழிற்கல்வியையும் ந டக் கற்குஞ் செங்குந்த மாணாக்கர்கள் சென்னையில் தற்போது ஐம்பதிற்குமே லிருக்கின்றனர். இவர்களுள், சென்னையில் பந்துமித்திரர்கள் ஒருவருமில்லாத உள்நாட்டுச் செங்குந்த மாணாக்கர்கள் மட்டும் ஏறக்குறைய முப்பது பேரிருக்கின்றனர். பந்து மித்திரரில்லாக் குறைவினால், இவர்களுள் பெரும்பான்மையோர், பிராமணர் சாப்பாட்டு விடுதிகளிலோ, சைவர் சாப்பாட்டு விடுதிகளிலோ மாதம் மாதம் இவ்வளவெனக் கொடுத்து உண்டு, குடிக்கூலிக்கு அறைகள் எடுத்துக்கொண்டு அங்கு வசித்துக் காலங் கழிக்கின்றனர். சிறுபான்மையோர் அவரவர் கலாசாலை மாணவர் விடுதிகளில் தங்குகின்றனர். ஒரு சிலர் சத்திரங்களிலோ, செல்வர்கள் வீட்டிலோ தரும சாப்பாடு உண்டு வித்தை பயில்கின்றனர்.

இம்மூன்று திறத்தார்க்கும் பல பிரதிகூலங்கள் ஏற்படுகின்றன என்பதை நண்பர்கள் அறியாமலிரார். ஹோட்டலில் சாப்பிடுவது அவசர நிமித்தம் உதவக்கூடிய ஒரு வசதியேயொழிய, வருஷக் கணக்காக ஓரிடத்தில் தங்கிக் கல்வி பயிலவேண்டிய பால்ய வித்தியார்த்திகளுக்குத் தகுந்த ஏற்பாடல்ல வென்பதைப் பெற்றோர் ஒப்புக்கொள்வர். லாபத்தைக்கோரி வைத்திருக்கும் ஹோட்டல்களில் சுகாதார விதிகளுக்கு இணங்கச் சமையலும் பரிமாறலும் எதிர்பார்த்தலாகாது. நல்ல வளர்ச்சியை நாடும் பருவத்தில் நம் மாணவர் இந்நிலையில் நெடுநாள் இருக்க நேரிடின், அவர்களுக்கு உடல் நலன் குன்றுவதன்றிப் பிணிகளும் தோன்று

கின்றன. மேலும், இம்மாணவர்களில் பலர், யாதொரு கட்டுக் காவலுமின்றிச் சுயேச்சையாக வாழ நேரிடுவதால், கெட்ட சகவாசங்களுக்கு இலக்காகித் துர்ப்பழக்கங்கள் மேற்கொண்டு ஒழுக்கங் குன்றிச் சீரற்றுப் போகவும் நேரிடும். அந்தோ! இவர்கள் நிலை மிகவும் பரிதபிக்கத் தக்கதே.

தத்தம் கலாசாலை விடுதிகளில் உறைந்துகொண்டு, அங்கேயே உண்டி பானாதிகளையருந்தும் மாணாக்கர்களுக்குச் சௌகரியங்கள் பல இருப்பினும், சுகாதார வசதிகளும், கட்டுக்காவல் மேற்பார்வை முதலியனவைகளும் இருப்பினும், அவர்களுக்குக் குடிக்கூலிச் செலவும், சாப்பாட்டுச் செலவும், இதர சில்லரைச் செலவுகளும் வெகு அதிகமாகின்றன. பெருஞ் செல்வம் படைத்த சீமான்கள் தவிர, மிதமான வருவாயுள்ள பெற்றோர்கள் இத்தகைய பணக்காரர் விடுதிகளில் தமது மக்களை வைத்து ஆதரிக்கப் போதுமான சக்தியற்றவர்களாயிருக்கின்றனர். இந்நிலையிலுள்ளவர்களே, பெரும்பாலும், தமது மக்களைப் பிராமணர் சாப்பாட்டு விடுதிகளில் உணவு வாங்கி அருந்திச் சுத்தமான காற்று வெளிச்ச முதலிய வசதிகளில்லாது குறைந்த குடிக்கூலிக்குக் கிடைக்கும் அறைகளில் வதியும்படி விடுகின்றனர்.

தரும சாப்பாடு உண்டு வித்தை பயிலும் மாணவர்களோவெனின், அவர்களும் பெரிதும் அல்லற்படுகின்றனர். இவர்கள் சாப்பிடும் இடமொன்றும், கற்குமிடமொன்றும், தங்கி உறங்குமிட மொன்றுமாக அதிக அலைச்சற்படுகின்றனர். இவர்களைப் போஷிப்பவர் இல்லங்கள் இவர்கள் கல்வி பயிலும் கலாசாலைகளுக்கு அருகாமையில் அநேகமாக இருப்பதில்லை. ஆகவே இவர்களுக்குச் சாப்பாட்டுக்கு வருவதும் போவதிலுமேயே வீணுகக் காலங் கழிகின்றது. மேலும், போஷிப்பவர்கள் ஊரில்லாத சமயம் இவர்கள் ஹோட்டல்களில் பணங்கொடுத்துச் சாப்பிடவேண்டும். போஷிப்பவர்க்கும் இவர்களால் சில கஷ்டங்கள் உண்டாகின்றன. பள்ளிக்கூடத்து மாணவர்க்குச் சமையல் சீக்கிரமாகவேண்டும்; பள்ளிக்கூடம் தூரமானல் இன்னும் சீக்கிரமாகவேண்டும். இதனுல், போஷிப்பவர் வீட்டுப் பெண்களுக்குத் தினந்தினம் அவசரமாகச் சமையல் முடிக்கவேண்டுமென்னும் அலைச்சல் அதிகமாகின்றது.

### சென்னையில் செங்குந்த மாணவர் விடுதியின் அவசியம்

சென்னையில் வந்து தங்கி உயர்தர கல்வி பயிலும் நம் செங்குந்த மாணாக்கர்களின் நிலைமை எத்தன்மையதாக இருக்கின்றதென்பதை இதுகாறும் கூறியதினின்றுமே அங்கு நம்மவர் ஆதரவில் ஒரு 'செங்குந்த மாணவர் விடுதி' அமையவேண்டியது அத்தியாவசியமென்பது விளங்கும். நாம் வெளியூர்களுக்குச் சுற்றுப் பிரயாணஞ் செய்யுஞ் சமயங்களிலெல்லாம், அநேக செங்குந்த சீமான்களின் குமாரர்கள், கல்வியில் ஊக்கமுள்ளவர்களாயிருப்பினும், அவர்களைச் சென்னைக்கு அனுப்பி உயர்தர கல்வி கற்க விடாமல் அவர்கள் பெற்றோர் வைத்திருப்பதற்குக் காரணத்தை விசாரிக்கும்போது, எமக்கு எல்லோரும் ஒரே காரணத்தைச் சொல்லுகின்றனர். அதாவது, வெளியூர்களிலிருந்து பெற்றோரைவிட்டு வந்து சென்னையில் கல்வி பயில விரும்பும் நம் குல மாணாக்கர்களுக்கு, அங்கு, பொறுப்புள்ள செங்குந்தர்களின் மேற்பார்வையில், ஆரோக்கியமான உண்டி உறைவிடம் முதலிய வசதிகள் அமைத்துத் தரும் யாதொரு விடுதியும் இல்லாத குறைவேயாகும். இதனுலேயே நன்றாய்க் கற்று விற்பன்னராகக் கூடிய நம் வாலிபர்களும், துருப்புப் பிடித்த வாள் போலும் சாணை பிடியாத கத்திபோலும், வாளா விருந்து கூர்மழுங்கிப்போகின்றனர். இதனுல் நம் செங்குந்த சமூகத்துக்கு ஏற்படும் நஷ்டம் இவ்வளவவ்வளவல்ல.

### நமது தலைச்சங்கத்தின் தீர்மானம்

இக்குறையை நாம் நெடுநாளாக உணர்ந்திருந்தும், சென்ற ஆண்டுவரையில் நமக்கென ஒரு மாகாண சங்கம் சென்னையில் அமைந்திராத காரணத்தால், இவ்விஷயமாக முயற்சி யெடுத்துக் கொள்ள அநுகூலமேற்படவில்லை. இப்பொழுது, நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவிலும், அதன் நிருவாக உத்தியோகஸ்தர்களின் மேற்பார்வையிலும், நமக்கென ஒரு செங்குந்த மாணவர் விடுதி ஏற்படுத்தத் தீர்மானித்திருப்பது, நமது குலத்துப் பிள்ளைகள் உயர்தர கல்வியிலும் தொழிற் கல்வியிலும் மேம்பட்டு, நம் குல முன்னேற்றத்திற்கான வழிகளை நூதன வழிகளில் தேடி வைப்பதற்கு அஸ்திவாரக்கல் நட்டது போலாகின்றது. இத்தகைய விடுதியை நம் சங்கம் சென்னையில் ஸ்தாபிக்குமானல், அதில் நம் மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு,

(2)



உறைவிடம் முதலியவை குறைந்த செலவில் அமைவதோடு, தக்க மேற்பார்வையின்கீழும் நல்ல சகவாசத்தோடும் அவர்கள் வித்தை பயின்று, ஒழுக்கசீலர்களாகவும், மேதாவிகளாகவும், சிறந்த குலத்தொண்டர்களாகவும் வாழ்க்கையிலமர்ந்து, தமக்கும், தம் குடும்பத்திற்கும், குலத்திற்கும் அரிய மேம்பாட்டை உண்டாக்கிக் கொள்வர் என்பதில் ஐயமில்லை. மேலும் இவ்விடத்தில் சில ஏழைச் செங்குந்த மாணவர்களையும் வைத்து ஆதரிக்கவும் இயலும்.

### 'நன்கொடை அனுப்புங்கள்.'

இம்முயற்சியில் நமது தலைச்சங்கத்துக்கு யாதொரு இடர்ப்பாடும் நேராதவண்ணம் தாராளமான நன்கொடை அளிக்கவேண்டுவது நமது குலச் சீமான்களின் கடமையென்பதை நாம் இங்குச் சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் ஆதரவிருப்பின் இம்முயற்சி நீடூழி நற்பயன் தந்து நமது குல முன்னேற்றத்துக்கு மிகச் சிறந்த சாதனமாகும். இவ்விஷயமாக நமது தலைச் சங்க அமைச்சர்கள் கையொப்பமிட்ட விண்ணப்பமொன்று மற்றொரு பக்கத்தில் பிரசுரமாஇருக்கின்றது. அதைக்கண்ணுறும் செங்குந்தகுல சீமான் ஒவ்வொருவரையும் தம் தம்மால் ஆன நன்கொடையை நமது தலைச் சங்கத்துக்கு அனுப்பி அதன் நோக்கங்களை முற்றுவிக்க வேண்டிக் கொள்ளுகிறோம். இது ஒரு சிறந்த புண்ணியமாகும்.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
பத்திரிகாசிரியர்.

## விரதப் பகுதி

### சோமவார விரதம்

'உத்தம வானோர்தம்முள் உத்தமனாகும் ஈசன்
உத்தம சத்திமாருள் உத்தமி உருத்திராணி [ன்று
உத்தம விரதந்தம்முள் உத்தமம் திங்கள்சோன்பெ
உத்தம மறைநூலாதி உரைக்கும் இச்சோமவாரம்.'

பல வளப்பங்கள் பொருந்திய ஆரிய வர்த்தமென்னும் நாட்டை அரசாண்டு வந்த சித்திரவர்மன் என்னும் ஒரு அரசனானவன் அருமையான சில புத்திரர்களைப் பெற்றும், பெண் குழந்தைகள் பெறவேண்டுமெனக் கருதி, பல நல்ல தவங்களைச் செய்து செந்தாமரையில் வீற்றிருக்கும் மகாலக்ஷ்மியைப்போன்ற ஒரு புத்திரியைப் பெற்று, அவட்குச் சீமந்தினி யெனப் பெயர் சூட்டி, உலகமாதாவாகிய உமாதேவியாரைப் புத்திரியாகப் பெற்ற மலையரையனைப்போல் மகிழ்ச்சி யடைந்தான்.

இப்பெண்குழந்தையின் சாதகத்தைக் கண்ணுற்ற ஒரு சோதிடன், அரசனை நோக்கி 'மன்னவனே! உமது புத்திரி கலியாணத்தில் உமாதேவியையும், புத்திரர்களைப் பெறுவதில் அதிதியையும், அழகில் தமயந்தியையும், நற்குணத்தில் திருமகளையும், பதிவிரதா தர்மத்தில் சீதையையும், கல்வியில் சரஸ்வதியையும் ஒத்தவளாய் இவ்வுலகத்தில் பல்லாண்டு கணவனைவிட்டுப் பிரியாமல் வாழ்ந்துகொண்டிருப்பாள்' என்றான். இதைக் கேட்ட அரசன் முன்னினும் மகிழ்ச்சி யடைந்திருந்தான்.

சின்னாட்களுக்குப் பின்னர் அச்சாதகத்தைப் பார்த்த மற்றொரு சோதிடன், 'வேலாயுதத்தையுடைய அரசனே! இப்பெண் பதினன்காம் ஆண்டில் மாங்கல்யமிழப்பள்' என்றான். சித்திரவர்மன் இதைக் கேட்டு மனம் வருந்திச் சில பகல் கழித்தான்.

சீமந்தினி மங்கைப் பருவ மடைதலும், அவளது தோழிமார் அவளுக்குப் பதினன்காம் வயதில் நேர விருக்கும் விபத்தை அறிவித்தனர். அதைக் கேட்ட சீமந்தினி பயந்து, யாக்கியவர்க்க முனிவர் பத்தினியாகிய மயித்திரையினது பன்னசாலைக்குச் சென்று, அவ்வம்மையாரைத் தொழுது, தனக்கு நேரிட்டிருக்கிற துயர் நிலையைச் சொல்லி, 'அன்னையே! இத்தீவினையை நீக்கத்தக்க வழியொன்றைக் கிருபைசெய்தருளல் வேண்டும்' எனப்பிரார்த்தித்தாள். மைத்திரை என்பாள் சீமந்தினியை நோக்கிக் 'குழந்தாய்! நீ மனம் வருந்த வேண்டாம் "ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்" என்னும் அழியா மறைமொழியை மனதிலிருத்தி முயல்வையேல், நின்துயர் நீங்கி இன்புறுவை. நீ முயலுமாறு சொல்லுகிறேன்கேள்.—

'உத்தம சிவ விரதங்களுள் சோமவார விரத

மென்றென்றுண்டு. அவ்விரதத்தை முறைப்படி அநுஷ்டிப்பாயாக. உத்தமமாகிய தேவர்களுக்குள்ளே உத்தமன் பரமசிவனாகும். உத்தமமாகிய சத்திகளுக்குள்ளே உத்தமி உமாதேவி யாவாள். விரதங்களுக்குள்ளே சோமவார விரதம் உத்தமமானது. நன்மார்க்கத்தில் முறையானே ஈட்டிய பொருளைக்கொண்டு இவ்விரதத்தை நோற்போர்க்கு, ஒன்று பல்கோடியாக வளரும். இந்நன்மை மிகுந்த விரதத்தை நோற்கத்தகும் உத்தம முறையைக் குறிக்குங் காலத்து, கார்த்திகை மார்கழி மாதங்களிலும், இரட்டித்துவரும் அமாவாசை சேர்ந்த மலமாசத்தை ஒழித்து மற்றைய மாதங்களிலும், சுக்கிலபக்ஷத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு உணவு நீக்கி, அயலிடத்தில் நித்திரை செய்யாமல், விடியற்காலத்தில் எழுந்து, சிவபெருமானைத் தியானித்து, நித்திய கருமங்களை முடித்துக் காம முதலிய குற்றங்களை அகற்றி, நீராடிப் பின்னர் திருநீறணிந்து, உருத்திராக்க மாலை புனைந்து, வெள்ளிய மலர்களால் விநாயகப்பெருமானை அருச்சித்து, விரதம் இனிது முடியுமாறு அருளவேண்டுமெனப் பிரார்த்தித்து, சிவாலயத்துட் சென்று, சிவபெருமானை மனதிலுன்னி, சிவரூபமாய் நின்று பிருதிவி தத்துவ முதல் சிவதத்துவமீறாக அத்துவித வடிவமான சிவலிங்கப் பெருமானை ஆசன மந்திரம், மூர்த்தி மந்திரம், மூலமந்திரம் முதலியவற்றால் ஆகம விதிப்படி பூசிக்கவேண்டும். அங்ஙனம் பூசிக்கும் காலத்து பஞ்சாமிர்தம், பஞ்சகவ்யம், பஞ்ச கனிகள், செந்தேன், சந்தனக்குழம்பு, புட்பநீர் இவற்றால் அபிஷேகஞ் செய்து, வெண்பட்டு சந்தனம் முதலிய சாத்தி, கேசாதி பாதம்வரையில் அங்கங்களைப் பூசனை புரிய வேண்டும். உமாதேவியாரையும் அவ்வாறே வணங்கிப் பஞ்சாக்ஷரத்தை அம்பிகைக்குப் பொருந்துமாறு உச்சரித்துப் பூசிக்கவேண்டும். பின்னர் திருவமுது முதலிய நிவேதித்துத் தூபதீபங் காட்டி, வில்வத்தால் அர்ச்சிக்க வேண்டும். அர்ச்சனைப் பொருள்களில் வில்வம் விசேஷமானது. அர்ச்சனைக் குரிய பத்திர புஷ்பங்களில் இதழ்மடங்கிச் சுருங்கியது, உலர்ந்தது, மயிர் சிக்குண்டிருப்பது, புழுக்கடியுண்டது ஆகியவை குற்றமுள்ளவாம். வில்வத்திற்கு அக்குற்றங்கள் இருப்பினும் குற்றமில்லை; உத்தமமே.

‘ஆலயத்திற் சென்று சிவலிங்கப்பெருமானை அருச்சிக்க இயலாதோர், இஷ்டலிங்கத்திற்கு அருச்சனை புரிந்து விரதமனுஷ்டிக்கலாம்.

‘ஒப்புயர்வற்ற இச்சோமவார விரதம் ஐவகைப்படும். அவை யாவன: மத்தியானத்தில் உணவில்லாதிருத்தல், இரவில் உணவில்லாதிருத்தல், இருபோதும் உணவில்லாதிருத்தல், உறங்காதிருத்தல், நான்கு ஜாமத்திலும் சிவார்ச்சனை செய்தல் என்பனவாம். இவை தம்முள் ஒன்றுக்கொன்று பலன் அளிப்பதில் மேம்பட்டு நிற்கும். பிரதோஷத்திற்பொருந்தி வருகிற சோமவாரங்களும், சூரியனோடு சந்திரன் பொருந்தும் அமாவாசையிலுற்ற சோமவாரங்களும் விசேடமாம். இவ்விரதம் நோற்கும் கால அளவு ஒன்று, இரண்டு, மூன்று, பனிரண்டு வருஷங்களும், ஆயுள்நாள் அளவுமாம். இந்நோன்பை அநுஷ்டிப்போர், நித்திய கடன்களை முடித்துக்கொண்டு, உச்சிமுதல் அந்திவரையில் சிவபுராணங் கேட்டு, மாலைக் காலந்தொட்டு உமாசமேதராய சிவபெருமானைப் பூசிக்கவேண்டும். வில்வத்தைக் கொண்டு இறைவனது ஆயிர நாமங்களையுங் கூறி, நான்கு ஜாமங்களிலும் பூசிக்கவேண்டும். இவ்விரதத்தை அநுஷ்டித்து எண்ணிறந்தோர் பேறு பெற்றனர். நீ அடைந்துள்ள துயரம் ஒழியவேண்டில் இதை நோற்பாயாக’ என்றுபதேசித்தாள்.

மயித்திரையின் உபதேசத்தைக் கேட்ட சீமந்தினி மனமகிழ்ந்து, அன்றுமுதல் சோமவாரந்தோறும் திரிகரணசுத்தியாய், ஆகம விதிப்படி பார்வதிதேவியோடு பரமசிவனை ஆராதித்து வருநாளில், நளச்சக்கரவர்த்தியின் பௌத்திரனும், இந்திரசேனனுடைய புத்திரனுமான சித்திராங்கதனென்பவனுக்குச் சித்திரவருமன் தன் புத்திரியாகிய சீமந்தினியை மணஞ்செய்வித்தான். பின்னர் ஒரு பகல் சீமந்தினியின் கொழுநனான சித்திராங்கதன் தன் தோழர்களோடு யமுனாநதியில் தோணியிலேறிச் செல்லும்போது, தோணி கவிழ்ந்து அதிலிருந்தவர்கள் யாவரும அந்நதியிலிருந்த முதலைகளால் விழுங்கப் பெற்றனர். ஆனால் சித்திராங்கதன் மாத்திரம் நாகர்கள் வாழும் பிலத்துக்குள் போய் அங்குள்ள ஒரு நதிக்கரையைச் சார்ந்தான். அப்போது அந்நதியில் விளையாடிக் கொண்டிருந்த நாககன்னியர்கள் அரசகுமாரனைக் கண்டு ஆச்சரியங்கொண்டு, அவனை அணுகி உண்மை யுணர்ந்து அவனைத் தங்கள் அரசனாகிய தக்ஷகனிடம் கொண்டு போயினர். அந்நாகராஜன் இவனது வரலாறு முழுதும் கேட்டுணர்ந்து, மனமுவந்து, சித்திராங்கதனைப் பார்த்து, ‘மேன்மை தங்கிய ராஜகுமாரனே! இந்நாக



லோகமானது எல்லா வளங்களும் பொருந்தியது, மாணிக்கமயமானது; இங்குள்ள நீரெல்லாம் தேவருண்ணும் அமிர்த மயமாயிருக்கும்; சோலைகளெல்லாம் கற்பகச்சோலைகள்; இங்குளோர்க்கு நரைதிரை பொருந்தா; எமதூதர்களுக்கு இங்கு வேலையில்லை. ஆகையால் நீ இவ்விடத்திலேயே வாசமாயிருக்கலாம்’ என்று சொல்ல, ராஜகுமாரன் அதற்கிசையாதவனாய்த் தன் தேயத்திற்கே சென்று தன் சுற்றத்தாருடன் வாழவேண்டுமென்ற தன் விருப்பத்தைத் தெரிவித்து, அதற்குதவி புரியுமாறு வேண்டிக் கொண்டனன். நாகராஜனும் அதற்கிசைந்து, இராஜகுமாரனுக்கு அளவற்ற ஆடையாபரணங்களைப் பரிசாக அளித்து, அநேக வரங்களுந் தந்து ஒரு நாகர் தலைவனையும் அவனுக்குத் துணையாக அனுப்பினான். நாகர் தலைவன் இராஜகுமாரனைப் பாதுகாத்து யமுனா நதிக்கரையிற் கொணர்ந்தான். அங்கு நீராடும் பொருட்டுத் தன் தோழிமாருடன் வந்திருந்த சீமந்தினியைக் கண்டு, சித்திராங்கதன் தன் தோழர்களோடு யமுனா நதியில் இறந்தானென்று சுற்றத்தார் மிகவும் வருந்திச் செய்ய வேண்டிய உத்தர கிரியை முதலிய யாவும் செய்து முடித்ததையும், அதனால் சீமந்தினி மாங்கல்யந்தணந்து கைம்பெண்ணாயிருப்பதையும், தனது நிடத நாட்டைப் பகையரசர் கைப்பற்றித் தன் பெற்றோரைச் சிறைசெய்திருப்பதையும் கேட்டுணர்ந்து சித்திராங்கதன் அடங்காத்துயரத்தால் ஒளி இழந்து, தன்னை இன்னானென்றுணராதது சீமந்தினியைப் பார்த்து ‘பெண்ணரசே! நீ வருந்த வேண்டாம். இன்னும் சின்னாளில் உன் கணவனைப் பெறுவாய். அவன் இறந்தானல்லன்’ எனக் கூறித் தன் நாட்டை நோக்கிச் சென்றான். இவனது வரவைக் கேட்ட பகையரசர் இந்திரசேனனைச் சிறைவிடுத்துத் தத்தம் நாடு போய்ச் சேர்ந்தனர்.

சித்திராங்கதன் வந்து தன் தகப்பனாகிய இந்திரசேனன் பாதத்தில் வணங்கினவுடன், அவனை எடுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு, ‘என்னையனே! நம் குலம் விளக்க வந்த உன் மனைவியாகிய சீமந்தினி தவறாது விதிப்படி நோற்றுவரும் சோமவார விரதத்தின் பயனாகத்தான், ஆற்றில் விழுந்து இறந்த நீ பிழைத்து வந்தாய்’ என்று சொல்லி மகிழ்வெய்தினான். பின்னர் இராஜகுமாரன் தன் தாயின் பாதத்தை வணங்க, அவளும் துக்கசாகரத்தினின்று கரையேறி ஆனந்த சாகரத்தில் இறங்கி எழாதவண்ணம் மூழ்கினாள்.

யமுனையாற்றில் தெப்பங் கவிழ்ந்த பிறகு நடந்தவற்றை யெல்லாம் ஆதியோடந்தமாகச் சித்திராங்கதன் தன் இருமுதுகுரவர்க்கும் மற்றைய சுற்றத்தார்க்கும் சொல்லித் தக்ஷகன் பரிசாகக் கொடுத்த பொருள்களை யெல்லாம் பிதாவினிடம் கொடுக்க, அரசன் மகிழ்ந்து, அப்போதே தன் குமாரன் பிழைத்து வந்திருக்கும் சேதியைச் சித்திரவர்மனுக்குத் தெரிவித்தான். அது கேட்டுச் சித்திரவன்மனும் அவன் சுற்றத்தவரும் உடல் பூரித்துச் சீமந்தினி இடுக்கண்ணுற்ற காலத்தும் மனந்தளராது நோற்றுவரும் ஒப்புயர்வற்ற சோமவார விரதத்தின் பலன் அளவிடற்பாலதோ! என வியந்தனர். இதையுணர்ந்த சீமந்தினியின் முகம் அன்றலர்ந்த செந்தாமரை மலரை வென்றது.

சித்திரவன்மன் சீமந்தினியை அலங்காரஞ் செய்வித்து, நால்வகைச்சேனைகளும் புடைசூழ்ந்து வர நிடத நாட்டிற்கழைத்துச் சென்று மருமகனைக் கண்டு பேரானந்தமடைந்து, அவனுக்குத் தன் மகளாகிய சீமந்தினியை விதிப்படி மறுமணஞ் செய்வித்தான். சீமந்தினி சித்திராங்கதனோடு நெடுங்காலம் இன்புற்று வாழ்ந்து, பல புத்திரர்களைப் பெற்றுச் சிவபெருமானுக்குரிய சோமவார விரதத்தை வழக்கம் போல அநுஷ்டித்துச் சைவாகம முதலிய சாத்திரங்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த அறிஞர்களுக்கு வேண்டியவற்றை மனமுவந்துதவி வந்தனள்.

இவ்வாறு நடந்து வருநாளில் வைதர்ப்ப நாட்டில சகல சாத்திரங்களையும் கற்றுணர்ந்த சுமேதா, சாமவான் என்னும் இரண்டு பிராமணப் பிள்ளைகள், தங்கள் அரசனிடம் தாம் கற்றுள்ள கல்வித் திறத்தைக் காட்டி, அவன் பரிசிலாகத் தரும் திரவியத்தைக் கொண்டு மணஞ்செய்து கொண்டு இல்லற தர்மத்தை நடத்தலாமென்று உத்தேசித்து, அரசவைக்குச் சென்றனர். பழுதறக் கற்றுணர்ந்த இவர்கள் கல்வித் திறத்தைக் கண்டு அரசன் வியந்தானாயினும் இவர்களை நோக்கி, “கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக’ என்னும் இலக்கணத்திற்கு இலக்கியமாகி ஒழுக்கந் தவறாத வைதிக சிகாமணிகளே! நுங்கள் கருத்து முற்றுப்பெற வேண்டுவீராயின் யான் சொல்லுவதைக் கேளுங்கள். மிக்க வளப்பம் பொருந்திய நிடத நாட்டரசன் மனைவியாகிய

சீமந்தினிதேவி என்பவள் இளஞ்சந்திரனை யணிந்த சடாமகுடத்தையுடைய பரமசிவனைச் சோமவாரந்தோறும் தேவர்களும் ஆச்சரியமடையுமாறு அருச்சித்துப் பத்தினிமாருடன் வரும் பண்டிதர்களுக்கு வேண்டிய ஆபரணங்களும் திரவியமும் மிகுதியாக வழங்குகின்றனள். ஆதலால் உங்களிருவரில் ஒருவன் ஆண் மகனாகவும், மற்றொருவன் அவன் மனைவியாகவும் அலங்கரித்துக்கொண்டு சீமந்தினி யிடத்திற் சென்று அவள் கொடுக்கும் திரவியத்தைப் பெற்று நுங்கள் கருத்தை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்' என்றான்.

என்றலும், ஓதியுணர்ந்து பிறர்க் குரைக்கும் தன்மையராயிருந்தும், பொருளையே பிரதானமாகக் கொண்டபடியால், அவர்கள் இருவரும் அரசன் சொல்லியவாறே அலங்கரித்துக் கொண்டு, தத்தம் பத்தினிமாருடன் செல்லுகின்ற பண்டிதர்களோடு சீமந்தினி தேவியின் அரண்மனைக்குச் சென்றனர். இவ்வஞ்சகத்தை முகக் குறிப்பால் சீமந்தினிஅறிந்து கொண்டாளாயினும், எவ்வேடத்தினாலாவது சோமவாரத்தில் வந்தவர்களைப் பரமசிவனும் பார்வதியுமே எனப் பாவித்துப்பூசிக்கும் நியமமுடையாளாதலின், இவ்விருவரையும் அவ்வாறே பாவித்து வணங்கி மிகுந்த பொருள் கொடுத்தனுப்பினள். உடனே பெண் வேடந்தரித்தவன் பெண்ணிற்குரிய சகல அவயவங்களும் உண்மையாகவே அமையப் பெற்றுக் கட்டழகு வாய்ந்த ஒரு பெண்ணானான்.

இதை யறிந்த அவன் பிதா, சுற்றறி மூடனாகிய தன் ஏக புத்திரன், உண்மையடியாரிடத்துப் பொருளாசையால் உயிரினும் ஓம்பப்படுவதாகிய ஒழுக்கத்தைக் கைவிட்டு ஒழுகி அவன் பெண்ணானதன்றி, அவனால் மறுமையில் தான் நற்கதியடையலாமென்று எண்ணியிருந்த எண்ணத்தையும் பாழாக்கினமைக்கு மிகவும் வருந்தினான்.

பின்னர், 'சகல உயிர்களையும் படைத்து ஆக்கி அழிக்கவல்ல பரம்பொருளிடத்துச் செய்த அபசாரத்திற்குக் கழுவாய் உண்டெனினும், மாசற்ற மனதையுடையவரும் நிறைமொழி மாந்தருமாகிய அவரடிவர்க்குச் செய்த அபசாரத்திற்குக் கழுவாய் இல்லையென்பது உண்மையன்றோ? ஆகையால், மகாபதிவிரதையும், சிவபெருமானிடத்து உண்மை யடிமைத் திறம் பூண்டவளுமாகிய சீமந்தினி தேவியின் பாவனையை மாற்றவல்லவர் யாவருளர்? அவ்வம்மையாரது அநுக்கிரகத்தினாலேயே மறுமையில் எனக்கு நற்கதிதரத் தக்க ஒரு புத்திரனைப் பெறுவேன்' எனத் தீர்மானித்து, அவ்வம்மையாரை அணுகித் தன் குறை யிரந்து அநுக்கிரகம் பெற்று இஷ்டசித்தி யடைந்தான்.

இத்தகைய சோமவார விரதத்தை அநுஷ்டித்து இம்மை மறுமைப் பயன்களைப் பெற்றுய்ந்தோர் எண்ணிலராவர்.

**மா. அ. கனகசபை முதலியார்.**

# பொது விஷயங்கள்

## வாழ்க்கையின் நோக்கம்

"எப்பொரு ளெத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு—குறள்.

சாஸ்திர அறிஞர்களும், ஆராய்ச்சிக்காரர்களும், எம்மதத்தினரும், எத்தேயத்தினரும், கடவுளின் மேலான படைப்பு மனித வர்க்கம் என்பதை யேகோபித்துக் கூறுகின்றனர். "அரிது அரிது மானிடராதலரிது", "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிதுகாண், இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ யாது வருமோ அறிகிலேன்" என்று சொல்லிப் போந்தனர் பெரியோர். இவ்வுலகில் இவ்வளவு அரிதான மானிட சரீரத்தைப் பெற்று, மேலானதான பகுத்தறிவாகிய ஆறனறிவையும் கொண்டிருக்குங் காலத்து, நாம் வாழ்வில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயமென்னவென்றால், எவ்வாறு வாழவேண்டுமென்பதே. மனிதனுக்கு மிக அருமையானது அவன் வாழ்வே. அதைப்பற்றி அவன் சிறிதேனும் சிந்தை செய்வதில்லை. அவ்வளவு மேம்பாடான வாழ்வைச் செம்மையான முறையில் கடத்த முயலுதலே மக்களுக் கழகு.

ஆனால், இது ஒரு இலகுவான காரியமன்று. ஏனெனின், நமது வாழ்நாள் மிகவும் குறுகியது. கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு.



சந்தர்ப்பங்கள் காற்றினும் கடுகி ஓடிக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் ஆய்ந்தோய்ந்து செய்வது என்று நினைக்கின் முடியாத காரியமாய் விடுகின்றது. முடிவான அபிப்பிராயங்கள் கூறுவது மிகவுங் கஷ்டமாயிருக்கின்றது.

வாழ்க்கையில் இன்பமும், ஜயமும், துன்பமும் நம் சந்தர்ப்பங்களைப் பொருத்தனவல்ல. ஆனால், நாமே காரண கர்த்தாவாயிருந்து அவைகளை இயக்கிக் கொண்டிருக்கின்றோம். பிறரால் கெட்டழிந்த மனிதரினும், தம்மால் தாமே அழிந்த மக்களின் தொகை அதிகம். பூமி அதிர்ச்சியாலும் புயற்காற்றாலும் சேதப்பட்ட வீடுகளையும் நகரங்களையும்விட, மனிதனது க்ஷாத்திரத்தால் அழிந்த இல்லங்களும் பட்டணங்களும் பல.

நாசம் அல்லது அழிவு இரண்டு வகையில் ஏற்படும். முதலாவது எப்போதும் யாவருடைய நன்மையாவது கொடுமையாவது கவனியாது சுழன்றுகொண்டிருக்கும் காலச் சக்கரத்தாலாகும். இரண்டாவது, ஜீவப் பிராணிகளிலெல்லாம் மேலானவனும், சாமர்த்தியம் வாய்ந்தவனுமான மனிதனால் ஏற்படும்.

எல்லாவிதச் சிதைவிலும் மனிதன் கெடுவது மிகவும் பரிதாபகரமானது. "மனிதனது கொடிய விரோதி அவன் மனத்தில் இருக்கின்றான்" எனச் செனேகா (Seneca) கூறுவர். கடவுள் அல்லது பரமபிதா எப்போதும் மாசற்றவைகளையே படைக்கின்றார். அவர் படைத்தவைகளுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கின்றார். அந்தச் சுதந்திரத்தைத் தப்பான வழியில் உபயோகிக்கின் துன்பம் நேர்வது திண்ணம். அவ்வாறு நாம் கெடுதியை விளைவித்துக் கொள்வது நமது குற்றமே அன்றி வேறல்ல. சிலர் தங்கள் வாழ்நாளில் பெரும் பாகத்தைப் பிறருக்கு இன்னலிழைப்பதிலேயே கழிக்கின்றனர். இது பெரும்பான்மை பேராசையாலும் பிற துர் எண்ணங்களாலும் நிகழ்கின்றது. அந்திக் காலத்தில் அவர் கடந்துபோன விஷயங்களைக் குறித்து மனம் வாடி வருந்துவர். அவர்கள் அப்போது செய்த தீங்குகளுக்கு நிவாரணம் செய்வது என்ற எண்ணம், நெய்த வேஷ்டியை மறுபடியும் பிரித்து நூலாக்குவோம் என்ற நினைவு போன்றது. சிறுபோதில் கெட்ட பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொடிய சான்றோர்வெறுக்கும் காரியம் பல மிகவும் இலகுவாகவும் சந்தோஷத்தோடும் செய்து, பின்னர் பிற்பகல் அவை தங்களையே அழித்துவிடும்போ லிருத்தலையுங் கண்டு மனம் மாழ்குகின்றனர்.

மக்கள் உலகில் எல்லாவற்றிலும் தங்களையே அதிக பிரியத்தோடு நேசிக்கின்றனர். உலகில் நிகழும் பல பாபகிருத்யங்களும் சுயநலப் பிரியத்தாலேயே செய்யப்படுகின்றன. தங்களை நேசித்தல் ஆத்ம விசாரணை ஞானத்தாலல்ல, ஆனால் அறிவீனத்தால் ஏற்படுகின்றது. நமது வாழ்க்கையை ஒரு வாழ்நரகாக்கிக்கொள்ள நமக்கு ஒருவரும் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை. அது வெகு சுலபமான காரியம். "சுயநலம் பாராட்டு, வெகு சீக்கிரம் கோபமடை; உன்னைப் பற்றிப் பெருமையாய் நினைத்துக்கொள்; பிறரை எளிதாகக் கருது, டாம்பீகமாயிரு; கடன் நிரம்ப வாங்கு; அளவுக்கு மீறி குடி, சாப்பிடு; நல்லகாற்று உட்கொள்ளாதே, வேலையாவது தேகாப்பியாசமாவது செய்யாதிரு"—இவை போன்ற புத்திமதிகள் ஒருவனை ஒரு வாழ்நரகாக்கித் தீராத் துன்பத்தி லாழ்த்தும் என்பதிலையமில்லை. மேற்கூறப்பட்டவையின் எதிர்மறைகளைக் கொண்ட வாழ்க்கைஇன்பகரமானதாக இயலும்.

உலகில் அவ்வாறான இன்பம் சதா குடிகொண்டிருக்கின்றது என்றாவது, அல்லது இந்த வாழ்வு கஷ்டநஷ்டங்களைக்கொண்டதல்ல, மனிதர் எப்போதும் சுகவாசிகள் என்றாவது கூற நாம் முன்வரவில்லை. ஆனால் சுகமாயிருத்தல் கூடும் என்பதை விளக்கவே இந்த வியாசத்தை எழுதுகின்றோம். மக்கள் இன்பத்தை அனுபவிக்காவிடின் அது அவர்களுடைய குற்றமென்பது வெள்ளிடை மலை.

வாழ்க்கை ஒரு மெல்லிய நறு மலர்ப் பஞ்சணையன்று; அல்லது அது வொரு யுத்தகளமுமன்று. சிலர் தம் வாணாளை எட்டாப் பழத்திற்குக் கொட்டாவிவிட்டும், வாராததை வாவென்று வருந்தியழைத்தும், வந்ததைப் போவென்று நொந்தும், தங்களால் ஆகாதன பல பேசியும் வீணாகக் கழிக்கின்றனர். பல தடவைகளிலும் தவறாகச் செய்த நன்மையும், அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சாகும் என்பதற்கிணங்க, அளவுக்கு மிஞ்சின நன்மையும் தீமையாய் விளைகின்றதைப் படித்தும், கேட்டும், பார்த்துமிருக்கின்றோம். எந்தவிதமான கருவியும் (அல்லது வஸ்துவும்) அதற்குத் தகுதியான இடத்திலிருக்கவேண்டிய மாதிரி இருந்தால்தான் அது சோபிக்கும். உபயோகமாகும் ஒரு பெரிய இயந்திரத்தின் சக்கரம் அது இருக்

வேண்டி ஏற்பட்டுள்ள இடத்திலிருப்பின் இயந்திரத்தை ஓடச்செய்து உபயோகமாகின்றது. ஆனால் அது இடம் மாறின், இயந்திரத்தின் பல வேறு பாகங்கள் தொடர்பு விடப்பட்டு ஒன்றன்மேல் மற்றொன்று மோதிச் சின்னபின்னப்பட்டுப் போகும்—வேலைசெய்ய முடியாது—பக்கத்திலிருக்கும் ஆட்கள் உயிருக்கு ஹானியை உண்டாக்கும்—ஏற்படும், சேதங்கள் எவ்வளவு என்று பாருங்கள்! நாமும் அம்மாதிரியே இயற்கையின் சாந்தியைக் கலைத்தால் அதன் பயனை அடைவோம். அதிகப்பட்ட வீரம் முரட்டுத் துணிவையும், அதிகப்பட்ட அன்பு மெலிவையும், அதிகமான சிக்கனம் பேராசையையும் லோபகுணத்தையும் காட்டும். ஆதலின் இயற்கையான சட்டத்தை உணர்ந்து அதன்படி ஒழுகில் துன்பம் பல தீர்ந்து இன்பம் குடிகொள்ளும்.

பாரசீக தேயத்தினர் தங்கள் ஆனந்தத்திற்கு ஆர்முஷ்த் என்னும் தேவன் காரண கர்த்தாவென்றும், துன்பத்திற்கு அஹிரிமான் இயற்றலைவன் என்றும் கூறுவர். ஆனால் உண்மையில் நமக்கு நாமே இன்பத்தையும் துன்பத்தையும் தேடிக்கொள்ளுகின்றோம். அவை இரண்டு வகையில் தெரிந்தும் தெரியாமலும் செய்யப்படுகின்றன. தெரிந்து செய்யும் குற்றங்களை நம் கண்களைத் திறந்துகொண்டே செய்கின்றோம். இதை நம் மனோ ஆன்ம பலத்தால் வென்று தவிர்க்கவேண்டும். குற்றம் நமக்குப் புலப்படாது நிகழின் பாபமன்று. ஆனால் இந்த இரண்டாவதான இழுக்கை நீக்குவதற்கு இது நல்லது, இது கெட்டது, இது சத்து, இது அசத்து என்று பகுத்தறியும் அறிவினைக் கடைப்பிடித்தும், மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்று பெரியோருடைய புத்திமதிகளை அநுசரித்தும், உடுக்கை யிழந்தவன் கை போல் ஆங்கே இடுக்கண் களையும் நண்பராது நல்லுரை சேட்டும், நம் கல்வி கேள்வி யறிவு முதலியவைகளால் சீர்தூக்கி ஒழுகலே உத்தமம்.

நமது கல்வி நம்மில் ஒரு பாகம் என்பது உண்மை. நாம் கற்பிக்கவும் படிப்பிக்கவும் வேண்டிய சீடன் ஒருவன் நம்மிலிருக்கின்றான் என்பதை மறக்கக்கூடாது. பிறரிடத்திலிருந்து நாம் அறிந்து கொள்வதைக் காட்டிலும் நாமாக உய்த்து உணர்ந்துகொள்ளும் விஷயங்கள் நம் மறிவை விகசிக்கச் செய்கின்றன. கல்லூரியை விட்டவுடனே படிப்பு முடிவதில்லை அப்போதுதான் ஆரம்பமாகின்றது எனக் கூறினும் தகும். கல்வி, யாத்திரை செய்துகொண்டிருக்கும் ஜீவனை எப்போதும் பிரியாது தொடரும் நட்பாளன் எனச் சொல்லின் மிகையன்று. மனிதர் தேகசுகம் பெறுமாட்டுச் செய்யும் உழைப்பில் ஒரு பகுதி மனத்தை விகசிக்கச் செய்யின் எவ்வளவு மேன்மை அடைவர்.

சிலர் விதியை நம்புகின்றனர். அவர்களின் அபிப்பிராயம், உலகில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரியமும் முன்னால் விதித்தபடியே நடக்கின்றது ; ஆகவேண்டியது ஆய்த்தீரும் ; நம்முடைய முயற்சியும், செயல்களும் ஒருவித மாறுதலையும் உண்டாக்கா; எல்லாம் விதித்தபடியே நடக்கும்; மனிதன் ஒரு பெரும் சக்தியால் ஆட்டப்படும் பொம்மை என்பன. முதலாவது நாம் ஆராயவேண்டியது, நமது வாழ்வைப்பற்றி ஏதாவது ஒரு தத்துவம் உண்டோ என்பதே. காலம் என்றபெரும் வாரிதியை வாழ்க்கை என்னும் தெப்பம் கொண்டு கடக்க முடியுமோ ? அல்லது வெள்ளத்தால் அடிபட்டுச் சுழலில் அகப்பட்டுத் தத்தளிக்கும் குப்பை கூளங்களன்ன, என்றும் நீங்காத துன்பசாகரத்தில் ஆழ்வோமா ? இதன் விடை மிகவும் தெளிவானது:‘ ஆண்மையுடையவன் மனிதன் ; அவனே. அவன் விதிக்குக் கர்த்தா.’ அவ்வாறல்லாவிடின் இழுக்கு அவனிடமே யிருக்கின்றது. அவன் தன் வாழ்க்கையை வாகைமிலைந்து நால்வர் மெச்ச ஊர்வலம் வருமாறாவது, நகர் சிரிக்கத் தன் வாழ்வை நகைபிழை நாடகமாகச் செய்து நடைப்பிணம் போலத் திரியவாவது செய்யலாம். எல்லாம் அவன் காரியமே. “நீ ஏதாயிருக்கப் பிரியப்படுகின்றாயோ அதுவே நீ”. ஏனெனில், நம்மனத்தின் சக்தி அவ்வளவு வல்லமை அமைந்தது. எம்பெருமானை வழிபட்டு நாம் ஹிருதய சக்தியால் மனத்தை ஒரு முனை அடக்கி ஒன்றை நினைக்கின் அது அவ்வாறு சமையும் என்பதில் ஐயமில்லை. மேலும் மனோசாட்சியாகிய காவலன், நாமிது செயல்வேண்டும் ; இது நன்மை பயக்குந் தன்மையது ; இவை யியற்றின் ஜயமடைவோம்; இது பாபம்; இது செய்தல் கூடாது என அல்லும் பகலும் அறுபது நாழியும் இடைவிடாது கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருக்கின்றான். மனோசாட்சி எப்போதும் உண்மையையன்றிப் பிறிதொன்றையும் நாடாது. அவ்வாறாயின் நாம் விதி என்ற கற்பித நோயை எளிதில் வெல்லக்கூடிய மனோசக்தி என்னும் மருந்தை நம்மிடத்தே வைத்துள்ளோம்.



இவ்வாறு நாம் மனோதிடத்தின் பலனை அறிந்த பின்னர் நமது வாழ்வை எவ்வாறு மேன்மையாகவும் இன்பமானதாகவும் செய்தலியலும் என்பதைப் பற்றிச் சிறிது ஆலோசிப்போம். சிலர் வாழ்வில் பலவித நோக்கங்களைக் கொண்டு அதை முடிக்க முயல்கின்றனர். மற்றும் சிலர் வாழ்வினைப் பற்றி எவ்விதமான எண்ணத்தையும் கொண்டிலர். நமது முதல் நோக்கம் நம் வாழ்வினை எவ்விதம் மேலானதாக்க முடியுமென்பதே. தேகம் மனம் ஆன்மா என்ற மூன்றிலும் ஒருங்கே நின்மலனாயிருத்தல் மேன்மையானது. அவை எளிதில் அடையற்பாலனவல்ல. நாம் முறையே தேகத்திலும் மனத்திலும் ஏற்படும் மாசுகளை நீக்கி, உண்மையானதான ஆத்மஸ்வரூபத்தை அறிந்து, பரம்பொருளின் பதத்தினைச் சார்ந்து பரிபூர்ணத்தை அடைதல்வேண்டும். இவ்வாறு நாம் பூர்ணத்தன்மை யெய்தச் செய்யும் காரியங்கள் தன்னலம் நீங்கிப் பொதுநல நோக்குவனவாயிருத்தல் இன்றியமையாதது. அதைத் தவிர்த்து அகமேலீட்டில் செய்யின் தொய்யலிற்கும் துன்பத்திற்கும் ஆளாவோம். இதை நன்குணர்ந்த நம்மூதாதையோர் “பரோபகாரார்த்தம் ஹிதம் சரீரம்’ என்பதையே தங்கள் போதகவசனமாகக் கொண்டனர். தனக்கென வாழாது பிறர்க்கு வாழ்ந்த புண்ணிய புருடர் நந்தாய் நாட்டில் எண்ணிக்கைக் கடங்காத பேரிருந்தனர் ; இருக்கின்றனர். பண்டை நாள் அசுரருடன் பொருத சுரர் தலைவன் இந்திரன் வச்சிராயுதம் வேண்டிநின்ற காலை, தன்னுயிரையும் பாராது பிறர்க்குதவி செய்வான் தன் முதுகென்பை யீந்த ததீசியின் பெருமை யறியாதார் யாரேயுளர் ? நீதிநசித்து அநீதி பெருகிய காலத்துத் தோன்றின புத்தர், கிருஷ்ணன், சங்கரர், இயேசு நாதர், முகம்மது முதலிய மகாத்மாக்களின் சரித்திரங்களை வாசிக்கின், அவர்கள் எவ்வாறு உலகில் சாந்தம், நீதி, சுகம் ஒருங்கே குடியிருக்கும்படி தங்கள் உயிரை இலக்ஷியம் செய்யாது ஈந்தனர் என்பது நன்கு விளங்கும். மற்றொரு பான்மையோர் பிலேடன், அரிஸ்தாதிலன், சாக்ரடீஸ் தங்கள் வாணாளின் உண்மையைக் கண்டு பிறர்க்குப் போதிப்பதிலேயே கழித்தனர். உயிரைத் திரணமாக மதித்த கொடை வள்ளல்கள் சிபி, கர்னன் முதலியவர்களின் பெருமைகூறின் விரியும். சுருங்கச் சொல்லின், அவர் தங் குறைதீர்வெண்ணார் தளர்ந்து பிறர்க்குறும் துயரம் தீர்ப்பார். மேலும், மண்டு பிணியால் வருந்தும் பிறவுருப்பைக் கண்டு கலுழும் கண் போன்று, பிறர் துயரம் நோக்குழி எரியினிழுதாவர். அவர்கள் பரஸ்பரத்தின் தத்துவத்தை நன்குணர்ந்தவர்.

மேற் கூறப்பட்டவைகளிலிருந்து பெரியோர் தமக்கென வாழ்வதில்லை, பிறருக்குத் தங்களாலியன்ற உதவி யியற்றுவர் என்பது தெரிகிறது. அவ்வாறு பிறருக்குதவி செய்யவாவது, அல்லது சந்தோஷத்தை உண்டாக்கவாவது நமது தேகத்தையும் மற்ற கரணங்களையும் சுகமே வைத்திருத்தல் அவசியமாகின்றது.

நம்முடைய ஜீவியத்தில் எவ்வளவோ விஷயங்கள் நடக்கும்போது செவ்வனே புலப்படுவதில்லை. அவ்விஷயங்களை ஆய்ந்து உணரப் பல நாட்கள் செல்லுகின்றன. அம்மாதிரி உண்மையை உணராதிருப்பதால் அநேக கடமை முரண்கள் ஏற்படுகின்றன. நம்முடைய ஜீவிய சரித்திரத்தை எழுதிவைத்து முப்பது வருடங்கள் கழிந்தபின் படிப்பின் அது ஒரு சுவை ததும்பிய கற்பித காவியம்போலிருக்கும் என்று பிரௌன் துரை கூறுகின்றனர். அது வெகு உண்மையானதே. பல காலும் புத்திமதி கூறும் பெரியோர்களை மதி கேடரான மனிதர் இகழ்தலைக் காண்கின்றோம். சிலையில் ஏசுநாதரை அறைந்ததும், சாம்பலால் முஹம்மதை அடித்ததும் ஒரு விந்தையல்ல. அவர்கள் கூறின உண்மைகளை உய்த்துணர்ந்து ஆனந்திக்கப் பல நூற்றாண்டுகள் ஆயின. சமாதானமும் சுக வாழ்வும் நம்மைச் சிறப்பிக்க வேண்டுமானால், கழிந்தவைதானிரங்கும் கயவர் போலில்லாதிருக்க வேண்டுமானால், ஒவ்வொரு விஷயத்திலும் முன் புத்தியும் ஜாக்கிரதையும் கொண்டு தக்க சமயத்தைக் கைவிடாது இருத்தல்வேண்டும். மற்றும்,

**‘நண்ணிய கருமமும் எண்ணித் துணிக—துணிந்தபின் எண்ணுவமென்பதிழுக்கு.’**

யாவரும் விசனிக்கத்தக்க விஷயம் ஒன்றுண்டு. மனிதன் வீணில் எவ்வளவு அருமையான சந்தர்ப்பங்களை இழக்கின்றான். அவ்வச் சமயங்களில் செய்வன செய்யின் எவ்வளவு ஆனந்தம் நிரந்தரமாகக் குடிகொள்ளும். காற்றுள்ளபோது தூற்றிக்கொள்ளல் நலமல்லவா ! வீணில் ஏற்ற காலத்தை விடுவரோ தக்கோர் ?

(தொடரும்.)

E. V. சிங்காரவேல் முதலியார்,
ஈரோட்டு.

## கல்வி

(பங்குனி௴ ௧௫ பக்கத் தொடர்ச்சி)

உலகில் எண்ணிறந்து கிடக்கும் மொழிகள் உள. அவை அவற்றை ஆளும் மக்களின் இயற்கையையும் செயற்கையையும் பொருந்தி இருக்கின்றன. அம்மொழிகள் பலவற்றையும் ஒருவன் கற்பது அருமை. ஆனால், அங்ஙனங் கற்றவனே உலகரங்கில் நடித்துப் புகழ் பெறுவான். பல்வேறு நாட்டின் மக்களும் பல்வேறு வழியாகிய தம் மொழிகளிற் பல்வேறு வகையான பயன் பெறத்தக்க நூல்களை இயற்றியுள்ளார்கள். ஆகையால், பல மொழிகளைக் கற்றவனே பண்டிதனாவான். "கண்டது கற்றவன் பண்டிதனாவான்" என்பது இது பற்றி யெழுந்ததே. அங்ஙனங் கற்கத் தொடங்கியவன் முதன் முதல் எம்மொழியைக் கற்பது என்னும் ஐயம் உண்டாகலாம். ஒரே முறையிற் பல மொழிகளையுங் கற்க முயலுவது முடியாத விஷயம். அங்ஙனம் கற்றாலும் கற்றதின் பயனையடைய இயலாது. தற்காலத்திய படிப்பின் முறை, பலமொழிகளில் இல்லாவிட்டாலும், பலவகையாக விருப்பதால் பயனற்றதாகவே யிருக்கிறதென்று நினைக்கிறேன். இதனைப் பற்றிப் பின்னொருவிடத்தில் நன்கு எழுதுவேன். ஆகவே ஒருவன் எதாவது ஒருமொழியிற் புலமை நிரம்பப் பெற்ற பிறகு, பலமொழிகளையும் கற்பான்புகுந்தால் மொழியழகை நன்கு உணர்ந்து விரைவிற் கற்கப் பெறுவான். ஆகையால் முதன் முதல் ஒருவன் நன்கு கற்க வேண்டுவது தாய்மொழியேயாம். தாய் மொழியே விரைவில் கற்க இயன்றிருப்பது.

தாய் மொழியாவது குழந்தைக்குத் தாயால் புகட்டப்படும் மொழி. அம்மொழியே தாயூட்டிய பாலுடன் கலந்து இயன்று பழகியது. எந்நாட்டினர்க்கும் அவரவர்களின் தாய்மொழியே நன் மொழியாம். நமது தமிழ் நாட்டினர் தம்மக்களுக்கு இவ்விஷயத்தில் மிகத் தவறு செய்கின்றனர். தமது மொழியாகிய தமிழ் மொழியை நன்றாக எழுத்துக்கூட்டியாவது வாசிக்க இயலா நிலைமையிலேயே ஆங்கில மொழியைக் கற்பிக்க விழைகின்றனர். இளமையிலேயே ஆங்கிலங் கற்பித்தால் தான் ஆங்கிலம் நன்கு பயில முடியுமென்பது இவர் தங்கொள்கை போலும். தற்காலத்து அரசாங்க மொழியாக ஆங்கிலம் இருப்பதால் கல்விக் கூடங்களில் ஆங்கிலமே பெரிதும் உயர்த்தப்பட்டு வருகின்றபடியாலும், இளமையில் தம் தாய் மொழியை வாசிக்க இயலா நிலைமையிலேயே ஆங்கிலம் பயிலத் தொடங்குவதாலும், தாய் மொழியை வாசிக்க இயலா நிலைமையிலேயே ஆங்கிலம் பயிலத் தொடங்குவதாலும், மாணவர்கட்கு ஆங்கிலத்தில் விழைவும் தாய் மொழியில் வெறுப்பும் உண்டாக ஏதுவாகிறது. இக்காரணத்தால் மாணவர்கட்குத் தங் கல்வியின் உன்னத நிலையில் ஆங்கிலம் சிறந்ததாகவும் தாய்மொழி தாழ்ந்து வெறுப்பைத் தரத்தக்கதாகவும் காணப்பட்டுத் தாய் மொழியிற் பேசுவதற்கே இயலா நிலைமையிற் கொண்டு வந்து விட்டுவிடுகின்றது. ஈதொரு சீர்கேடான நிலையன்றோ?

ஒவ்வொருவரும் தம்தம் பிறந்த நாட்டின் வளத்தையே பெரிதும் விழையவேண்டும்; அதனை எவ்விதத்திலும் எல்லா நாட்டினும் உயர்ந்ததாக்கக் கருதல் வேண்டும். எந்நாடும் பெரிதும் நாகரீக மடைவதற்கு ஏதுவானவற்றுள் அந்நாட்டின் மொழியின் வளனும் ஒன்றே. மொழி வளனில்லாவிட்டால் வேறு எவ்வளவிருப்பினும் அறிவுமிக்க நாடாகக் கருத இயலாது. இங்ஙனமிருக்க நந்தமிழ் நாட்டில் வாழ்கின்ற தமிழ்மக்கள் தம்மொழியான தமிழ் மொழியை, பெரிதும் நாகரீகமடைந்து தொன்று தொட்டு வழங்கிவந்த மொழிகளில் ஒன்றாகிய தமிழ் மொழியை—இவ்வாறு புறக்கணித்தல் அழகாகுமோ? நம் புதல்வர்களுக்குத் தமிழ் மொழியை வாசிக்க இயலா நிலைமையிலேயே, எழுத்துக்களின் பழக்கம் உண்டாகும்போதே, ஆங்கில மயக்கிற் புகுத்திவிடுகின்ற நம் தமிழ் மக்கள் இவ்வாறு நம் தமிழ்மொழி புறக்கணிக்கப்படும் என்ற எண்ணத்தைக் கொள்ளாதது பெரு வியப்பேயாம். எத்தனையோ ஆங்கில பெரிய பட்டாதாரிகள் உண்ண உணவுக்கும் உடுக்க உடைக்குங்கூடத் தகுந்த உத்தியோகம் கிடைக்கா நிலைமையிலும், வேறு எவ்வித தொழிலும் செய்ய இயலா நிலைமையிலும் இருந்து கஷ்டப்படுகிற இக்காலத்திலும், ஆங்கிலம் படித்தால் உத்தியோகம் கிடைக்கும் என்ற எண்ணம் தமிழர்களுக்கு இருக்கலாமா? தமிழர்களுக்குத் தம்மொழிப் பயிற்சியில் ஊக்கம் உண்டாகத் தமிழணங்கு திருவருள் புரிவாளாக.

தற்காலத்தில் உயர்தர கல்விக் கழகங்களில் பலவிதமான பாடங்கள் பலவிதமான முறையில் போதிக்கப்படுகின்றன. இம்முறையாகப் 



போதித்தால் எல்லாவிதமான விஷயங்களும் கற்க ஏதுவாயினும், ஒன்றையாயினும் முற்ற உணர்தற்கில்லை. மொழிப் பயிற்சியில் மாணவர்கட்கு நல்ல ஊக்கம் உண்டானபிறகு, பூகோளம், சரித்திரம், பிரகிருதி முதலானவைகள் போதிக்கப்பட்டால் மொழியறிவோடு பொது அறிவுந் துலக்கமுறும். தாம் கற்பவை யின்னவை யென்றறியாத பருவத்திலேயே, மேற்கண்ட பாடங்கள் போதிக்கப்படுவதால், அவற்றில் சரியான ஊக்கம் மாணவர்கட்கு உண்டாவதில்லை. பொது அறிவு மாணவர்கட்கு அவசியமாயினும், அவற்றைவிடச் சிறப்பாக மொழியறிவு வேண்டுவது அவசியமாகும்.

ஆரம்ப கல்விச் சாலைகளில் உள்ள உபாத்தியாயர்களே கல்வி என்னும் கட்டடத்திற்கு அடிப்படை போடுகின்றவர்களாகையால், அவர்கள் மாணவர்களைப் பெரிதும் கல்வியில் ஊக்குவிக்கவேண்டும். ஆசிரியர்கள் தமது தொழிலை வரும்படித் தொழிலாகக் கருதாது கொடைத் தொழிலாகக் கருதவேண்டும். மாணவர்களை உலகை ஒளிர்விக்கும் உயர்தர மணிகளாக ஆக்கல் ஆசிரியரின் கடன் தாம் மாணவர்களுக்கு உதவும் நிதி என்றும் அழியாததாய் உயிருடன் கலந்து உணர்வு செய்து பெரும்பேறளிக்கவல்லதென்பதை ஆசிரியர்கள் நன்கு உணரவேண்டும்.

சிறு குழவிப் பருவத்துள்ள மாணவர்களே தாம் கற்பது தமக்குப் பெரும் பயனளிக்கும் என்பதை உணராதவர்கள் என்று தற்காலத்தில் நினைத்தற்கில்லை. கல்வியின் பயனை உணரத் தக்க வயதுவந்த மாணவர்களும் தம் முயற்சியின் பலனை யுணராமல், வகுப்புக்களில் அசிரத்தை காட்டுகிறார்கள். அதுமட்டோ, ஆசிரியர்களின் மனம் புண்படும்படியுஞ் செய்துவிடுகிறார்கள். தற்காலத்தில் மாணவர்களின் ஊக்கம் இம்முறையில் இருப்பதினாலேயே கல்வி உன்னத நிலையில் வர ஏதுவில்லாமல் இருக்கிறது. ஊக்கத்துடன் கற்கும் மாணவர்களில் உன்னத நிலையில் இராதவர்களில்லை. ஆசிரியர்களும் மாணவர்களும் கல்வியில் ஊக்கமுடையவர்களாக இருப்பின், வெகு விரைவிற் கல்விவளன் நம் நாட்டிற் பெருகும்.

தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் தமிழை வளர்க்கும் முயற்சியிற் பெரிதும் முயலவேண்டும். தற்காலத்தில் இம்முயற்சி சில அறிவாளிகளிடத்தில் உண்டாகி வளர்ந்து பயன்றருவது தமிழ்நாடு செய்த பெரும்பேறே. தமிழ் நாட்டினர்க்குத் தமிழ் மொழியே தனியுயர் மொழியாகவும், ஆங்கிலமாதிய பிறமொழிகள் உபமொழிகளாகவும் இருக்கிறபடியால் நமது தமிழ் நாட்டினர் பெரிதும் விழைந்து கற்கவேண்டுவது தமிழ்மொழியேயன்றோ? ஆதலின் தமிழ்மொழியானது யாவரும் விழைந்து கற்க வேண்டிய நிலையில் இருக்கவேண்டுவது அவசியமாகிறது.

தமிழ் மொழியிலுள்ள நூல்கள் பெரும்பாலும் நீதி நூல்களாகவும் சரித்திரங்களாகவும் இருக்கிறபடியால் அவையும் நன்கு தமிழில் அறிவுமிக்கவருக்கேயன்றிப் பிறர்க்குக் கற்க இயலா நிலையில் இருக்கிறபடியாலும், செய்யுள் நடையிலேயே யிருப்பதாலும், ஆங்கிலம் போன்று இது உலக அறிவையுணரும் முறையில் இல்லையென்பது உண்மையே. இக்குறையையேயுன்னி ஆங்கிலத்தையே விரும்பும் தமிழ்மக்கள், ஆங்கிலம் பலதுறைப் படிப்பினையுந் தரு நிலையில், எவ்வளவு காலத்திற்குள், எவ்விதமாக மேம்பட்டது என்பதைச் சற்று உணரவேண்டுமன்றோ? ஆங்கிலமக்கள் தம் மொழி வளர்ச்சியடையும்படி முயன்று, பல மொழிகளிலும் உள்ள நூல்களை மொழி பெயர்த்துத் தம் மொழியில் ஆக்கியும், தத்தம் பெருமுயற்சி கொண்டுமன்றோ நூல்களை அதிகப் படுத்தினர். அங்ஙனமாக நாமும் நமது மொழி வளர்ச்சியடையும்படிப் பல துறைப் படிப்பினைத் தரும் நூல்களை நமது மொழியில் வளர்க்கவேண்டும்; பல மொழிகளினின்றும் மொழி பெயர்த்தல் வேண்டும். அங்ஙனம் மொழி பெயர்க்க வேண்டுமானால் ஆங்கிலமாதிய பிறமொழிகளையும் நமது தமிழ்மொழியையும் நன்கு கற்ற அறிவாளிகளாலேயே நடைபெறவேண்டும். ஆங்கிலமட்டுமே கற்றுள்ளவர்களும், தமிழ்மட்டுமே கற்றுள்ளவர்களும் இப்பணியைத் தமிழ்நாட்டுக்கியற்ற வலியில்லாதவரே யாவர்; இவ்விருவருங் கூடியுழைப்பினும் அவ்வளவு சிறந்த தொண்டு இயற்ற இயலார்.

ஆகவே, நமது தமிழ்நாட்டு மாணவர்களே இத்தொண்டை இயற்ற வலியுள்ளவராவர். ஆகையால் இவர்கள் தமிழைப் புறக்கணியாமல் நன்குகற்றுத் தாங் கற்கும் ஆங்கிலத்திலுள்ள நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து உலகுக்கு ஊட்டவேண்டும். ஆரம்பத்தில் இம்முயற்சி கடினமாயினும் நாளடைவில் எளிதாகவும் மிகச் சிறந்ததாகவும் இருக்குமென்பது யாவரும் மறுக்க வியலாதது. இதற்கு ஆங்கி

லத்திலுள்ள சில பெயர்ச்சொற்கள் தமிழில் இல்லையேயென்று கவலல் வேண்டா. அவ்வாங்கிலச் சொற்களை அப்படியே தமிழில் எடுத்தாளலாம். அல்லது தாமே அதற்குத் தக்க பெயர்களைப் புனைந்துகொள்ளலாம். அவ்விதமே செய்தாகவேண்டுமென்பது அறிவாளிகளின் கொள்கை.

இவ்விதம் புரியின் கால வரையறையின்றித் தொன்றுதொட்டு வழங்கி நாகரிகத்தில் மிகச் சிறந்துள்ள நமது தமிழ்மொழி, "ஆங்கிலம் போன்று தமிழில் பொது அறிவைப் பயக்கும் நூல்களில்லை" என்னுங் குறை நீங்கித் தன்பாலுள்ள நீதி நூல்களோடும், சமய நூல்களோடும், எம்மொழியிலும் இல்லாச் சிறப்புற்ற பொருணூல்களோடும் ஒளிர்ந்து கற்பார்க்குப் பெரிதும் விழைவுற்றுப் பயன்றருமென்பதிலையமில்லை. இம்முயற்சிக்கு எல்லாம் வல்ல கடவுளின் பேரருள் பெருகுக.

ஜ. இராஜூ முதலியார்,
தமிழாசிரியர், பூவிருந்தவல்லி.

## ஒழுக்கமுங் கல்வியு மோரிரு கண்கள்.

செங்குந்த நேயரோநாம் சீர்மைபெற வேண்டுமெனிற்
பொங்கும் புகழொழுக்கம்பொற்பமைந்தே—எங்குஞ்
சிறக்கச்செய் கல்வியிவை தீவிரமாய் நம்முட்
பரக்கச்செய் திடனல்ல பண்பு.

சிவநேயச் செங்குந்த சீரியரே !

ஆர்கலி சூழ்ந்த நீர்மலி யுலகினுள் எத்தேயத்திலும் எவ்வூரிலும் பெருமை வேண்டாதார் ஒருவருமில்லை. ஏன் ?

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

ஆயின் "எனக்குப் பெருமை வேண்டும், என்னை யாவரும் புகழவேண்டு" மென வாசா கைங்கரியம் செய்துகொண்டிருந்தால் பெருமையும் புகழும் பெறுத லெங்ஙனம் ? மற்றெதனாற் பெறலாமெனின் ஒழுக்கத்தாலும் கல்வியாலுமேயாம். "ஒழுக்கம் விழுப்பந்தரலான் ஒழுக்க முயிரினு மோம்பப்படும்."

ஒழுக்கமுடைமை குடிமையிழுக்க
மிழிந்த பிறப்பாய்விடும்."

"ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப்பழி."

என்பனவற்றால் நல்வினைக்கும் தீவினைக்கும் காரணமாய் நின்று இன்பதுன்பங்களை வருவித்துக்கொள்ளு முயிரைவிட, இன்பத்தை யுண்டாக்குவதற்கே காரணமாயிருக்கின்ற ஒழுக்கமே சிறந்ததென்பதும், இழிந்த குலத்தானே யாயினும் அவன் ஒழுக்க முடையவனா யிருந்திடின் உயர்ந்த குலத்தானாவா னென்பதும், உயர்ந்த குலத்தானே யாயினும் ஒழுக்கந் தவறினவனாயின் இழிந்த குலத்தானாவா னென்பதும், ஒழுக்கத்தினாலே மேம்பாட்டை யடைவரென்பதும், ஒழுக்கந் தவறுதலாலே பெரும் பழியை யெய்துவரென்பதும் விளங்காநிற்கும். இதனால் ஆர்கலியுலகத்து மக்கட்கெல்லாம் ஒழுக்கஞ் சிறந்ததென்பது பெறப்படும்

ஒழுக்க மென்பது என்னேவெனின், மேலோர் ஆணைப்படி நன்னெறியில் நடத்தலேயாம். நன்னெறி யென்பதும் யாதோவெனின், அறநூல்களில் விதித்தன செய்தலும், விலக்கிய ஒழித்தலும் ஆம்.

இனி ஒழுக்கத்தோடு கல்வியுமிருக்கின், அது தேனொடு பால் கலந்த தொக்கும். உலக வியவகாரங்களுக்கும், தெய்வத்தை அறிதற்கும், மற்றெவ்வகைக்கும் கல்வி அவசியமெனல் நாம் கூறாமலே அமையும். இந்நிலவுலகில் பெரும்பான்மையோர் கல்வியுணர்ச்சி யின்றிப் பலவகைகளிற் றடுமாறுகின்றனர்.

"கைப்பொருள் கொடுத்துங் கற்றல்
கற்றபின் கண்ணுமாகும்
மெய்ப்பொருள் விளைக்கு நெஞ்சின்
மெலிவிற் கோர் துணையு மாகும்
பொய்ப்பொருள் பிறகள் பொன்னும்
புகழுமாம் துணைவியாக்கும்
இப்பொரு ளெய்தினின் மீ ரிரங்குவ
தென்னை யென்றான்" (ஜீவகசிந்தாம

என்றபடி ஞானக்கண்ணும், மெய்ப் பொருளும், துணையும், புகழும், துணைவியுமாகிச் சென்ற சென்ற விடங்களி லெல்லாம் சிறப்பைத் தருவதும், நல்லறிவைக் கொடுப்பதும், நன்னெறியிற் செலுத்துவதும் கல்வியே. கல்வியறிவில்லா மக்களை மாக்களெனக் கூறுவது மிகையாகாது. கல்வியால் வரும் உயர்வைத் தற்காலத்துக் கண்கூடாகக் காணலாம். இவைகளால் ஒருவன் மேன்மையடைவதற்கு ஒழுக்கமும் கல்வியும் ஒப்பில்லாத் துணைகளாகு மென்பது போதரும். ஆதலால்,



செங்குந்தச் செல்வர்களே !

நாம் ஒழுக்கமா யிருப்பதுடன், நமது மக்கள் ஒழுக்கத்தினராகவும், நிறைந்த கல்வியினராகவு மிருக்கச் செய்வது நமது கடமை.

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்பதைக் கவனியுங்கள்.

ஆனாற் சிலர், "கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சைபுகினுங் கற்கை நன்றே" என்பதைக் கவனியாமல், வருவாய்க் குறைவினாலோ சொற்ப கல்வியே போதுமென்ற எண்ணத்தாலோ தமது மக்களைச் சிறுவயதிலேயே பள்ளியைவிட்டு நிறுத்தித் தமது நெய்தற் றொழிலிற் பழக்குகின்றனர். அந்தோ! அம்மக்களும் சுயவுணர்ச்சி வருங்காலத்து முன்னரே தொழிலிடைப்பட்டதினால் அச்சொற்ப கல்வியையு மிழந்து கல்வி யறிவின்மையராகுகின்றனர். ஆனால், கைத்தொழிற் கல்வி வேண்டாமென்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல. போதிய கல்வி கற்றபின்னர் கைத்தொழிலைக் கையாளலா மன்றோ ?

இன்னுஞ் சிலர் புலாலுண்ணல் மதுவருந்தல் முதலிய கெட்ட பழக்கங்களைக் கைக்கொண்டு, பிறவகுப்பார் கேவலமாக மதிக்கும்படி நடந்து வருகின்றார்கள். கேவலம் ஒருவன் "மடையா" என்று கூறியவுடன், அவன் அவ்வாறு கூறியதற்குக் கண்டிப்பவர், பிற வகுப்பார் "இவன் தாழ்ந்தவன்" என்று கூறுவதற்கு வாளாவிருத்தலேனோ ? தாங்கொண்ட தீயொழுக்க மன்றோ காரணமாகின்றது. தாழ்ந்த சாதியானுடன் கூடிச்சல்லாபமா யிருப்பதற்கும், புலாலுண்ணலாதியவற்றைக் கைக்கொண்டிருப்பதற்கும் வித்தியாச மென்ன? எதனால் நமக்குக் கேவலமுண்டாகிறதோ அதனை அறவே அகற்றுத லன்றோ ஆண்மக்கள் செய்கை. பார்ப்பனர் பிறர் மதிக்க விருத்தற்கு காரணம் அவர்கள் மேற்கொண்டிருக்கும் நல்ல ஒழுக்கமே. "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி யெல்லா வுயிருந்தொழும்" என்பது பொய்யாமொழியாரின் வாக்கன்றோ ? ஆதலின் நம்மவர்களில் இவ்வழக்கங்களைக் கைக்கொண்டிருப்பவர்கள் "நமது குலம் முன்னேற்ற மடைய வேண்டும் ; நாம் நல்லொழுக்கந்தவறாது இருத்தல் வேண்டும் ; நமது மக்களைக் கல்வியாலும் ஒழுக்கத்தாலும் மேன்மைபெறச் செய்ய வேண்டும்" என்ற உறுதிகளைக் கடைப்பிடித் தொழுகுவார்களாக.

ஜ. க. பெருமாள் முதலியார்,
உபகாரியதரிசி, செங்குந்தர் சங்கம், பவானி.

## வாய்மை

வாய்மை என்பது மெய்யின்தன்மையாம். அஃதாவது பிறனுக்குத் துன்பம் உண்டாகும்படி செய்யாமலிருத்தலேயாகும். யார் பொய்யாமையை வகித்திருக்கின்றனரோ அவரிடம் புகழானது தானே வந்து சேரும். உள்ளதை உள்ளவாறு கூறுதல் வாய்மையேயாயினும், பிறிதோருயிருக்கு ஊறு நேரக் கூடியதாயின் பொய்மையே யாகும். திருவள்ளுவ நாயனார்,

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றுந்
தீமையிலாத சொலல்."

எனக் கூறினதை ஆழ்ந்து நோக்குமிடத்து, "எதைக் கூறினும் பிறிதோருயிருக்குத் தீமை நிகழாவிடத்து, அது வாய்மையெனப் பெயர் பெறும் ; இன்றேல் பொய்மையாம்" என நன்கு விளங்குகிறது. எனின், தீயனபுரியும் ஒருவற்குத் தாங்கூறும் மொழியால் நன்மை விளைந்து பின்னருந் தீயனவே புரியும்படி தூண்டுதலென்பதன்று. தீயனபுரிதலை யுடையோனை நன்கு ஒறுத்தலே வேண்டும். இன்றேல், பாம்பிற்குப் பால் ஊற்றி வளர்த்தாற் போன்று ஆகும். எனவே அங்ஙனம் தீயனபுரிவார்க்கு மேலு மேலும் தீயனவேபுரிய ஊக்கியதுபோலாம். பிறவுயிர்கட்கும் தீமையை நன்கு எருவிட்டு வளர்த்தாற்போலாம். அது தீயனபுரிவானை மேலும் தீயனவே புரிந்து கெடும்படிச் செய்தவண்ணம் ஆகும். ஆகவே, தாங்கூறும் மொழி நன்மக்கட்குத் தீமை நிகழாவண்ணம் இருத்தல் வேண்டுமேயன்றித் தீயமாக்கட்குத் தீமை நிகழாவண்ணம் இருத்தலாகாது என்பது விளங்குகிறது. இதுபற்றியே "யாதொன்றுந் தீமையிலாத சொலல் வாய்மை" யெனக் கூறிய வள்ளுவனார், எங்கு "எவ்விடத்தும் தீமையிலாத சொலல் வாய்மை" யெனப் பொருள் கொள்ளுகின்றார்களோ என ஐயுற்று, அடுத்த குறளில்,

"பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"

எனக் கூறினர். அதாவது "குற்றமற்ற நன்

மையைப் பயக்குமாயின் பொய்மையும் வாய்மையிடத்ததாகும்" என்பதாம். குற்றமில்லாத நன்மையாவது நல்லார்க்குப் பழைய ஊழ்வசத்தால் ஏதாவது தீமை நேர்ந்தவிடத்துத் தாம் கூறும் மொழியால் அவர்க்குத் தீமை நிகழாமலும், நன்மையே நிகழும்படியும் இருத்தல் ஆகும். தீயார்க்கு இங்ஙனம் சொலல் நன்றன்று; ஆகையால் இது குற்றமுடைய நன்மையாகும்.

நல்லன புரிவாரொருவர்க்குத் தீமை நேரும் பொழுது இல்லனகூறியாவது அவரைத் தப்புவித்தல் வேண்டும் என்பதை விளக்கவே நமது நாயனர், "புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின் பொய்மையும் வாய்மையிடத்த" எனக் கூறினர். எனவே, தாம் நன்மையடைய விரும்பித் தம் மனம் போனவாறு பொய்மை கூறுதலாகாது என விளங்குகிறது.

B. சுப்பிரமணிய முதலியார்,
தலைமை உபாத்தியாயர், ரிஷிவந்தியம்.

## ஓர் ஐய வினா.

ஐயன்மீர்!

14-4-28 தேதி யன்று பவானி செங்குந்த வாலிபர் சங்கம் கூட்டப்பட்டது. அன்று இடையே 'விதி பெரிதா? மதி பெரிதா?' என்ற விவாதம் ஏற்பட்டது. திரு.கொ. ஆறுமுக முதலியாரும் இன்னும் இருவரும் மதியே பெரிதென வாதித்தனர். கேடடைந்த ஒருவன் தன் மதியின் பலத்தால் சுகத்தையும் மேன்மையையு மடைகிறான்; அவன் மேன்மையடைவதற்கு அவனது புத்தியன்றோ காரணம் எனக் கூறினர். திரு. ஐ. க. பெருமாள்சாமியும், திரு. நா. பழனியப்பனும், விதிவழி நடப்பது மதி யென்றும், ஆதலால் விதியே பெரிதென்றும், கேடடைந்தவன் புத்தி கெட்டதற்கும் பின் அவன் புத்தி தீக்ஷண்யமானதற்கும் காரணம் என்னவென்றும், காரணம் விதியே யென்றும், "ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று சூழினுந்தான் முந்துறும்" மென்றும் வாதித்தனர். பின்னர் திரு. கொ. ஆறுமுக முதலியார் சில சமயங்களில் விதியினும் மதி பெரிதெனக் கூறுவாராயினர். மதியானது சகல மனிதர்களுக்கும் ஒரே அளவினதா யிருக்கிறதென்றும், அதை அதிகப்படுத்துவதும் கெடுப்பதும் விதிகாரணமாகச் செய்யுஞ் செயல்களே என்றும், ஆதலால் விதியே பெரிதென்றும் திரு. ஐ. க பெருமாள்சாமி கூறியதன் பேரில் மேற்படியார் செங்குந்தமித்திரனில் பிரசுரித்தால் உண்மை தெரியவரும் எனக் கூறினர். அதன்படியே ஐய வினா என்ற தலைப்பின்கீழ் இதை எழுதலானேன்.

ஆதலின், அறிவிற் சிறந்த ஆன்றோர்களே!

விதிபெரிதா? மதிபெரிதா? என்பதை ஆதாரங்களுடன் ஐயமற இச் செங்குந்தமித்திரன் வாயிலாக வெளிப்படுத்துமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
ஐ. க. பெருமாள் முதலியார்,
உபகாரியதரிசி, செங்குந்தர் சங்கம், பவானி.

# அறிவியல் பகுதி

## ஞாயிற்றின் கதிர்கள்

ஞாயிறு, சூரியன், பானு, கதிரவன், பகலவன், பொழுதவன், இரவி, ஆதவன், திவாகரன் என்பன ஒரு பொருளை உணர்த்தும் பலசொற்களாம். ஞாயிற்றின் கதிர்களை வடநூலார் சூரிய கிரணங்கள் என்பர். ஞாயிற்றை அறியாதார் இவ்வுலகத்தில் ஒருவருமில்லை. ஆயினும், அதன் கதிர்களின் தன்மை இன்னதென்றும், அவை செய்யும் வேலை இன்னதென்றும், மக்களுள் ஒரு சிலரே யறிவர்.

### இரவும் பகலும் தோன்றும் விதம்.

ஒருவன் அதிகாலையில் விழித்துக்கொண்டு தன் படுக்கையறையில் தன்னைச் சுற்றிலும் பார்ப்பானுனல், அங்கு வெறும் இருளைத் தவிர வேறொன்றையும் காணமாட்டான். அவ்வாறே விழித்துக்கொண்டு இன்னும் கொஞ்ச நேரமிருப்பானுயின், சாளரத்தின் வழியே கொஞ்சங் கொஞ்சமாக வெளிச்சந் தோன்றும். முதலில் அவனைச் சூழ்ந்துள்ள சாமான்களின் உருவங்கள் மங்கமாகப் புலப்படும். இன்னும் சிறிது நேரம் சென்ற பின்னர் அச்சமான்களின் அவயவங்களும், இது வெண்ணிறமானது, இது கருநிறமானது என அவற்றின் நிறங்களும், தெளிவாய்ப் புலனாகும். அப்போது பூமியைப் பிரதக்ஷணம் செய்கிற சூரியன் உதயமாகிறான் என்கிறோம்.

என்றாலும், கதிரவன் உண்மையாகவே தன்



னிலையினின்று மாறுவதேயில்லை. நாம் வசிக்கும் பூமிதான் மெதுவாய்ச் சுற்றிக் கொண்டே வந்து, சூரியகிரணங்கள் இருளிலிருந்த நம்மீது படும்படி, நாமிருக்கும் இடத்தைச் சூரியனுக்கு நேராகக் கொண்டுவருகிறது. அதைப் பகற்காலமென்கிறோம். பூமியின் மற்றொரு பாகம் கதிரவனுககு நேரே வரும்போது, நாம் வசிக்கும் பாகம் இருளால் மூடப்பட்டிருக்கிறது. அதை இரவென்கிறோம்.

இது நிகழ்வ தெவ்வாறு என்பதை அறிய வேண்டுமானல், இராக்காலத்திலாவது, ஒரு இருண்ட அறையிலாவது, ஒரு பெரிய பந்தை எடுத்து, அதில் ஓரிடத்தில் ஒரு குறியிட்டு, அதை ஒரு விளக்கின் எதிரில் வைத்தால், பந்தின் ஒருபாகம் இருண்டும், மற்றொரு பாகம் விளக்கொளியை யுடையதாயும் இருக்கும். நாம் முன் பந்தில் இட்டகுறி இருண்ட பக்கத்திலிருந்து விளக்கொளி வீசும் பக்கத்திற்கு வரும்படிப் பந்தை மெதுவாகச் சுழற்றுவோமானல், இதுவரையில் இருளிலிருந்த குறியின்மேல் முதலில் விளக்கின் கிரணங்கள் கொஞ்சம் வீசும். பந்தைச் சுழற்றச் சுழற்றக் கொஞ்சங் கொஞ்சமாக இட்ட குறியானது விளக்கொளி வீசும் இடத்திற்கு வந்து, விளக்கிற்கு நேரே வரும்போது அதன் முழு ஒளியையும் பெறுகிறது. இன்னும் பந்தைச் சுழற்றிக்கொண்டே யிருப்போமாயின் குறி மறுபடியும் இருளில் மறையும். இவ்வாறாகத்தான் நம் முலகத்தில் பகலும் இரவும் பூமி சுற்றுவதனல் உண்டாகின்றன.

இதனல் பூமியைச் சுற்றிவருவது போல் தோன்றுகிற ஞாயிறு இருந்த இடத்திலேயே தான் இருக்கிறதென்றும், பூமியின் சுழற்சியால்தான் இரவும் பகலும் உண்டாகின்றனவென்றும் தெரிகிறது.

### சூரியன் இல்லாவிடில் என்ன கதி?

ஆயினும், நாம் எடுத்துக்கொண்ட விஷயம் இதுவல்ல வாகலின், இதனை விரித்துரைக்காது இவ்வளவோடு நிறுத்தி, சூரியகிரணங்கள் என்பவை என்ன வென்பதைப்பற்றியும், அவை நமக்கு என்ன சாதகத்தைக் செய்கின்றனவென்பதைப்பற்றியும் ஆராய்வோம்.

சூரிய கிரணங்களுக்குத் தாயகமாகிய சூரியனைப்பற்றி நாம் முதலில் சிறிது தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமா யிருக்கிறது. ஞாயிறு இப்போதிருப்பதுபோல் அக்கினிமயமாய் இல்லாமல் இருண்டிருக்குமாயின், நமக்கு உற்சாகத்தையும், சுறுசுறுப்பையும் உண்டாக்குகின்ற பிரகாசம் பொருந்திய கிரணங்கள் இருக்கமாட்டா; நாம் சூரியனுக்கு நேரே இருந்தாலுங்கூட எங்குப் பார்த்தாலும் கனத்த இருளாகவே இருக்கும்; தாங்கமுடியாத குளிர் மிகுந்திருக்கும்; பூமியிலிருந்து ஆவியாக மேலே சென்ற நீரெல்லாம் உறைபனியாகப் பெய்யும்; நீர்நிலைகளெல்லாம் பனிக்கட்டியாக மாறிவிடும். ஆகையால், எப்போதும் இருண்டே யிருக்குமானல், வெளியே தலைகாட்டமுடியாத மிகுந்த நடுக்கத்தைத் தரும் கடுங் குளிர்கால இரவைக் காட்டிலும் மிகுந்த குளிராக விருக்கும். அஃதேன் எனில் அத்தகைய குளிர்கால இரவிலுங்கூட, பகற்காலத்தில் சூரியவெப்பத்தினுல் பூமி உட்கொண்ட உஷ்ணமானது வெளியாகிக் குளிரின் கொடுமையைச் சிறிது குறைக்கிறது. சூரியவெப்பமே எப்போதும் இல்லாதிருக்குமாயின் பூமியிலுள்ள நீர் ஆவியாகி மேலே சென்று மழையாகப் பெய்யாது. நதிகளில் நீர் பெருகி யோடாது. மழையும் நீர்ப் பெருக்குமின்மையால் புல்பூண்டு மரஞ்செடி முதலியவை வளரமாட்டா. ஆகவே உலகத்தில் உயிர்கள் வாழமுடியாது. பூமியிலுள்ள நீரெல்லாம் உறைபனியாகவும், பனிக்கட்டியாகவும் இருக்கும். பூமி இறுக உறைந்த ஒரு பெருங்கோளமாகவே யிருக்கும்.

### சூரியனிருக்கும் தூரம்

நாம் சாதாரணமாய்ச் சூரியனைப் பார்க்கும்போது ஒரு புகைக் கூடிலாவது, ஆகாய விமானத்திலாவது, ஏறிச் சென்று சுலபமாய் அதைப் பிடிக்கலாம் என்று நினைக்கக்கூடிய அவ்வளவு சமீபத்திலிருப்பதாகத் தோன்றுகிறது. ஆயினும் அது நாம் வசிக்கும் பூமியிலிருந்து சுமார் 9 கோடியே 20 லக்ஷம் மைல்களுக்கப்புறமிருப்பதாக வான சாஸ்திரிகளால் அறிகிறோம். இந்தத் தூரத்தை வேறுவிதமாகச் சொல்லின், மணிக்கு 60 மைல் ஓடக்கூடிய ஒரு ரெயில் வண்டியில் இன்றைக்கு ஏறி, இரவும் பகலும் இடைவிடாது சென்றுகொண்டேயிருப்போமானல், 175 வது வருஷ முடிவில் சூரியனிருக்குமிடத்தை அடையலாம்.

### சூரியனின் விஸ்தீரணமும் பருமனும்

இனிச் சூரியனது விஸ்தீரணத்தைக் கவனிப்போம். நாம் பார்ப்பதற்கு ஒரு பந்துபோல் காணப்படும் கதிரோன் ஒருவன் செங்கற்பட்டு

ஜில்லாவின் விஸ்தீரணமுடையது என்பானுயின் அவனைப் பித்தம் பிடித்தவனென்று சொல்விப் பலர் ஏளனஞ் செய்வாரன்றே? ஆனால் அன்னவர், பூமியைக் காட்டிலும் ஞாயிறு அநேக லக்ஷம் பங்கு பெரிது என அறிவாராயின், எவ்வளவு ஆச்சரியப்படுவர்! இமயமலையிலிருந்து கன்னியாகுமரி வரையிலுள்ள நம் தாய்நடாகிய பரதகண்டம் மிகப்பெரிய தேசமென்பதிற் சந்தேகமில்லை. இப்பெரிய தேசமும் பூமியின் நிலப்பாகத்தை நோக்குங்கால் ஒரு சிறிய இடமாகவே தோன்றுகிறது. அத்தகைய மனத்திற்குமெட்டாத விஸ்தீரணமுடைய நிலப்பாகம் பரந்த பூமியின் மூன்றிலொருபாகமாகவும், மற்றைய இரண்டு பாகங்கள் நீராயுமிருக்கின்றன. ஆகையால் நிலப்பாகமும் நீர்ப்பாகமுங் கூடிய பூமி எவ்வளவு பெரிதென்பதை நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள். இதனாற்றான் 'பெரிது பெரிது புவனம் பெரிது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேகமாய் ஓடக்கூடிய ஒரு ரெயில் வண்டி பூமியை ஒரு தடவை சுற்றிவர வேண்டுமானால் ஒரு மாதம் பிடிக்கும். இப்பெரிய பூமியும் சூரியனை நோக்க மிகச்சிறியதென்றே சொல்லவேண்டியிருக்கிறது. ஏனெனில் பூமியின் குறுக்களவு 8000 மைலும், சூரியன் குறுக்களவு 852000 மைலுமாக இருக்கிறது. சூரியன் காற்றடைந்துள்ள ஒரு பந்தைப் போல் இருக்குமானால், அதனுள்ளே இருக்கும் வெற்றிடம் நமது பூமியைப்போன்ற 1331000 பூமிகள் இருப்பதற்கு இடந்தரும். இதனால் சூரியனுக்கும் நம் பூமிக்கும் பருமனைப் பொருத்தவரையில் உள்ள வித்தியாசம் ஒருவாறு விளங்குகிறது.

### சூரியனின் வெப்பமும் ஒளியும்

நம்முடைய மனதுக்குமெட்டாத அவ்வளவு பிரம்மாண்டமான கோளமாகிய ஞாயிறு அளவுகடந்த ஒளியையும் வெப்பத்தையும் தருகிறதென்பது ஒரு ஆச்சரியமாகாது. ஞாயிற்றின் ஒளியும் வெப்பமும் எத்தன்மையன வென்று பின் வரும் திருஷ்டாந்தத்தால் யூகித்தறியலாம். இராக்காலத்தில் ஒரு அறையில் ஒரு பெரிய விளக்கை ஏற்றி வைப்போமானால், அவ்விளக்கின் கதிர்கள் நாலாபக்கங்களிலும் பரவுகின்றன. அறையின் ஒரு பக்கத்தில் ஒரு கடுகை வைப்போமானால் நாலாபக்கங்களிலும் பரவியோடும் விளக்கின் கதிர்களுள் ஒரு சில கதிர்களே அக்கடுகின்மேல் படக் காண்போம். பகலவன் பருமனை நோக்க நம் பூமியானது மேற்கூறிய பெரிய விளக்கின் எதிரில் வைத்த கடுகுபோன்றதேயாகும். ஆகவே அறையின் மூலை முடக்குகளிலும் துருவிச் செல்லுகின்ற விளக்கின் அனந்த கிரணங்களின் ஏகதேசமே கடுகின்மேல் விழுவதுபோல, எண்ணிறந்தனவாகிய சூரிய கிரணங்களுள் ஏகதேசமே, அதாவது இருநூறுகோடி (2000000000)யில் ஒரு பாகமே நமது பூமியின்மேல் படுகிறது. அக்கிரணங்களே பூமியில் அற்புதமான எல்லா வேலைகளையும் செய்கின்றன. அவற்றின் கடுமையையும் வேகத்தையும் பாரதகண்டவாசிகளாகிய நாம் ஒருவாறு அறிவோம். உஷ்ணம் மிகுந்த வெயிற்காலத்தில் சில சமயங்களில், வெப்பத்தின் கொடுமையைச் சகிக்க முடியாது சில மக்களும், மிருகங்களும் மூர்ச்சை யடைதலையும், உயிர் துறத்தலையும் கண்கூடாகக் காண்கின்றோம்.

வெயிற்காலத்து உச்சிப்போதில் ஆபிரிகா கண்டத்திலுள்ள சில பாலைவனங்களில், ஒரு பாத்திரத்தில் நீரைப் பெய்து மணலின்மேல் வைத்தால், அந்நீர் கொதித்துக் கொஞ்ச நேரத்திற்குள் சுண்டிப்போகும். இத்தகைய பாலைவனங்களில் நாம் உண்ணும் உணவையும் அடுப்பின்றிச் சமைத்துக் கொள்ளலாம் என்பது மிகையாகாது. உதாரணமாக, ஆபிரிகாவின் தென்கோடியாகிய நன்னம்பிக்கை முனையினருகில் சர் ஜான் ஹெர்ஸ்சல் என்னும் ஒரு மேனாட்டு மேதாவி அவ்வாறே சமைத்துண்டதாகத் தெரிவிக்கிறார். சூரியன் வெப்பமின்றிக் குளிர்ந்திருக்குமானால் நாம் எவ்வாறு கடுங்குளிரினால் இறந்து போவோமோ, அவ்வாறே ஞாயிற்றின் கடுமையான கதிர்கள் தங்கள் முழுபலத்தோடு நம் மேற் படுமானால் அவ்வெப்பத்தைத் தாங்காது இறந்துவிடுவோமென்பது திண்ணம். ஆனால் நம்முடைய விழிகளுக்குப் புலனாகாத ஒரு திரையானது மத்தியிலிருந்து நம்மைக் காத்துக் கொண்டிருக்கிறது. அது என்னவென்று நினைக்கிறீர்கள்? அது கடல், ஏரி, ஆறு முதலிய நீர் நிலைகளிலிருந்து ஞாயிற்றின் கதிர்களால் பிரிக்கப்பட்டு ஆகாயத்தில் சிதறுண்டு கிடக்கும் சிறு நீரணுக்களாலாகிய திரையேயாம். இவையே வெயிலின் வேகத்தைத் தணித்து, காற்றைக் குளிரச் செய்து, நமக்கு இன்பத்தைத் தருகின்றன.

(தொடரும்)

மா. அ. கனகசபை மகலியார்



(௯)

## மாதர் பகுதி

### பெண் கல்வி.

பெண்களின் கல்வி விஷயம் தற்காலம் மிகவும் ஆராய்ந்து சீர்திருத்தத்தக்கது. கூட்டுக் குடும்பங்கள் நாளுக்குநாள் தளர்ந்துவரத் தலைப்படுகின்றன. மேல்நாட்டு நாகரிகத்தின் கல்வியாலும், அந்நாகரிகத்தின் பலனாக ஏற்பட்ட இருப்புப்பாதை முதலிய சாதனங்களின் நன்மைகளாலும், உத்தியோக நிமித்தமாகத் தேசாந்தரஞ் செல்லவேண்டிய அவசியத்தினாலும், இராஜாங்க அமைதியாலும் தனிக்குடும்பங்கள் பெருகிவருகின்றன. ஆகவே, பெண்களுக்கு ஒத்த பெருங்குடும்பத்தினால் உண்டாகும் பயிற்சியும் கல்வியும் குறைவுறும். மதாசாரங்களிலும் அவர்களுக்கு நம்பிக்கையும் அன்பும் புகட்டச் சாதனங்களும் காலமும் குன்றும். வாழ்க்கைப்பட்டுத் தனிக்குடும்பம் நடத்தவேண்டிய ஒவ்வொரு பெண்ணும், அக்குடும்பத்தில் தானே தலைவியாக நின்று, தனது தனித்த வல்லமையாலும் அறிவின் கூர்மையாலும் கணவனுடன் இல்லறம் நடத்தி, விருந்தோம்பி, மக்களை வளர்த்து அவர்களைச் சீரடையச் செய்தல்வேண்டும். இக்கடமைகளைச் செவ்வனே அவள் செய்யுமாறு கற்பிக்கப்பட்டாலொழிய அவளது வாழ்க்கை பயனுள்ள தாகாது.

காலப்போக்கும் நமது மாதர்களின் கடமைகளை அதிகரிப்பித்து வருவதாகத் தோன்றுகிறது. பெண் உபாத்தியாயர்களும் வைத்தியர்களும் ஒவ்வொரு இராஜதானியிலும் வருஷா வருஷம் அதிகரிக்கின்றனர். மாதர்களின் நலத்தையும் ஜனங்களின் பொது நலத்தையும் நோக்கமாகக் கொண்டு கூடும் கூட்டங்களில் மாதர்கள் நாளுக்கு நாள் பெருகுகின்றனர்.

எனினும், இவை விளையும் பயிர்களுக்கு முளைகளே. பொதுவாகவும் பெரும்பான்மையாகவும், இந்திய மாதரின் ஆட்சித்திறனுவது தமது இல்லங்களுள் நாயகியாகவும், தாயராகவும், மனைவியாகவும் காரியங்களை நடத்துவதேயாம். இருபாலரினும் சீரியரான யாவரும் இந்திய மாதர் கலியாணத்தை இகழாமல் மனை வாழ்க்கையில் அமர்ந்து தாயராகவும் தலைவியராகவும் இருக்கவே வேண்டுகின்றனர்.

ஆகவே, நமது மாதர்களைத் திடகாத்திரமும், இனிமையும், தயாள குணமும் நிறைந்த மனைவியராகவும் தாயராகவும் செய்து; அவர்களுக்குத் தம் மக்களை நலமடையு நெறியில் வளர்க்கும் வல்லமையளித்து, நமது இந்து மதாசாரக் கொள்கைகளில் அவர்களது நம்பிக்கையையும் அன்பையும் பெருக்கி, தேசாபிவிருத்தியின் பொருட்டு ஒன்றுகூடி மனிதரைப் போலவே உழைக்கத் திறமூட்டி அவர்களைச் சீர்பெறச் செய்வதே அவர்களுக்கு உசிதமான கல்வியாம். அக்கல்வி,

"ஒன்றூக்கல் பெண்டிர் தொழினலம்"

என்ற நான்மணிக்கடிகைக்கு ஏற்ப, மாதர்களை ஆடவருடன் ஒற்றுமைப்பட்டு நடக்கச் செய்தல் வேண்டும் அக்கல்வி, ஒவ்வொரு இந்திய மாதையும்,

"மனைத்தக்க மாண்புடையாள் ஆகித் தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

ஆகச் செய்தல்வேண்டும்,—

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை எனைமாட்சித் தாயினும் இல்"

ஆதலின்

நமது நாட்டில் ஆதரவற்றுக் கைம்பெண்களான மாதர்களின் நிலைமை மிகவும் பரிதபிக்கத்தக்கது. ஆதரவற்றிருப்பதே தவிர, அவர்கள் சுற்றத்தார்பால் அனுபவிக்கும் கொடுமைகளும் பலவுண்டு. இத்தகைய ஆதரவின்மையையும் கொடுமைகளையும் நீக்கித் தாமே தம்மைப் போற்றிக்கொள்ள உதவிசெய்வது பெண்கல்வியின் முக்கியமானதொரு நோக்கமாயிருத்தல் வேண்டும். மற்றும் அக்கல்வி நமது நாகரிகத்திற்கு மாறுபட்டதாக இருக்கக்கூடாது. இந்நோக்கங்கள் ப்ரோபெசர்கார்வி (Prof. Karve) அவர்கள் பூனாவில் ஏற்படுத்திய மாதர் சர்வகலாசாலையைப் போலும் பல நமது நாட்டில் ஏற்படின் நிறைவேறும்.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., [illegible]

(10) 124800

# தொழிற் பகுதி

## நெய்தற்றொழில்

(தொடர்ச்சி)

கவுண்ட் என்னும் எண் நூலின் எடைக்கும் அதன் நீளத்திற்குமுள்ள சம்பந்தத்தைக் குறிக்கும். இக் கணக்குகட்கு ஆங்கில நூல் வியாபாரிகள் நீளத்திற்கு 840 கெஜம்கொண்ட சிலுப்பை அல்லது பூட்டை (hank)யும் நிறைக்குப் பவுண்ட் என்னும் சுமார் 40தோலா கொண்ட ராத்தலேயும் நிலையான அளவாக (standard measure) கொள்கிறார்கள். உதாரணமாக 20 கவுண்ட் என்றால் அந்த நூலானது ஒரு ராத்தல் எடைக்கு 20 சிலுப்பை நிறை நிற்கும். அதாவது ஒரு சிலுப்பையின் நிறை ஒரு ராத்தலின் இருபதில் ஒருபாகமாக இருக்கும். இவ்வாறே 60 கவுண்ட் என்பதானது அந்நூல் ஒரு ராத்தல் நிறைக்கு 60 சிலுப்பைகள் கொள்ளும். ஆகவே ஒரு ரூபா எடைகொண்ட சிலுப்பை யாயின் அந்நூல் 40 கவுண்ட். ஆகையால் கவுண்ட் என்பது ஒரு ராத்தல் நிறைக்கு எவ்வளவு நீளம் இருக்கிறது அல்லது எத்தனை சிலுப்பைகள் இருக்கிறது என்று காட்டும் எண் என்று தெரிகிறது. மேற்சொன்னபடி நூலை நிறுத்து எந்த நூலின் கவுன்டையும் கண்டுபிடித்துவிடலாம். ஆனால், நிறுக்குமுன் அச்சிலுப்பை நூல் 840 கெஜம் சரியாக இருக்கிறதா வென்று பார்த்துக்கொள்ளவேண்டும்.

இதனால் எவ்வளவுக் கெவ்வளவு நம்பர் அதிகப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு அந்நூல் மெல்லியதாக இருக்குமெனத் தெரிகிறது. ஏனெனில், ஒரே நிறையான பஞ்சிலிருந்து அதிக கவுண்ட் கொண்ட நூல் அதிக நீளம் நூற்கப்படுவதால் சன்னமாயும், குறைந்த கவுண்ட் நூல் குறைந்த நீளமாயும் நூற்கப்படுவதால் பருமனாயும் இருக்கிறது.

இனி துணி நெய்யப்படுங்கால் இவைகளுக்காக உபயோகப்படும் வடி அல்லது விழுது (Heald), அச்சு அல்லது பன்னை (Reed)கள் அளவைக் கவனிப்போம். இவ்வகையில் நம் நாட்டுத் தொழிலாளர் சரியாகக் கவனிப்பதில்லை. எல்லாவித நூல்களுக்கும் ஒரே அளவான வடி அச்சுகள் உபயோகிப்பர். ஏனெனில், ஒரே அளவான அகலத்திற்கு, உதாரணமாக, ஒரு அங்குல அகலத்திற்குப் பருமனான நூலேயும் அதே அகலத்திற்குச் சன்னமான நூலேயும் வரிசையாய் நெருக்கி வைத்தால்,பருமனான நூலேவிடச் சன்னநூல் அதிகம் கொள்ளும். ஆகவே ஒரே அகலமான துணி நெய்வதற்குப் பருமனான நூலால் நெய்யப்படும் வடி அச்சுகளைவிட, சன்னநூலால் நெய்யப்படும் வடி, அச்சுகள் அதிக இழைகளைக் கொள்ளுவதா யிருக்கவேண்டும். ஆகையால் நூல்களின் கவுன்டுகளுக்குத் தக்கவாறு வடி அச்சுகள் வித்தியாசப்படும்.

நம் நாட்டுத் தொழிலாளர் இவைகளை 120 இழைகள் கொள்ளும் குஞ்சங்களாகவும் 240 இழைகள் கொள்ளும் கால்களாகவும் கணக்கிடுகிறார்கள். அதாவது, குறிப்பிட்ட அகலத்திற்கு இத்தனை குஞ்சம் அல்லது இத்தனை கால் என்று சொல்லுகிறார்கள். ஆங்கில முறைப்படி ஒரு அங்குலத்திற்கு இத்தனை இழைகள் எனக் கணக்கிடுகிறார்கள். இம்முறையாகவே இப்பொழுது கணக்கிடுவோம்.

வடி அச்சுகளின் அளவுகள் தெரிவதற்கு நூல்களின் கனம் இவ்வளவென்று தெரிந்துகொள்ளவேண்டுவ தவசியம். இவைகளுக்காக ஆராய்ச்சிசெய்து ஒரு ராத்தல் பஞ்சினால் நூற்கப்படும் எந்த கவுண்ட் நூலானாலும் அவைகளின் மொத்த குழி அளவு அல்லது கனஅளவு (volume) இவ்வளவு என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதிலிருந்து நூல்களின் பருமனைக் கண்டுபிடித்துவிடலாம். அதாவது, அதிக நீளமாக நூற்கப்பட்டிருக்கும் சன்னமான நூல்களுக்கும், குறைந்த நீளமாக நூற்கப்பட்டிருக்கும் பருமனான நூல்களுக்கும் அவ்வவைகளின் நீளத்திற்குத் தக்கவாறு கண்டுபிடிக்கலாம்.

20 கவுண்டு நூலின் பருமன் சுமார் ஒரு அங்குலத்தின் 120 இல் ஒரு பங்கு இருக்கும். அதாவது, ஒரு அங்குல அகலத்தில் வரிசையாய் ஒன்றின் பக்கத்தில ஒன்றாக வைத்தால் 120 இழைகள் வேண்டும். ஆகையால் ஒரு அங்குல அகலத்திற்கு 120 இழைகள். அடியில் குறித்த அட்டவணை அந்தந்தக் கவுண்

JL 592 e m211, N27 ‹H N28·2·4

நூல்கள் ஒரு அங்குல அகலத்திற்கு இத்தனை இழைகள் கொள்ளும் என்று காட்டும்.

| நூலின் கவுண்ட் அல்லது நம்பர். | அங்குலத்திற்கு இழை. |
|---|---|
| 10 | 87 |
| 20 | 123 |
| 30 | 151 |
| 40 | 174 |
| 50 | 195 |
| 60 | 213 |
| 70 | 229 |
| 80 | 246 |
| 90 | 261 |
| 100 | 275 |
| 110 | 289 |
| 120 | 3 2 |
| 130 | 314 |
| 140 | 326 |
| 150 | 337 |
| 160 | 349 |
| 170 | 358 |
| 180 | 369 |
| 190 | 380 |
| 200 | 390 |

மேற்சொன்ன அளவுப்படி துணியில் போட முடியாது. ஏனெனில், இடம்விடாமல் வரிசையாய் இழைகளை வைத்தால் இக்கணக்குப்படி போடலாம். ஆனால் துணியில் பாவு இழைகளுக்கு மத்தியில் ஊடை இழைகள் பின்னிக் கொண்டிருப்பதால் ஊடையின் கனத்துக்குத் தக்கபடி ஒரு பாவு இழைக்கும் அடுத்த பாவு இழைக்கும் இடையில் இடமிருக்க வேண்டும். ஆகவே எந்த கவுன்ட் நூலைக் கொண்டு நெய்கிறோமோ அந்த நூல் ஒரு அங்குலத்திற்கு எவ்வளவு கொள்ளுமோ அந்த எண்ணின் பாதி இழைகளே அங்குலத்திற்கு மிருக்கவேண்டும். இப்பொழுது 10 நம்பர் நூலால் நெய்யவேண்டுமானால், அந்த நூல் ஒரு அங்குலத்திற்குச் சுமார் 85 இழைகள் கொள்ளுமாகையால் நெசவில் அதில் பாதி 42 இழைகள் இருக்கவேண்டும். அதன் அச்சு வடிகள் அங்குலத்திற்கு 42 இழைகள் கொள்வதா யிருக்கவேண்டும். கஞ்சி போடுவதால் நூலின் கனம் சிறிது அதிகப்படுமாகையால் இந்த அளவுக்குக் குறைவாக இருக்கலா... யொழிய சிறிதும் அதிகப்படல் ஆகாது. ஆனால் அதிகமும் குறைந்தால் துணியின் உறுதி குறைந்துவிடும். ஆகவே அடியில் குறித்த அளவுப்படி வடி அச்சுகள் இருத்தல் நலம்.

| நூலின் கவுண்ட் அல்லது நம்பர். | வடி அச்சுகளில் அங்குலத்திற்கு இழை. |
|---|---|
| 10 | 36 |
| 20 | 52 |
| 30 | 64 |
| 40 | 72 |
| 50 | 82 |
| 60 | 90 |
| 70 | 98 |
| 80 | 102 |
| 90 | 108 |
| 100 | 114 |
| 110 | 120 |
| 120 | 126 |
| 130 | 130 |
| 140 | 135 |
| 150 | 140 |
| 160 | 144 |
| 170 | 148 |
| 180 | 152 |
| 190 | 156 |
| 200 | 160 |

நம் நாட்டுக் கணக்குப்படி தெரிந்துக்கொள்ள வேண்டுமானால் நாம் எந்த கவுண்டு நூலால் நெய்யவேண்டுமோ அந்த நூல் அங்குலத்திற்கு எவ்வளவு இருக்குமெனப் பார்த்து, எவ்வளவு அகலம் துணி வேண்டுமோ அத்தனை அங்குலத்தால் பெருக்கிவந்த இழைகள் எத்தனை குஞ்சம் அல்லது கால் என்று பார்த்து இந்த அகலத்திற்கு இத்தனை குஞ்சமெனக் கணக்கிட்டுக் கொள்ளலாம். உதாரணமாக 40 கவுண்ட் நூல் அங்குலத்திற்கு 72 இழைகள். நான்கடி அகலம் துணி நெய்யவேண்டுமென்றால் 48 அங்குலத்திற்கு 72 இழைகள் 3456 ஆகிறது. அதற்குக் குஞ்சம் சுமார் 25¼ ஆகும். இவ்வாறே எந்தக் கவுண்டுக்கும் எவ்வளவு அகலத்திற்கும் கணக்கிடுக.

S. பாலசுந்தர முதலியார்,
நெய்தற்றொழிலாசிரியர்,
போர்டு உயர்தர பாடசாலை, பூவிருந்தவல்லி.



## குடும்ப வைத்தியம்

### காசநோய்க்கு அரிய மருந்து

வெட்டையினாலும் கணைச்சூட்டினாலும் கபஜுரங்களாலும் மற்றும் பல காரணங்களாலும் உண்டான காசம், க்ஷயம், தேகமெலிவு முதலிய நீங்கி நல்ல தேஜஸு உண்டாகும் அனுபவ மருந்து கலப்பில்லாத சுத்தமான அயப்பொடியை நல்லெண்ணெய் விட்டு வறுத்துச் சீயக்காயைக் கொதிக்கவிட்டுப் பிசைந்தெடுத்த தண்ணீரால் தேய்த்துக் கழுவி உலர்த்திப் பலம் மூன்று எடுத்துக்கொண்டு கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றால் நாலுசாமம் அரைத்து வில்லை செய்துலர்த்திப் பசுமூத்திரத்தை விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தி வெள்ளாட்டு நீர்விட்டு நாலுசாமம் அரைத்துலர்த்தி கேசரி நீர்விட்டு நாலுசாமம் அரைத்து வில்லைகள் காலணு பெரிதாகச் செய்துலர்த்தி, நான்குபடி ஆலம்பழுப்பை ஒன்றிரண்டாக இடித்து ஒரு அடிக் கனமான தளச்சட்டியில் பாதி போட்டு மேலே வில்லைகளை வைத்து மேலும் ஆலம்பழுப்புத் தூள்போட்டு அழுத்தி மேல சட்டிமூடி அடுப்பிலிட்டு நான்கு சாமநேரம் எரித்து ஒருநாள் ஆறினபின் எடுத்து வேறு ஆலம்பழுப்புச் சூரணம்போட்டு வில்லைகளைக் கீழ்மேலாகத் திருப்பி வைத்து மேலும் தூள்போட்டு நாலுசாமம் எரித்து ஒருநாள் ஆறவிட்டு எடுத்து நாலுசாமம் கல்வத்திலரைத்து வைத்துக்கொண்டு தேனில் ½ பணவிடை வீதம் உண்ணவும். இது ஓர் அரிய முறை. செய்துகொடுத்து அனுபவமானது. உபயோகித்தால் இந்நோயில் வருந்துகிறவர்களுக்கு ஒரு தேவாமிர்தம் போன்றதாகும்.

### வெட்டைசூட்டுக்கும், பசிதீபனத்துக்கும்.

ஒரு பலம் கற்பூர சிலாசத்தை வாங்கி ஒருநாள் இளநீரிலும் மறுநாள் சுண்ணாம்புத் தெளிவு நீரிலும் ஊறப்போட்டு எடுத்துச் சோற்றுக்கற்றாழைச் சோற்றை ஒருசேர் ஒரு சட்டியில் போட்டு அதற்குள் சிலாசித்தை வைத்துச் சட்டிமூடிச் சீலைமண் செய்து 50 எருவிலபுடமிட்டு எடுத்து நன்றாய் ஆறினபின் கல்வத்தில் ஒருசாம நேரம் அரைத்துக்கொண்டு பணவிடை வீதம் வெண்ணெய் அல்லது நெய்யில் சாப்பிட. பத்தியமில்லை. ஆச்சரியமான குணம் செய்யும் உயர்ந்த வெள்ளி பஸ்பமிதற்கிணையாகாது. அனுபவம்

### இருமலுக்கு அரிய மருந்து.

தூதுவளை, கருந்துளசி, இன்புராமணத்தக்காளி, முசுமுசுக்கை, மிளகரனை, ஆடாதோடை, காஞ்சூரி இவைகளின் வேர்களைச் சரிஇடை இடித்து எட்டொன்றாய்க் கியாழம் காய்ச்சி வடிகட்டி ஒருசேர் பசுநெய்யில்விட்டுச் சாறு சுண்டுமட்டும் எரித்து நெய்மிஞ்சக் காய்ச்சி ஒரு பலம் சீனாகற்கண்டு தூள் கலந்து தினசரி கால்ரூபாய் இடை உண்டுவரச் சகலவித இருமலும் ஈளை காசமும குணமாகும். கடமிருந்தால் மேலே சொல்லிய சிலாசத்து பஸ்பத்தைச் சேர்த்துண்ணவும். பத்தியமில்லை.

### க்ஷயரோகத்திற்கு மருந்து.

அரத்தாளராவின கலைமான் கொம்புத்தூள் பவளம் தோலா ½ பலம் இரண்டு ஓமம்பலம் 2 இவ்விரண்டும் சேர்த்து வெள்ளெருக்கம்பால் மிதக்கவிட்டு 3=4 நாள் ஊறவைத்து ஒரு கலயத்தில் போட்டுச் சீலைமண் செய்து ஒரு கஜம் குழியில் 150 விருட்டிகளை அடுக்கி அதில்மேல் வைத்து மேலே 50 விருட்டிகளை அடுக்கி புடம்போட்டு இரண்டுநாள் ஆறினபின் எடுத்து நன்றாய் இரண்டு சாமம் அரைத்து வைத்துக்கொண்டு பணவிடை வீதம் பசுநெய்யில் 14 நாள் கொடுக்க ஜுரப்பேதி இருமல் முதலியதோடு கூடிய க்ஷயமானாலும் குணமாகும். கோதுமை நொய்யை நெய்யில வதக்கிப பால்விட்டுக் கஞ்சி செய்து கொடுக்கவும். வேறு எந்த ஆகாரமும்கூடாது நல்ல மருந்து.

### அஜீரணம்.

இக்கொடிய வியாதியே நாளடைவில் பித்தவாயு குன்மம் முதலிய அசாத்திய வியாதிகளாகிவிடுகிறது. இந்நோய் உண்டாவதற்குக் காரணம் சொல்லப்புகின் மெத்த விரியும். நமது செங்குந்தமித்திரனு மிடந்தராது. தினசரி மலசுத்தி யில்லாமையும் அதிகத்தீனி தின்னுதலும் தனது ஜீரணக்கிரமத்திற்கு அதிகமான உணவை உட்கொள்ளுதலுமே முக்கிய காரணமாகும். இதற்கொரு அரிய பக்குவத்தையும் வரைவோம்.

இலகுவாய்ப் பொரித்த காயம் பலம் 2, அரைவாசி சிவக்க வறுத்த வசம்பு நாலு பலம், அரிசித் திப்பிலி ஆறு பலம், சுக்கு 8 பலம், ஓமம் பத்து பலம், கடுக்காய்த்தோல் 12 பலம், கொடிவேலி வேர்ப்பட்டை 14 பலம், நல்லகோஷ்டம் 16 பலம் இவைகளை உலர்த்தி இடித்து வடிக்கட்டிக்கொண்டு தினமிரு வேளைத் திருகடியளவு வெந்நீருடன்உட்கொண்டால் இரைக்குடல் ஜீரணக்குடல்களிலுண்டாகும்

வியாதியும் குணமாகி நல்ல பசியுண்டாகும். மேல் கண்ட மருந்துகள் விளுடிக் கணக்காயும் தேவையான அளவு இதில்கண்ட நிறை வீதப்படி சேர்த்துச் செய்துகொள்ளலாம்.

### விஷ பேதிக்கு நல்ல மருந்து.

உலாந்தலிங்கம், கொடிவேலி வேர்ப்பட்டை, குடம், சாம்பிராணி, ஜாதிக்காய், வெப்பாலரிசி, பச்சையான கோரைக்கிழங்கு, வகைக்குப் பலம் கால், அபின் விராகனிடை 1, இவைகளைச் சேர்த்துக் கஞ்சாக் கியாழத்தாலரைத்து, மிளகு அளவு மாத்திரை செய்து உலர்த்திக்கொண்டு இரண்டுமணி நேரத்திற்கொருதடவை ஒருமாத்திரை வீதம் தேனில் இழைத்துக் கொடுக்கக் குணமாகும். சிறுவர்களுக்கு கால் அரை மாத்திரை வீதம் கொடுக்கவும். நல்லமுறை. அனுபவம். தாகமடங்கத் தண்ணீர் கொடுக்கவும்.

### கடுக்காய்.

கடுக்காய் ஊறுகாய் உபயோகித்துவரும் வீட்டில் வியாதிகள் விசேஷமாய் வாராது. கடுக்காயை விரும்புவோர் வைத்தியரை விரும்பார். வைத்தியர்களுக்கு வேலையும் கிடைக்காது.

ஜீ. கண்ணுசாமி,
முனிசிபல் தமிழ் வைத்தியர், திருவாரூர்.

## செங்குந்தர் கிளர்ச்சி

கிளைச்சங்கங்களின் நிகழ்ச்சிகளும், புதுயசங்க ஸ்தாபனங்களும், போலியர்க்கு மறுப்புக்களும்.

### செங்கற்பட்டு ஜில்லாவில் கிளர்ச்சி

#### ஐயன்பேட்டை அமாவாசை உபந்யாசக் கூட்டம்.

21-3-28 மாலை 4-மணிக்கு ஐயன்பேட்டை செங்குந்தர் வளர் நிலைச்சங்கத்தின் ஆதரவில் ஐயன்பேட்டை வடக்குவீதியில் செல்வவிநாயகர் ஆலயத்தில் அமாவாசை உபந்யாசக் கூட்டம் கூட்டப்பெற்றது. அன்று சுமார் 200 ஜனங்கள் குழுமியிருந்தனர்.

4மணி முதல் 5-30மணிவரையில் இன்னிசை கருவிகளுடன் தேவாரம் பாடப்பெற்றது. பின்னர் மேடி வீதி திரு. பூ. குப்புசாமி முதலியாரால் அமர்நீதி நாயனார் சரிதிரம் விமரிசையாக உபந்யாசிக்கப்பெற்றது. பிறகு 8-மணிக்குமேல் திரு. க. மு. ஷண்முக முதலியார் "செங்குந்தரும் ஜீவகாருண்யமும்" என்ற விஷயத்தைப்பற்றிப் பேசினார். பிறகு 9-மணிக்கு அங்குவந்திருந்த பெரியார்களுக்கு சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்று கூட்டம் இனிது கலைந்தது.

#### ஐயன்பேட்டை செங்குந்தர் வளர்நிலைச் சங்கம் இரண்டாவது நிருவாகசபைக் கூட்டம்.

ஐயன்பேட்டை போர்டு பாடசாலையில் இச்சங்கத்தின் இரண்டாவது நிருவாக சபைக்கூட்டம் 22-4-28 மாலை 6-மணிக்கு கூடிற்று. அவ்வமயம் 8 அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தனர். திரு. கை. காமகோட்டி முதலியார் தலைமை வகித்தார். அக்கூட்டத்தில் கீழ்கண்ட 9 தீர்மானங்களும திரு. வி. க. பழனி முதலியாரால் கொண்டுவரப்பட்டு நிறைவேறின.

(1) இப்பொழுது சங்கச் செலவிற்கு ஊரில் பிள்ளைகள் (ஜாதி) கூட்டத்திலிருந்து ரூபா 20-0-0 வாங்கிக் கொள்ள சிபார்சு செய்யப்பட்டது.

(2) பணம் வந்தவுடன் 'திராவிடன்' தினசரி பத்திரிகை சங்கசார்பில் அனைவருக்கும் உதவ வரவழைக்க உத்திரவளிக்கப் பெறுகிறது.

(3) நிருவாக சபைக்கூட்டம் கூட்டுவதற்குக் காரியதரிசி ஒரு ஆளை நியமித்து அவனிடம் கூட்டத்திற்கு ஒருநாள் முன்னதாக சர்குலர்எழுதியனுப்பிக் கூட்டம் கூட்டவும் அந்த ஆளுக்கு மீட்டிங்கு 1-க்கு 0-3-0 கொடுக்கவும் இக்கூட்டம் அனுமதியளிக்கிறது.

(4) பள்ளிக்கூடம் போகக்கூடிய பிள்ளைகள் (Boys of school going age) பள்ளிக்கூடம் போகாதிருந்தால் அவர்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும்படி கட்டாயப்படுத்த அந்தந்த தெருவிலிருக்கும் நிருவாகசபை அங்கத்தினரை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

(5) பள்ளிக்கூட விஷயத்தில் பாடமுறைகளைக் கவனிக்கவும் எல்லா உபாத்தியாயர்களும் சரிவர அக்கரையுடன் பாடம் கற்பிக்கிறாரென்று கவனிக்கவும் பிள்ளைகளுக்கும் உபாத்தியாயர்களுக்கும் கூடியவரையில் உதவவும் வி. க. பழனி முதலியார் க. ஷண்முக முதலியார் க. ஏகாம்பர முதலியார் ஆகிய மூவரடங்கிய சப்கமிட்டி ஒன்று ஏற்படுத்தப் பட்டது.

(6) சிறந்த ஊக்கத்துடன் வாசிக்கும் ஏழைப் பிள்ளைகளுக்குப் புஸ்தகம் சிலேட் இல்லாதிருந்தால் சங்க பணத்திலிருந்து உதவ சப்கமிட்டிக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(7) மினிட்ஸ் புஸ்தகம், சாகிதம் முதலியவை வாங்கின செலவையும் மற்றும் சில்லரைச் செலவுகளையும் தணிக்கை செய்து அங்கீகரிக்கப்பட்டது.

(8) அங்கத்தினர்களைச் சேர்க்கவும் அவர்களிடமிருந்து சந்தாவசூல் செய்யவும் சப்கமிட்டி யொன்று அடுத்த கூட்டத்தில் ஏற்படுத்தலாமென்று தீர்மானிக்கப் பட்டது.

(9) காரியதரிசி எழுதிவந்திருந்த சட்டதிட்டங்களை வாசித்து அங்கீகரிக்கப்பட்டது.

#### ஐயன்பேட்டை உத்திர வீதியிலமைந்துள்ள ஸ்ரீ செல்வவிநாயகர் சங்கத்தின் முதலாவதாண்டு நிறைவு விழா.

ஐயன்பேட்டை உத்திரவீதியில் ஸ்ரீ செல்வவிநாயகராலயத்தில் மக்களுக்குரிய செயற்கை யறிவு பல அறிவாளிகள் கூடும் கூட்டுறவின் சார்பாக அதிகரித்து பல புகழையும் பெற சில அறிவாளிகளினால் சென்ற பிரபவ ஆண்டு சித்திரை திங்கள் அமாவாசை முதலாக மேடி ஆலயத்தில் பிரதி திங்கள் அமாவாசைதோறும் பல அறிஞர்களால் பல உபந்யாசங்கள் நடைபெற்று வந்தன. அதன் சம்பந்தமாக சென்ற 19-4-28 வியாழக்கிழமை காலை தேவார பாராயணம் முடிந்தபின்பு காஞ்சிபுரம் திரு. க. வச்சிரவேலு முதலியாரால் "விநாயகர் திருமணம்" வெகு விமரிசையாக உபந்நியாசிக்கப்பெற்று மாலை, திரு. ம. தெய்வசிகாமணி முதலியார் தலைமையின் கீழ்காஞ்சீபுரம் பச்சயப்பன் கலாசாலை தமிழ்ப்பண்டிதர் திரு வி. திருஞான சம்பந்த முதலியாரால் "உமாதேவியார் இடப்பாகம்பெற்ற சரிதம்" அதிவிமரிசையாக எல்லா ஜனங்களுக்கும் விளங்கும்படி உபந்நியாசிக்கப்பெற்றது. அதன் பின் திரு. ஐ. கரு. மு. ஷண்முக முதலியாரால் 'விமலை சரிதம்' மிகவும் இனிப்பாக நீண்டநேரம் உபந்நியாசிக்கப்பெற்று அவருக்கு ரூபா 15-0-0 பெறுமான சால்வை ஒன்றும் ரூபாய்கள் 5-0-0ம் வெகுமானமளிக்கப் பெற்று ஆங்கு பெரிய பந்தலில் குழுமியிருந்த சுமார் 500 ஜனங்களுக்குப் பட்டி சந்தனம் சர்க்கரை வழங்கப் பெற்று அக்கிராசனர், உபந்நியாசகர்கள் முதலியோர்களுக்கு வந்தனோபசாரம் கூறி விழாமங்கல ஒலிவுடன் இனிது நிறைவேறிற்று.

#### மேலவலம்பேட்டை செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

1. 31-3-28ந் தேதி மாலை 5-மணிக்கு மேடி சங்கக்கூட்டம் கற்பகவிநாயகர் ஆலயத்தில் கூட்டப் பெற்றது.

2. அச்சமயம் திரு. தா. சிதம்பர முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்.

3. அதுபோழ்து தலைச்சங்கத்திலிருந்து 19-3-28 தேதி வந்த கட்டணம் கட்டவேண்டிய விஷயத்தைப்பற்றிய லெட்டரை வாசித்துக்காட்டினர்.

4. மேடி கட்டணத்திற்காக 5 அணா ஒவ்வொரு மெம்பர்களிடத்திலும் வசூலிக்க வேண்டியதென்று காரியதரிசிக்கு அனுமதி கொடுத்திருக்கிறது.

5. பிறகு நமது குலமக்களுக்குக் கல்வி இல்லாமையைப்பற்றி வருந்தும் எஸ். சாம்பசிவ முதலியார் அவர்களால் நம் சங்கத்தின் ஆதரவில் ஓர் இராப் பள்ளிக்கூடம் திறக்கப்படல் வேண்டுமென்றும், அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்துவருவதாகவும், அடுத்த கூட்டத்தில் மற்ற விஷயத்தை யோசிப்போமெனவும் அதற்காக 2-4-28ல் கூடவேண்டுமென்றும் தீர்மானம் கொண்டு வரப்பெற்று நிறைவேறிற்று.

6. மேடி 2-4-28-ல் போட்டிருந்த கூட்டத்தை காரியதரிசி எஸ் சாம்பசிவ முதலியார் வீட்டில் ஏதோ சில அசந்தர்ப்பங்கள் நேர்ந்தமையால் அடுத்த கூட்டம் போடுவோமென திரு. சி. ந. ஏகாம்பர முதலியாரால் பிரேரேபிக்கப் பட்டது.

7. ஸ்கூல் விஷயமாக 4-4-28-ல் மினிஸ்டர் அவர்களுக்கு மனுஒன்று ரிஜிஸ்டர்செய்யப்பட்டது.

8. 5-4-28-ல் டாக்டர்அவர்களுக்கும்,டிஸ்டிரிக்ட் போர்ட் பிரஸிடெண்ட் அவர்களுக்கும்,தாலுகாபோர்ட் பிரஸிடெண்ட் அவர்களுக்கும் ஸ்கூல் விஷயமாகவே தபால்மூலமாக மனுக்கள் கொடுக்கப்பட்டன.

9. 9-4-28ந் தேதி மாலை 9-மணிக்குக் கூடிய கூட்டத்திற்குத் திரு. மு. சிதம்பர முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர்.

10. அச்சமயம் தலைவர் முன்னுரையில் நம் சமூகத்திற்கு ஒரு புத்தகசாலை ஏற்படுத்த வேண்டுமென்றும் அதில் நம் குலமக்கள் நூல்களை ஆராய்ச்சி செய்

யவேண்டுமென்றும் இன்னும் பொது ஜனங்கள் வந்து வாசிக்கும்பொருட்டும் ஒட்டக்கூத்தர் கழகம் என ஓர் கழகம் ஏற்பாடு செய்யவேண்டுமெனவும், அதற்கு வேண்டிய ஒத்தாசை செய்வதாகவும் நீண்ட நேரம் பேசினர்.

11. ஸ்கூல் விஷயத்திற்கு நாளதுவரையில் பதில் கிடைக்கவில்லை யாதலால் உடனே தக்கமுறையில் கண்டிப்பதுடன் தலைச்சங்கத்தாரையும் முயற்சி செய்யும்படி ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது.

சோ. சாம்பசிவ முதலியார்,
காரியதரிசி.

## செங்கல்பட்டு தாலூக்காபோர்டார் கல்வியிற் காட்டும் சிரத்தை.

ஷை போர்டைச் சேர்ந்த மேலவலம்பேட்டை, கருங்குழிபேட்டை, ஞானகிரீஸ்வரன் பேட்டை, மலாவிப்பேட்டை இந்த மூன்று பேட்டையார்களும் ஷை போர்டிற்கு 29-9 27, 5-10-27, 2-11-27, 29-11-27 தேதிகளிலும் செங்கல்பட்டு ஜில்லா போர்டிற்கு 9-11-27-லும் ஓர் போர்டு எலிமென்டரி பாடசாலை ஏற்படுத்தக் கேட்டுக்கொண்டதற்கு ஒரு பதிலுமில்லாமல் காதில் போட்டுக்கொள்ளாது இருக்கிறார்கள்.

அதற்காக 4-4-28-ல் மினிஸ்டர் அவர்களுக்கும் மனு ரிஜிஸ்தர் மூலமாகவும் 5-4-28 டைரக்டர் டிஸ்டிரிக்ட் போர்ட் பிரஸிடெண்ட் அவர்களுக்கும் தாலூக்கா போர்டு பிரஸிடெண்ட் அவர்களுக்கும் மனுக்கள் கொடுத்து இருக்கிறது. அதற்கும் நாளது வரையில் யாதொரு பதிலுமில்லாமல் இருக்கிறது.

இந்நான்கு பேட்டையிலும் சுமார் 700 வீடுகளும் 3000 ஜனங்களும் 200 ஆண் பெண் பிள்ளைகளும் இருக்கிறார்கள். இப்பேட்டைகளிலிருப்போர் ஏறக்குறைய எல்லோரும் சம்பளம் கொடுத்துப் பிள்ளைகளைப் படிக்கவைக்கும் நிலைமையில்லா தன்மையாக இருக்கின்றனர்.

தற்காலத்தில் இலவச பாடசாலைகள் ஆங்காங்கு வைத்து ஆரம்பக் கல்வியைப் போதிக்கவேண்டும் எனும் விதி இருக்க அவ்விதி இப்பேட்டைகளுக்கு இல்லைபோலும்.

இனியேனும் எங்கள் வேண்டுகோளை அறிந்து போர்டைச் சார்ந்தவர்களும் அறிஞர்களும் செங்குந்தகுல சீமான்களும் கல்வியில் குறைந்த எங்களுக்கு ஒரு தனிபோர்ட்டு எலிமெண்டரி ஸ்கூல் வைக்க நியமவாரென்றே எதிர்நோக்குகின்றோம்.

தங்கள் அன்பான பதிலையும் ஆதரவையும் எதிர்பார்க்கும் அன்பன்,

சோ. சாம்பசிவ முதலியார்,
காரியதரிசி,
மேலவலம்பேட்டை செங்குந்தர் அபிவிருத்தி சங்கம், கருங்குழி போஸ்டு.

## காலஞ்சென்றார்.

சென்ற பிரபவஹு மாசிமீ 25உ (8-3-28) வியாழக்கிழமை காலை 1 மணிக்கு நமது சங்கத்தலைவரும் இச்சங்கத்தினிடம் நீங்காப் பற்றுடையவரும், பொதுஜன அபிமானியும், தமிழ்நூல் ஆராய்ச்சியுடையவரும் தேசநோக்கங்களில் சிரத்தையுடையவருமாகிய திரு. வெ. வேதகிரி முதலியார் அவர்கள் இவ்வுலகைவிட்டு உயிர் நீத்ததைப்பற்றி இச்சங்கத்தினர் மிகவும் வருந்துகின்றனர்.

செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தினர்,
மேலவலம்பேட்டை கருங்குழி.

## கன்றச்சேரி செங்குந்தர் கூட்டம்.

விபவஹு சித்திரைமீ 1உ கன்றச்சேரி டொ. சுப்பராய முதலியார் இல்லத்தில் கூடிய கூட்டத்தில் சு. முத்தாண்டி முதலியார் அவர்களால் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளைச்சங்கமாக இவ்வூரில் ஒரு சங்கம் நிறுவயேற்பாடு செய்வதற்காக கூட்டினமையால் அதில் அடுத்த கூட்டத்தில் யோசிப்போமென யேற்பட்டது. அதே கூட்டத்தை வலியுறுத்தும் பொருட்டு 2-4-28 ல் சு. செல்லபெருமான் முதலியார் இல்லத்தில் கூட்டப்பெற்றது. அச்சமயம் கருங்குழிப்பேட்டை செங்குந்தர் சங்கம் காரியதரிசி அ. குள்ளப்ப முதலியார் அவர்கள் சங்கம், பத்திரிகை, நம் குலமுன்னேற்றம் என்பவைகளைப்பற்றி நீண்ட நேரம் உபன்னியாசம் செய்தார். சங்கம் ஒன்று நிறுவ 22 4-28 ல் கூட்டவேண்டியதென்று தீர்மானிக்கப் பெற்றது.

22-4-28ல் மாலை 7 மணிக்கு மேலவலம்பேட்டை செங்குந்தர் அபிவிருத்திசங்கக் காரியதரிசி, திரு. எஸ். சாம்பசிவமுதலியார் அவர்கள் கென்றச்சேரி கிராமத்திற்கு வந்து சேர்ந்தனர்.

அச்சமயம் திரு. சாம்பசிவ முதலியார் அவர்கள் "ஒற்றுமை" என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசியபின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இவ்வூருக்குச் செங்குந்தகுல முன்னேற்றத்திற்காக ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மா



இச்சங்கத்திற்குச் செங்குந்த வாலிபர் சங்கம் எனப் பெயர் வைக்கப்பட்டது.

இச்சங்கக்கூட்டம் திரு. சு. செல்லப்பெருமான் முதலியார் அவர்கள் இல்லத்தில் கூடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இச்சங்கத்திற்குக் கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்.
திருவாளர் சு. சுப்பிரமணிய முதலியார்

துணைத்தலைவர்.
திரு. மு. தங்கவேலு முதலியார்.

காரியதரிசி.
திரு. சு. முத்தாண்டி முதலியார்.

உப காரியதரிசி.
திரு. கு. க. சரவண முதலியார்

பொக்கிஷதார்.
திரு. அ. சபாபதி முதலியார்

கணக்குப் பரிசோதகர்.
திரு. குழ. சுப்பராய முதலியார்

புத்தகக் காப்பாளர்.
திரு. அ. முனுசாமி முதலியார்

இவர்களிடம் அங்கத்தினர் பிரதிவருடம் சித்திரை மாதத்திற்குள் முக்கால் ரூபாய் விகிதம் இச்சங்கத்திற்குச் சந்தாவாக செலுத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இச்சங்கத்தைச் சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கிளைச்சங்கமாக ஸ்தாபித்து வருடப்பிரதிவருடம் 5-0-0 ரூபா விகிதம் கட்டணமாகச் செலுத்தவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஒரு கூட்டத்தில் 11 பேருக்குக் குறையாத அங்கத்தினர்களாவது கூடவேண்டு மென்றும் தீர்மானஞ் செய்யப்பட்டது.

இக்கூட்டம் மாதம் இருமுறை கிருத்திகை அமாவாசை முதலிய சௌகர்ய நாட்களில் கூட்டலாமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

செங்குந்தமித்திரன் பத்திரிகையை ஒவ்வொருவரும் ஆதரிக்கவேண்டுமென்றும், இன்னும் பத்திரிகை அதிகமாகப் பரவும்படி செய்ய முன்னேற்கமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானங்களைக் குடியரசு, சுதேசமித்திரன், செங்குந்த மித்திரன் பத்திரிகை வாயிலாக வெளியிடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

சட்டதிட்டங்கள் அடுத்த கூட்டத்தில் காரியதரிசியவர்களால் வரையறை செய்யப்படவேண்டியது என்று தீர்மானஞ் செய்யப்பட்டது.

சங்கபாரங்களை இன்றே பூர்த்திசெய்யவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது.

(சபையோர் சம்மதப்படி)

சு. முத்தாண்டி முதலியார், காரியதரிசி.
கு. க. சரவண முதலியார், உபகாரியதரிசி

## கோடம்பாக்கம் செங்குந்தர் சங்கம். பிழைதிருத்தம்.

சென்ற பங்குனி மாதத்திய மித்திரனில் ௱எ ஆம் பக்கம் 'கோடம்பாக்கம் செங்குந்தர் சங்கம்' என்ற தலைப்பின்கீழ் முதல்பாராவில் 7, 8, 9 வரிகளிலுள்ள 'மேற்படி ஸ்ரீ ஸ்வாமிநாத தேசிகர் அவர்கள் தலைவராகவும், திரு. தி. தெய்வசிகாமணி முதலியார் உபதலைவராகவும்' என்பதை 'மேற்படி ஸ்ரீஸ்வாமிநாத தேசிகர் அவர்கள் போஷகராகவும், திரு. தி. தெய்வசிகாமணி முதலியார் தலைவராகவும்' எனப்படிக்கவும்.

10-4-28 ல் மாலை 7 மணிக்கு விசாலாக்ஷி விலாசத்தில் கூடிய கூட்டத்தில் புலியூர் ஸ்ரோத்தியதார் திரு. S. அரங்கநாதபிள்ளை யவர்களும் மேற்படி சங்கத்தின் போஷகராக நியமிக்கப்பெற்றனர்.

---

## தஞ்சை ஜில்லாவில் கிளர்ச்சி. அம்மாபேட்டையில் விழா.

தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த அம்மாபேட்டையென்னும் கிராமத்தில் மாசிமீ 22உ மாமகநக்ஷத்திரத்தில் மாரியம்மன் விழாக்கள் நடைபெற்றன. அக்காலத்தில் செங்குந்த மகாஜனங்கள் சேர்ந்து விருதுடன் ஊர்வலம் வந்து ஷை அம்மன் சன்னிதியில் உபந்நியாசங்கள் நடைபெற்றன.

வாலாஜா தாலூக்கா வாழைப்பந்தல் திருவாளர் க. சிவானந்த முதலியார் மாணவர் திரு. பச்சைமலை முதலியாரவர்களால் புலால் மறுத்தல், கடவுளை வழிபடுதல், நம்மித்திரனை வாசித்துக் கல்வியை வளர்த்தல், ஒட்டக்கூத்தர் வீரநாராயணர் முதலிய நம்முன்னோர் சரித்திரங்களை ஆராய்ச்சி செய்தல் முதலிய விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாக உபந்யசித்தார்.

ஷையார் தமது உபந்யாசத்தில் சைவர்கள் புலாலை

மறுத்து சிவகாருண்யமுடையவர்களாயிருத்தல் அவசியமென்று வற்புறுத்திக் காட்டியதனுல் அவ்வமயம் அநேகர் சுத்தபோஜன முண்ணும் சைவர்களானுர்கள். இன்னும் பலர் அத்தகைய சைவர்கள் ஆவார்களென்றும் தெரிகிறது.

வ. இராமசாமி முதலியார்,
அம்மாபேட்டை, தஞ்சை.

---

## திருச்சி ஜில்லாவில் கிளர்ச்சி.

### ஆண்டிமடம் செங்குந்தர் கூட்டம்.

14-4-28 இவ்வூரில் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அக்கூட்டத்திற்குப் பிரபல மிராஸ்தார்களில் ஒருவராகிய திரு. கு. சு. நமசிவாய முதலியார் அவர்கள் தலைமைவகித்தனர். அச்சமயம் ரிஷிவந்தியம் போர்டு ஸ்கூல் தலைமை உபாத்தியாயராகிய திரு. B. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் 'மரபினர் முன்னேற்றம்' என்னும் விஷயத்தைக் குறித்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்தி, இவ்வூரிலும் ஒரு செங்குந்தர் சங்கம் நிறுவி அதனைச் சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தோடு சேர்த்து அதன் சட்டதிட்டப்படி நடக்கவேண்டுமென்றும், செங்குந்தமித்திரனை ஒவ்வொரு செங்குந்தரும் ஆதரிக்க வேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசினுர். சிலர் சந்தாதாரராகச் சேர்ந்தனர்.

---

## திருநெல்வேலி ஜில்லாவில் கிளர்ச்சி

### வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

25-3-28 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு ஸ்ரீமான் ஆ. சிதம்பர முதலியாரவர்கள் தலைமையின் கீழ் கமிட்டி கூட்டப்பட்டது. மகமை வசூல் செய்து கணக்குப் பரிசீலனை செய்யப்பட்டது. மாணவர்களுக்குப் பரிசளிக்கப்பட்டது.

4½-மணிக்கு ஸ்ரீமான் ஆ. சிதம்பர முதலியாரவர்கள் தலைமையின்கீழ் 11-வது கூட்டம் நடைபெற்றது. கடவுள் வாழ்த்துப் பாடி, சென்ற கூட்டத்தின் ரிப்போர்ட்டு வாசிக்கப்பட்டுத் தலைவர் முன்னுரை முடிந்து பி. ராமசாமி யென்பவரால் 'தொண்டர்களின் பெருமை' யென்பதுபற்றியும் ஆ. முத்தையா யென்பவரால் 'செய்நன்றி மறவாமை' யென்பதுபற்றியும் தெளிவாய்ப் பேசப்பட்டது. தலைவர் பின்னுரை முடிந்து கடவுள் வாழ்த்துப்பாடிச் சபை கலையப்பெற்றது.

ஆ. மு. ஆறுமுக முதலியார்,
உபதலைவர்.

## கோவை ஜில்லாவில் கிளர்ச்சி.

### பவானி செங்குந்த சன்மார்க்க வாலிபர் சங்கம்.

26-3-28-ம் தேதி திங்கட்கிழமை இரவு 8 மணிக்குத் திரு. எ. ப. கு. ஆறுமுக முதலியாரவர்களின் தலைமையின்கீழ் அவர் வீட்டில் செங்குந்த வாலிபர்களின் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. மேற்படி கூட்டத்தில் ஒற்றுமை அவசியமென்பதும், நல்லொழுக்கத்தையும் கல்வியையும் நாம் நாடவேண்டுமென்பதும் அறிவாளிகளால் பேசப்பட்டன. பின்னர் "கல்வி அபிவிருத்தியின்பொருட்டும், நல்லொழுக்க சாதனத்தின் பொருட்டும், நமது குல முன்னேற்றத்தைக் குறித்தும், நமது வாலிபருக்குள் ஒரு சங்கம் நியமிக்கவேண்டும்" என்னும் விஷயத்தை திரு. ஜ. க. பெருமாள்சாமி முதலியார் பிரேரேபிக்க, திரு. பெ. இலட்சுமண முதலியார் ஆமோதிக்க அத்தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது. இச்சங்கத்திற்குக் கீழ்க் கண்டவர்கள் உத்தியோகஸ்தர்களாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றனர்.

தலைவர்.
திரு. வ. கு. அ. ந. அர்த்தநாரி முதலியார்.

உபதலைவர்.
திரு. B. A. கைலாச முதலியார்.

காரியதரிசி.
திரு. ஜ. க. பெருமாள்சாமி முதலியார்.

உபகாரியதரிசி.
திரு. S. P. சென்னியப்ப முதலியார்.

கஜான்சி.
திரு. K. S. இலட்சுமண முதலியார்.

### இதர தீர்மானங்கள்.

I. மெம்பர்கள் ஒவ்வொருவரும் வாரம் 1 அணு சந்தா செலுத்தவேண்டும்.

II. இதற்குமுன் நமது ஊரில் ஏற்பட்டுள்ள நமது செங்குந்தர் சங்கத்தையும், நமது தலைச் சங்கத்தையும் நமது சங்கம் ஆதரிக்கவேண்டும்

III. சங்கத்திற்கு வேண்டிய விதிகளைக் காரியதரிசியார் அடுத்தக் கூட்டத்திற்குத் தயார்செய்து கொண்டுவரவேண்டும்.

IV. கல்வி அபிவிருத்தியின்பொருட்டு மெம்பர் அனைவரும் தினந்தோறும் பஜனை மடத்திற்கு வரவேண்டும்.

V. இரண்டாவது கூட்டம் சனிக்கிழமை 31-3-28 தேதி நடத்தப்படவேண்டும்.

இங்ஙனம்,
ஜ. க. பெருமாள்சாமி முதலியார்.



### பவானி செங்குந்தர் சங்கம்.

1—4—28.

31-3-28 தேதி மாலை 5 மணிக்குச் செங்குந்த மகாஜனங்களின் பொதுக் கூட்டமொன்று பஜனைமடத்தில் கூடிற்று. குமாரபாளையம், சின்னப்ப நாயக்கன் பாளையம், ஜம்பை முதலிய ஊர்களிலிருந்து செங்குந்தர் பலர் வந்திருந்தனர். ஈரோட்டிலிருந்து திருவாளர்கள் ஜவுளிவியாபாரம் வ. மொட்டையப்ப முதலியார் அவர்களும், S. மீனாக்ஷிசுந்தர முதலியார் B.A., L.T., அவர்களும் விஜயம் செய்திருந்தனர். மேற்படி கூட்டத்திற்குத் திரு. செ. குருநாத முதலியார் தலைமை வகித்தார். அவர் தலைமையின்கீழ் ஈரோடு திருவாளர் S. மீனாக்ஷிசுந்தர முதலியார் B. A., L. T. அவர்கள் "செங்குந்தர் முன்னேற்றம்" என்ற விஷயத்தைப்பற்றி நீண்ட நேரம் யாவரும் சிரவணானந்த மடையுமாறு உபந்யாசம் புரிந்தனர். அதில், செங்குந்தர் குலவரலாறு, செங்குந்தரின் பண்டைய புகழ், உயர்வு, கல்வி, தற்காலத்தில் அவர்கள் அடைந்துள்ள க்ஷீணதசை இனி முன்னேற்ற மடைய வேண்டிக் கல்வி, ஒழுக்கம், ஒற்றுமை முதலியவைகளைக் கையாளுதல் ஆகிய விஷயங்களைப்பற்றிப் பேசி, முடிவில் வேனிற்கால விடுமுறையில் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜனங்களின் மகாநாடு ஒன்று கூட்டவேண்டிய ஆலோசனையை நம் செங்குந்த சிரேட்டர்கள் கொண்டிருக்கிறார்களென்றும், அக்கூட்டம் பவானியிலாவது ஈரோட்டிலாவது நடைபெறினும் பெறும் என்றும் உரை நிகழ்த்தினார்கள். மாணவன் திரு. ஜ. க. பெருமாள்சாமி வந்தனோபசாரம் கூறிமுடிக்கச் சபையோர்களுக்குக் கற்கண்டு தாம்பூலம் வழங்கப்பெற்றுக் கூட்டம் கலைந்தது.

இச்சங்கமானது செங்குந்தரின் கல்வியபிவிருத்தியின் பொருட்டு இராப்பள்ளிக்கூடம் ஏற்படுத்தற்குத் தாலூகா போர்டாரின் உதவியைப்பெற முயற்சி செய்கின்றது. கூடிய சீக்கிரம் இராப்பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்படும்.

இங்ஙனம்,
ஜ. க. பெருமாள்சாமி முதலியார்.

### பவானி.

### செங்குந்த சன்மார்க்க வாலிபர் சங்கம்.

1-4-28 தேதி. 2-வது கூட்டம் கூட்டப்பட்டது. அன்று திருவாளர்கள் B. S. பெரியசாமி முதலியார், கொ. ஆறுமுக முதலியார், B. K. சுப்பிரமணிய முதலியார் ஆகிய மூவர் மெம்பர்களாகச் சேர்ந்தனர். மெம்பர்களால் வசூலாகும் சந்தாப் பணங்களைத் தெய்வாராதனைக்கும், சங்கத்திற்கு வேண்டிய புஸ்தகங்களுக்கும், செலவிடலாமென, தீர்மானிக்கப்பட்டது. பின்னர் திருவாளர்கள் அ. கு கு. சி. மாரிமுத்துமுதலியார் அவர்கள், கொ. ஆறுமுக முதலியார் B. S. பெரியசாமி முதலியார், நாபழநியப்ப முதலியார், பெ. இலட்சுமண முதலியார் ஆகிய ஐவர் நிர்வாகக் கமிட்டி மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அன்று 16 பேர் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

### 3-வது கூட்டம்

7-4-28 தேதி மூன்றுவது கூட்டம் கூட்டப்பட்டது. 14 மெம்பர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். சந்தாத் தொகை செலுத்தியவர்களின் பெயரும், அத்தொகையில் ஏற்பட்ட செலவும் சபையோருக்கு வாசித்துக் காட்டப்பட்டன. வருஷப்பிறப்பு தினம் மெம்பர்களனைவரும் தெய்வாராதனைக்கு வரவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டதின் பேரில் அன்று மெம்பர்கள் ஒருமித்துத் தெய்வாராதனை செய்துவந்தனர்.

### 4-வது கூட்டம்.

14-4-28 தேதி 4-வது கூட்டம் கூட்டப்பட்டது. அன்று 13 மெம்பர்கள் வந்திருந்தனர். வ. கு. அ. ந. அர்த்தநாரி முதலியார் தலைமையின் கீழ் திரு. ஜ. க. பெருமாள்சாமி "அன்பு" என்னும் விஷயத்தைப்பற்றி உபந்யசித்தார். தெய்வம், அரசன், குரு, தாய் தந்தை மனைவி மக்கள் முதலியவர்களிடத்துச் செலுத்தும் அன்பைப்பற்றி விரிவாகப் பேசிப் பின்னர், நட்பு என்பதும் அன்பின் பிரிவெனக்கூறி வாலிபர் அனைவரும் நட்பினராக ஒற்றுமையுடனிருக்க வேண்டுமெனப் பேசிமுடித்தார். பின்னர் அடியிற்கண்ட தீர்மானங்கள நிறைவேற்றப்பட்டன:—

போலிச் செங்குந்தர்கள், செங்குந்தர் என்னும் பெயரைப் புனைந்து கொண்டிருப்பது தகாதென்று இக்கூட்டம் பலமாய்க் கண்டிக்கிறது. திருச்செங்கோட்டில் ஒரு பெரியார் அவர்களின் சங்கக் காரியதரிசியாருக்கு எழுதிக் கேட்டிருக்கும் வினுக்கள் சரியென்றும் தீர்மானிக்கப்பட்டது. சைவ வினுவிடை இரண்டு பாகமும் வாங்கலாமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இங்ஙனம்
ஜ. க. பெருமாள்சாமி முதலி,
காரியதரிசி, செங்குந்த வாலிபர் சங்கம், பவானி.

## மதுரையில் கிளர்ச்சி

### மதுரை செங்குந்த முதலியார் வாலிபர் சங்கம்.

15-4-28-ல் ஷை சங்கம் ஸ்தாபித்திருக்கும் மதுரை பாலம் ஸ்டேஷன்ரோட் செங்குந்தமுதலியார் மடத்தில் திரு. P. V. முத்துக்கருப்ப முதலியாரவர்கள் தலைமையின்கீழ் ஒரு கூட்டம்கூடிற்று. கடவுள் வணக்கம் பாடப்பெற்றுப் பின் திரு. ச. வெள்ளைச்சாமிமுதலியார் 5-4-28 தமிழ்நாடு பத்திரிகையில் 7-ம் பக்கத்தில் கோவை N. பழனியப்பமுதலியார் எழுதிய கட்டுரையைப்படித்துக் காட்டி அது விஷயமாக கண்டனம் செய்யும்படி பிரரேபிக்க, திரு. K. இருளாண்டி முதலியார் ஆமோதித்தார். S. முத்த முதலியார் ஆதரித்தார். திரு. S. குருபாத முதலியார் மதுரையில் நடந்த பார்ப்பனரல்லாதார் மகாநாடு விஷயமாகத் தவறு ஊக்கத்துட னுழைத்துவந்த பெரியாரான காலஞ்சென்ற ஸ்ரீமான் M. T. சுப்பிரமணிய முதலியார் காலஞ்சென்றதற்காக வருத்தப்படுவதுடன் அவரது பிரிவில் வருந்தும் திரு. பி. டி. ராஜனுக்கும் அனுதாபம் தெரிவிக்கும்படி திரு. சி. ம. கந்தசாமி முதலியார் பிரரேபிக்க, திரு. M. ராமசாமி முதலியார் ஆமோதித்தார். மாணவர் அங்குச்சாமி நமது சங்கத்தின் ஆதரவில் ஷை மடத்தில் ஸ்தாபித்திருக்கும் இராப்பள்ளிக்கூடத்துக்கு ஓர் உபாத்தியாயர் நியமிக்கவேண்டியதைப்பற்றியும் கல்வியின் அவசிய மென்பதுபற்றியும் திரு. K. பழனிமுதலியார் பிரரேபிக்க, திரு. S. குருபாத முதலியார் ஆமோதித்தார். பிறகு அடியில்கண்ட தீர்மானங்களையும் கேள்விகளையும் பத்திரிகைகளுக்கும் நமது தலைச் சங்கத்துக்கும் அனுப்பும்படி ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது.

#### தீர்மானங்கள்.

1. கோவை N. பழனியப்பமுதலியார் தமிழ்நாடு பத்திரிகையில் 5-4-28௳ 7-ம் பக்கத்தில் ஆழ்ந்த ஆராய்ச்சி இல்லாமலும் உண்மைக்கு மாறாகவும் பொய்யும் அவதூறுமான கட்டுரைகளை எழுதியிருப்பதால், அதிலுள்ள வியாசங்களையும் அதன் கருத்துக்களையும் பார்த்துப் பொது ஜனங்கள் ஏமாறுமலிருக்கும் பொருட்டு இக்கூட்டம் அவற்றைப் பலமாகக் கண்டிக்கிறது.

2. செங்குந்தர்களென்பது,—பகைவர்களின் உதிரத்தால் தோய்ந்து சிவந்திருந்தால் அதற்குச் செங்குந்தம் எனப் பெயராகியது. சோழநாட்டில் முசுகுந்த சக்கரவர்த்தியிடம் படைத்துணைவராகவும் அமைச்சருகவுமிருந்து செங்குந்தர்களென்னும் சிறப்புப்பெயர்களுடன் வாழ்ந்து வந்தார்கள். தவிரவும் வீரவாகுதேவர் தலைப்பெண் சித்திரவல்லியை முசுகுந்த சக்கரவர்த்தி மணம் செய்துகொண்டிருக்கிறார். நவவீரர்களுக்கும் அவர்களின் புத்திரபௌத்திரர்களுக்கும் அவ்வழிவந்த மக்களுக்கும் மட்டுமே செங்குந்தர்களென்பது பொருந்துமேயல்லாமல் அதற்கு மாறுபட்ட தாசிமக்களுக்குப் பொருந்தாதென்பதை இக்கூட்டம் பலமாக வற்புறுத்துகிறது.

3 7-10-27-ல் செங்குந்தர் சமூகமென்ற திராவிடன் தலைஅங்கத்தில் கோவிலுக்குப் பெண்களைப் பொட்டுக்கட்டிவிடுகிற வழக்கம் கோயமுத்தூரில் போலிச் செங்குந்தர்களில் ஏதோ சில குடும்பங்களில் மாத்திரம் இருந்துவருகிறதாகத் தெரிய வருகிறதென்று துலக்கப்பட்டிருக்கிறது. அப்படிச்சிருக்க தமிழ்நாடு பத்திரிகையில் மதுரையிலும் செங்குந்தர்களில் தேவதாசிகளிலிருந்து வருவதைக் காணலாமென்று எழுதியிருப்பதை இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது. கோவை போலிச்செங்குந்தர்கள் முன்னேற்றமடைவதிலோ அவர்களின் தீய ஒழுக்கங்களை நீக்கிக்கொள்வதிலோ எங்களுக்கு ஆக்ஷேபனை யில்லை. அதற்காக எங்களை வீண் வம்புச் சண்டைக் கிழுத்து எங்களிடமில்லாத துர்பழக்கம் இருந்ததாகவும் இருப்பதாகவும் பொருள்படும்படி சொல்லியும் எழுதியும் வருவதை இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது. எங்கள் சங்கம் தோன்றிய காலமுதல் போலிச் செங்குந்தர்களின் வெளியீடுகளைக் கண்டித்து வந்திருக்கிறோம். தவிரவும் 'அருணகிரி' பத்திரிக்கையில் வெளியிடப்பட்டிருந்த வியாசங்களுக்குப் பதில் தெரிவிக்கும்படி 12-3-27-ல் இச் சங்கத்தின் தலைவரால் எழுதிய லெட்டருக்கு நாளதுவரை யாதொரு தகவலும் கிடைக்கவில்லை. இறக, இப்போது சென்னைச் சங்கத்தாரும் அவர்களால் ஆட்டிவைக்கும் பதுமைச் சங்கங்களாகிய கிளைச் சங்கங்களும் இதுகாறும் எந்த மூலையில் தூங்கிக்கிடந்தார்களென்பதையும், மதுரையிலும் செங்குந்தர்களில் தாசித்தொழிலிருப்பதாகவும் எழுதி இருப்பதையும் இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது.

நமது பெரியாரும் பொதுஜன சேவையில் தவறு ஊக்கமுடையவருமான திரு. எம். டி. சுப்பிரமணிய முதலியாரவர்கள் காலஞ்சென்றதை நினைத்து நாம் வருந்துவதையும், அவரது குடும்பத்தாரான திரு. பி. டி. ராஜனுக்கு அனுதாபசெய்தியையும் இக்கூட்டம் தெரிவித்துக்கொள்ளுகிறது.

நமது சங்கத்தின் ஆதரவில் நடந்துவரும் இராப் பள்ளிகூடத்துக்குத் திரு. மு. முத்துக்குமார முதலியாரவர்களை உபாத்தியாயராக நியமிக்கச் செய்து மாதம் 1க்கு 7-0-0 சம்பளம் கொடுப்பதாகவும், சங்கத்துக்கு மூலதனமில்லாததால் 3மீக்கு திரு. P. V. முத்துக்கருப்பமுதலியாரையும் திரு. K. இருளாண்டி முதலியாரையும் ஷை ரூ. 7-0-0 கொடுத்துவரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.



கோவை N. பழனியப்ப முதலியாருக்கு:—தாங்கள் தமிழ்நாடு பத்திரிகையில் எழுதிய வியாசங்களில் தாங்களும் தங்கள் சங்கத்தவரும் உண்மைத் தத்துவத்தை உணர்ந்தவர்கள் என்றும் எழுதி இருக்கிறீர். அதன்படி உண்மையை ஒளியாமல் வெளியிடுவது உண்மையானால் தங்களுக்கும் தங்கள் சங்கத்துக்கும் நன்றாய்த் தெரிந்திருப்பதும் தெரியக்கூடியதுமான அடியிற்கண்ட கேள்விகளுக்குத் தக்கமுறையில் பதிலனுப்பும்படி கோரப்படுகிறது. (கேள்விகள்) 1. பிதா இன்னுரென்று தெரியாத சேய் எப்படி சாதி கண்டுபிடிப்பது?

(2) பார்ப்பனரும் பார்ப்பனரல்லாதாரும் சம்மந்தப்பட்டுப் பிறக்கும் ஒரு சேய் யாரைத் தகப்பனென்று கொள்வது? தாய்வழியில் ஜாதிகண்டு பிடிப்பதா?

(3) 27-9-27ல் மகாத்மா காந்தியை வர்ணாச்ரம தர்மத்தைப்பற்றி ஸ்ரீமான் ஷண்முகஞ்செட்டியார் பேட்டிகண்டு பேசிய காலத்தில், கலப்பு விவாஹத்தின் காரணமாகப்பிறந்தவனின் வர்ணம் யாது? என்ற கேள்விக்கு அவனுடைய தந்தையின் வர்ணம் யாதோ என்று பதிலளித்திருக்கிறாரல்லவா? கோர்ட்டுகளிலும் தஸ்தாவேசுகளிலும, தாசிகளின் சந்ததியார் வியாஜ்ஜியம் செய்தாலும், தஸ்தாவேசுகள் எழுதி வாங்கினாலும், தம்முடைய பெயரும், தாயாருடைய பெயரும் துலக்கப்படுவதே தவிர தகப்பனுடைய பெயர் துலக்கப்படுகிறதா? இப்படியிருக்க தாசிமக்களுக்கு எந்த சாதிப்பெயர் பொருந்தும்?

ச. வெள்ளைச்சாமி முதலியார்,
உபகாரியதரிசி.

---

## இலங்கையில் கிளர்ச்சி.

### யாழ்ப்பாணம் நல்லூர் செங்குந்தர் கூட்டம்.

பிரபவஹு மாசிமீ 20௳ (3-3-28) யாழ்ப்பாணம் நல்லூர் திருநெல்வேலியிலிருக்கும் உண்மைச் செங்குந்தர் சங்கமொன்று கூடிற்று:—அத்தருணம் கோயம்பத்தூர் போலிச் செங்குந்தரைப்பற்றிச் சில வியாசங்கள் வாசிக்கப்பட்டன. அப்போது உண்மைச் செங்குந்த அபிமானிகள் சிலர் சொல்லியதாவது: கோயம்பத்தூர் போலிச் செங்குந்தர்கள் ஆஸ்திகளைப் பற்றிய சாசனத்தையும், தர்ஸ்டன் துரையும் இன்னும் சிலரும் எழுதிய புஸ்தகங்களையும் ஆதாரமாகக் காட்டுகிறார்கள். யாழ்ப்பாணத்தில் முற்காலத்தில் ஆதீனங்களைபபற்றிய சாசனங்களில் இன்ன சாதியில் இன்ன பிரிவிலுள்ளவர்களென்று விபரமாயெழுதிவரப்பட்டது. நாகரிகம் மேற்பட்ட இக்காலத்தில் அவைகளைப் பார்த்து வெட்கித்து அடியோடு சிதைத்துப் புதுச் சாசனங்களை உண்டாக்கி அதில தங்கள் மனம்போனபடி எழுதுவித்தும், ஆதியிலுள்ளபடியழைப்பதால் இது சரியான ஆதாரமலல. தர்ஸ்டன் துரை முதலியோருக்குத் தென்னிந்தியாவிலுள்ள சாதிகளைப்பற்றித் தெரியவராது. இன்னொருவர் சொல்ல எழுதவேணுமாகையால், சிலர் தங்கள் இஷ்டத்தின்படி எழுதுவித்திருக்கலாமென நம்ப இடமிருத்தலால் இதுவும் சரியான ஆதாரமல்ல.

யாழ்ப்பாணக் குடியேற்றத்தில் தேவதாசி வகுப்பாரும் வந்ததாகத் தெரிகிறது. அவர்கள் அப்படியே தம் தொழிலைச் செய்து தேவதாசிகள் நட்டுவரென்றழைக்கபடுகிறார்களேயன்றி முதலியாரெனருவது செஙகுந்தரென்ருவது அழைக்கும் வழக்கம் ஒருபோதுமில்லை.

யாழ்ப்பாணம் கைக்கோளாது குடியான பிள்ளைகளைக் கைக்கோள வண்ணன், கைக்கோள அம்பட்டன், கைக்கோளப் பறையனென அழைத்தல் வழக்கம். இதுபோல அவர்களையும் கைக்கோளத்தாசிகளென்றும் கைக்கோள நட்டுவரென்றும் அழைத்திருககலாம்.

யாழ்ப்பாணம் உண்மைச் செங்குந்தர் மரபில் ஒரு பெண்ணையாவது ஆடவனையாவது வேறு சாதியார் மந்திர தந்திரத்தினாலாவது அல்லது வேறு உபாயத்தினாலாவது சேர்ந்து சுதந்தியுண்டேல் அவர்களைத் தம்முடன் சேர்த்தல் தங்கள் வீரம் புகழ் அபிமானம் முதலியவைகளுககுத் தவறென்று தங்களுடன் சேராது பிரித்துவைத்திருப்பதாக ஆராய்ச்சியிற் றெரிய வருகிறது. செங்குந்தருக்குத் தாசிதொழில் வழக்கமாக உள்ளதெனருல் ஒருபோதும் பிரிததுவைக்க மாட்டார்கள். தங்கள் சாதிக்குரிய தொழிலென்று சேர்த்துக் கொள்ளுவார்கள்.

இங்கே கூறிய பலவகை நியாயத்தாலும் அவர்கள் செங்குந்தரென்பதற்குச் சரியான ஆதாரமில்லாமையால் அவர்களை உண்மைச் செங்குந்தருடன் சேராது பலமாகக் கண்டிக்கும்படி தென்னிந்திய மகாஜனசங்கத்தாரை யாழ்ப்பாண சங்கத்தார் கேட்கின்றார்கள்.

சங்கத்தார் சம்மதிப்படி சபை காரியதரிசிகள் பூ தருமலிங்க உபாத்தியாயர், க. கணேச முதலியார்.

சீமான் சௌகார் சார்ந்தா ராமலிங்க முதலியாரவர்களது திருக்குமாரர்களாகிய திரு. சார்ந்தா. ரா. சின்னையா முதலியார், யூனியன் பிரசிடெண்டு திரு. சார்ந்தா. ரா. மாணிக்க முதலியார், தாலூக்கா போர்டு மெம்பரும் காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதஸ்வாமியார் ஆலய தர்மகர்த்தருமாகிய திரு சார்ந்தா. ரா. தங்கவேலு முதலியார் முதலியோரும், வித்வான் திரு. சோவித்த முதலியார் திரு குட்டியப்ப முதலியார் முதலிய பலரும் அன்போடு உபசரித்தனர். அன்று மாலை சென்னையிலிருந்து திரு. மா. அ. கனகசபை முதலியாரவர்களும் வந்தனர். மறுநாள் 6-4-28ம் தேதி மாலை, சந்தி மண்டபத்தில் ஒரு பெருங் கூட்டம் கூட்டப்பட்டது. சுமார் 600 செங்குந்தர் வந்திருந்தனர். கூட்டத்திற்கு வித்வான் முனிசாமி முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். தலைவர் முன்னுரை கூறியதும், திருவாளர்கள் தி. அ. சண்முக முதலியார், மா. அ. கனகசபை முதலியார், பி. செ. மாணிக்கவாசகமுதலியார், கோவிந்த முதலியார் ஆகியோர் செங்குந்தர்முன்னேற்றமடைய வேண்டியதின் அவசியத்தைக் குறித்து மிகவிரிவாகச் சொற்பெருக்கிட்டனர். பிறகு தலைவர் முடிப்புரை கூற இரவு 11 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது. பத்திரிகைக்கு அநேகர் சந்தாதாரராகச் சேர்ந்தனர்.

### திருவத்திபுரம்.

7-4-28ம் தேதி காலை பனப்பாக்கத்திலிருந்து திருவாளர்கள் மா. அ. கனகசபை முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார், தி. அ. சண்முக முதலியார் ஆகிய மூவரும் புறப்பட்டு அன்று மாலை 3 மணிக்குத் திருவத்திபுரம் அடைந்தனர். அங்கு ஐயங்கார்குளம் திரு. பொன்னுசாமி முதலியாரவர்களும் வந்து பிரசாரகர்களோடு கலந்துகொண்டார். அவ்வூர் பிரபலஸ்தர்களாகிய திருவாளர்கள் அண்ணாமலை முதலியார், பரசுராம முதலியார் முதலியவர்கள் பிரசாரகர்களை உபசரித்தனர். அன்றிரவு 8 மணிக்குச் செங்குந்தர்களின் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. திரு. கனகசபை முதலியாரவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்தனர் கடவுள் வணக்கத்திற்குப் பின் திருவாளர்கள் தி. அ. சண்முகமுதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார், ஐ. க. பொன்னுசாமி முதலியார் முதலியோர் முறையே செங்குந்த சமூகத்திற்கோர் விண்ணப்பம், பத்திரிகைப் பெருக்கமே சமூக விருத்திற்கு முதற்காரணம், கல்வி முதலிய பொருள்பற்றிச் சொற்பெருக்கிட்டனர். தலைவரவர்கள் முடிப்புரை கூறியபின் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 1 மணிக்குக் கூட்டம் கலைந்தது. செங்குந்த மித்திரனுக்கு 50 புதுசந்தாதாரர்கள் சேர்ந்தனர்.

### பரித்திபுரம்சாவடி.

3-4-28 ம் தேதி காலை பிரசாரகர்கள் மூவரும் வயூர்ப்பேட்டையை யடைந்தனர். அங்குத் திருவாளர்கள் க. சின்னசாமிமுதலியார், எம். லோகநாத முதலியார் முதலிய செங்குந்தஅறிஞர்கள் அவர்களை அன்புடன் உபசரித்தனர். அன்று மாலை 6 மணிக்குச் சாவடியில் செங்குந்தர் பொதுக்கூட்டம் குழுமியது. சுமார் 1000 செங்குந்தர்கள் வந்திருந்தனர். கடவுள் வாழ்த்துப் பாடியதும் திரு. மா. கனகசபை முதலியாரவர்கள் தலைமை வகித்துக் கூட்டம்கூடியுள்ளதின் நோக்கத்தினை யெடுத்தியம்பி திரு. ஐ. க. பொன்னுசாமி முதலியாரவர்களைப் பேசும்படிக் கேட்டுக்கொண்டார். பிறகு பொன்னுசாமி முதலியாரவர்கள் ஒட்டக்கூத்தர் மாண்பு என்ற விஷயமாக நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தினர். பின்பு திரு. தி. அ. சண்முக முதலியாரவர்கள் 'நமது கடமை என்பது பற்றியும், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் 'செங்குந்த சமூகமும் உலகப் புரட்சியும்' என்பதுபற்றியும் விரிவுரை செய்தனர். தலைவரவர்கள் ஒவ்வொருவருடைய உபந்நியாசத்தையுந் தழுவி சிறிது நேரம் பேசிய பின்பு வந்தனோபசாரம் கூறப்பட்டு, இரவு 10 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது. செங்குந்த மித்திரனுக்கு 30 புது சந்தாதாரர்கள் சேர்ந்தனர். திரு, க. சின்னசாமி முதலியாரவர்கள் தமது கடையில் சங்கத்தின்பொருட்டு மகமை ஏற்படுத்தி யிருப்பதாகக் கூறி, சென்ற மாதத்தில் சேர்ந்த ரூபாய் ஒன்றரை யாகிய மகமைப்பணத்தையும் அன்புடன் அளித்தனர். அது அக்கூட்ட அறிக்கைப் பத்திரத்தின் அச்சுச்செலவிற்கு உதவியது. இவர்களது அன்பு பெரிதும் போற்றற்பாலது. மற்றைய வியாபாரிகளும் மகமை ஏற்படுத்தி உபசரித்து நமது தலைச்சங்கத்தை விருத்தி செய்யவேண்டுகிறோம்.

### அசனம்மாபேட்டை.

நமது தலைச்சங்கப் பிரசாரகர் திரு தி. அ. சண்முக முதலியார் அவர்கள் 9-4-28 மாலை 2-மணிக்குத் திருவோத்தூரினின்றும் புறப்பட்டு அசனம்மாபேட்டைக்கு வர இரவு 8-மணிக்கு நமது செங்குந்த மக்கள் பொதுக்கூட்டம் ஒன்று நடுத்தெருவிலுள்ள பஜனை மடத்தில் கூடிற்று. அது சமயம் நமது செங்குந்தகுலமக்கள் சுமார் 400 பேர் மிக்க பேரூக்கத்தோடு கூடியிருந்தார்கள். அதுகாலை மேற்படி கிராமத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிராநின்ற ஸ்ரீஇராமநாதீஸ்வரர் தேவஸ்தான தருமகர்த்தரில்ஒருவரும் குலாபிமானம் மிக்குள்ளவருமான திரு. தி. செங்கல்வராய முதலியார் தலைமை வகிக்க நமது தலைச்சங்கப் பிரசாரகர் திரு. தி அ. சண்முக முதலியார்அவர்கள் 'நமது முன்னேற்றம்' என்னும் விடயத்



தைப்பற்றி 2-மணிநேரம் ஒரு சொற்பெருக்கு நிகழ்த்தினர். பின்பு திரு. D. நரசிம்ம முதலியார் (எப். ஏ. (மாணவர்) வாலிபர் கடமை யென்பதைப்பற்றி வெகு அழகாகவும் அநேக உதாரணங்களைக் காட்டியும் நமது ஊரில் ஒரு வாலிபசங்கம் அவசியம் இருத்தல் வேண்டுமெனக் கேட்போர் மனத்தில் பசுமரத்தாணி போல் பதியும்படி உபந்யசித்ததின் பயனாக அவ்வூரிலுள்ள வாலிபர்களெல்லாம் ஒரு வாலிப சங்கம் இருக்கவேண்டுமெனத் தீர்மானித்தார்கள். உடனே அச்சங்கத்திற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

திருவாளர்கள் மே. தி. பெர்ற்பாத முதலியார் அவர்கள் (நூல்ஜவுளி வியாபாரம்) தலைவராகவும், K. S. குப்புசாமி முதலியார் (ஆராத்திரிவேலூர் கிராமமுனிசிப்) மே. சி. படிகலிங்க முதலியார், S. V. குப்புசாமி முதலியார் (ஜவுளி வியாபாரம்,) மு அப்பாதுரை முதலியார் (ஜவுளி வியாபாரம் புதுப்பேட்டை) உப தலைவராகவும், பு முருகப்ப முதலியார் (ஜவுளிவியாபாரம்) பொருட்காப்பாளராகவும், மே.ச. நடேச முதலியார் (ஜவுளி வியாபாம்) நல். அண்ணாமலை முதலியார் (பஞ்சாயத்துப் பிரஸிடெண்டு) அமைச்சர்களாகவும், இன்னும் இருபத்தொருவர் நிருவாக அங்கத்தினராகவும் ஏகமனதோடு தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

### தீர்மானங்கள்.

1. இந்த அசனம்மாபேட்டைச் செங்குந்த வாலிப சங்கத்தைச் சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கிளைச் சங்கமாக்க வேண்டும்.

2. இச்சங்கத்திலிருந்து வருடம் ஒன்றுக்குத் தலைச் சங்கத்திற்கு ஐந்து ரூபாய் கட்டணம் செலுத்தவேண்டும்.

3. நமது ஊரில் சென்ற மூன்று மாதமாக நடைபெற்றுவரும் இராப் பாடசாலையை இந்த வாலிப சங்கத்தின் சார்பில் நடத்தவேண்டியது.

4. நமது ஊரிலுள்ள ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் வருடம் ஒன்றுக்கு நான்கு அணா சந்தா செலுத்தவேண்டும்.

5. பிரதி அமாவாசைதோறும் வாலிப சங்கக் கூட்டத்தை நடத்தவேண்டும்.

பிறகு இரவு 1 மணிக்கு K. V. ஆறுமுகம் முதலியார் தலைவருக்கும் உபந்யாசகர்களுக்கும் வந்தனம் கூறக் கூட்டம் இனிது நிறைவேறியது என மேற்படி சங்கத்தின் காரியதரிசியவர்கள் எழுதுகின்றனர்.

மீண்டும் 18-4-28 காலை நமது தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப் பிரசாரகர் திருவாளர் தி. அ. சண்முக முதலியார் அவர்கள் சென்னையினின்றும் புறப்பட்டுச் செய்யாறு தாலுக்கா அசனம்மாபேட்டை கிராமத்தை யடைய 19-4-28 இரவு 9 மணிக்கு ராமனுஜ ஈஸ்வரன் ஆலயத்தில் செங்குந்தக்குல பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அது சமயம் திருவாளர் தி. செங்கல்வராய முதலியாரவர்கள் தலைமை வகிக்க திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் "அறுமுகச்சிவனார் திருஅவதாரமும், நவவீரர் உற்பவமும், செங்குந்தர் வம்சாவளியையும்" பற்றி பல உதாரணங்களோடு நீண்ட நேரம் ஒரு சொற்பெருக்கும், திரு. D. நரசிம்ம முதலியார் எப். ஏ. மாணவர் அவர்கள் "செங்குந்தர் ஒற்றுமை" என்னும் விடயத்தைப்பற்றிய உபந்யாசமும் நிகழ்த்த இரவு 1 மணிக்குச் சபை இனிது நிறைவேறியது.

### வடமணப்பாக்கம்.

19-4-28 மாலை 4 மணிக்கு பிரசாரகர் திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்களும், திருவாளர்கள் K. S. குப்புசாமி முதலியார் அவர்களும், M. T. பெர்ற்பாத முதலியார் அவர்களும், P. M. முருகப்ப முதலியார் அவர்களும், M. S. நடேசமுதலியார் அவர்களும் D. நரசிம்ம முதலியார் எப். ஏ. மாணவர் அவர்களும், மாலை 5-மணிக்கு வடமணப்பாக்கம் கிராமத்திற்குச் சென்று அவ்வூர் பஜனை மண்டபத்தில் நமது செங்குந்தக்குலப் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டினர். அதற்கு நமது செங்குந்தகுலத்தவரும் இதர ஜாதியாருமாக சுமார் 500 கனவான்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள். அது சமயம் அக்கூட்டத்திற்கு திரு. தோ. வெங்கடேச முதலியார், தலைமைவகிக்க திரு. P. M. முருகப்ப முதலியார் அவர்களால் கடவுள் வாழ்த்தாகத் தேவாரம் ஓதப்பெற்றபின், திரு. தி. அ. சண்முகமுதலியார் "சமூகச் சீர்திருத்தம்" என்பதைப்பற்றியும், திரு. D. நரசிம்ம முதலியார் "ஒற்றுமை" என்பதைப்பற்றியும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியதின் பயனாக இவ்வூரில் ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபிக்கவேண்டுமென இவ்வூரார் கேட்டுக்கொண்டதற் கிணங்க, 'வடமணப்பாக்கம் செங்குந்த சங்கம்' எனப்பெயர் வைத்து ஒரு சங்க ஸ்தாபனம் செய்து அச்சங்கத்திற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களை நியமனஞ்செய்தார்கள்.

திரு. கி. வயிரவ முதலியார் அவர்கள் தலைவராகவும், திருவாளர்கள் பூபால முதலியாரவர்கள், சா. வ. பரசுராம முதலியாரவர்கள் துணைத்தலைவர்களாகவும், திருவாளர்கள் பு. சடையாண்டி முதலியாரவர்கள்,

சி. எல்லப்ப முதலியாரவர்கள் காரியதரிசிகளாகவும், திரு. கி. வெங்கடாசல முதலியாரவர்கள் பொக்கிஷதாரராகவும், மற்றும் 18 இதர நிருவாக அங்கத்தவரும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

### நிறைவேறிய தீர்மானங்கள்.

(1) இச்சங்கத்தைச் சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கிளைச்சங்கமாகச் சேர்க்கவேண்டியது.

(2) சென்னையிலுள்ள நமது தலைச் சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு வருடப்பிரதிவருடம் தைமாதத்தில் சட்டணமாக ரூ. 2 செலுத்திவரத் தீர்மானிக்கின்றது.

(3) பிரதிமாதம் அமாவாசைதினம் சங்கம்கூடி நமதுகுறைகள் என்ன என்ன உண்டோ அதை நமது தலைச் சங்கத்திற்கு எழுதக்காரியதரிசிக்கு உத்திரவு அளிக்கிறது.

பிறகு செங்குந்தமித்திரனுக்கு 10 பேர்கள் சந்தாநேயாராகச் சேர்ந்தார்கள். இரவு 11 மணிக்குத் தலைவருக்கும் உபந்யாசகருக்கும் வந்தனோபசாரம் கூறப்பெற்றுச் சபை இனிது நிறைவேறியது. அக்கிராமவாசிகளும் திரு. கி. வயிரவமுதலியாரும் நமது பிரசாரகர்களை வரவேற்று உபசரித்தமைக்குச் செங்குந்த உலகம் நன்றியை செலுத்தக் கடமையையுடைய்து.

### கலவை.

22-4-28 ல் மாலை 2 மணிக்குத் திரு. தி. அ. சண்முக முதலியாரோடு திருவாளர்கள் N. அண்ணாமலை முதலியாரும், P. M. முருகப்ப முதலியாரும், K. S. குப்புசாமி முதலியாரும், D. நரசிம்ம முதலியாரும் கல்வை கிராமத்திற்குச் சென்று திரு. காளத்தி முதலியார் அவர்களால் வரவேற்று உபசரிக்கப் பெற்று இரவு 9 மணிக்கு நடுத்தெருவில் கூட்டிய கூட்டத்திற்கு நமது செங்குந்த குலமக்கள் சுமார் 200 பேருக்குக் குறையாமல் வந்திருந்தார்கள். அக்கூட்டத்தாருள் இருகஷியிருந்தும் நமது குலமுன்னேற்றங் கருதி ஒத்திருந்தது பாராட்டற்பாலது. அக்கூட்டத்திற்குத் திரு. சு. சுப்புராய முதலியார் தலைமை வகிக்க திரு. தி. அ. சண்முகமுதலியார் "நமது சங்கமும், பத்திரிகையும்" என்பதைப்பற்றியும், திரு. D. நரசிம்மமுதலியார் எப். எ. மாணவர் அவர்கள் "கல்வி, ஒற்றுமை," என்பதைப்பற்றியும் வெகு அழகாகவும் பொருத்தமாகவும் பேசியதின் பயனாசகிளைச்சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பெற்றுச் "கலவைச் செங்குந்த சங்கம்" எனப் பெயர்வகிக்கப் பெற்றது. உத்தியோகஸ்தர்களும் ஏற்பாடு செய்யப் பெற்றனர்.

திரு. கு. கந்தசாமி முதலியாரவர்கள் தலைவராகவும், திரு. சு. சுப்புராயமுதலியாரவர்கள் துணைத் தலைவராகவும், திருவாளர்கள் பொன்னுசாமி முதலியாரவர்கள், காளத்தி முதலியாரவர்கள் காரியதரிசிகளாகவும், திரு. சுந்தரேசமுதலியார் பொக்கிஷதாரராகவும், மற்றும் இதர நிர்வாக அங்கத்தினர் 10 பேரும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

### நிறைவேறிய தீர்மானங்கள்

1. பிரதி அமாவாசைதினந்தோறும் இச்சங்கம் கூடவேண்டியது.

2. இச்சங்கமானது சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு வருடம் ஒன்றுக்கு ரூபாய் ஐந்து சட்டணமாகச் செலுத்த சம்மதிக்கிறது.

3. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் வருடம் ஒன்றுக்கு அணா (4) நான்கு சந்தா செலுத்த வேண்டியது.

4. இச்சங்கம் இவ்வூரிலுள்ள செங்குந்த மடத்தில் கூடவேண்டியது.

இரவு 1-மணிக்கு காரியதரிசியினால் பிரசாரகருக்கும் மற்றுள்ளவருக்கும் வந்தன உபசாரங் கூறப்பெற்றுக் கூட்டம் இனிது நிறைவேறியது.

திரு. தி. அ. சண்முக முதலியார் (23-4-28) காலை 7-மணிக்கு ஆரத்திரி வேலூர்கிராமத்திற்குச் சென்று திரு. புண்ணியகோட்டி முதலியாரைப் பார்த்துச் சிலரைச் செங்குந்த மித்திரனுக்குச் சந்தாநேயாராகச் சேர்த்துக்கொண்டு (24-4-28) இரவு 8-மணிக்குத் தெங்கழனி புதுப்பேட்டை கிராமத்திற்குச் சென்று அங்கு கூடிய செங்குந்த கூட்டத்தில் வன்னி கிணறு இலிங்கம் அழைத்த திருவிளையாடலும் கற்பு என்னும் உபந்யாசமும் செய்துவிட்டு (25-4-28) ஐயங்காரகுளம் சென்று சில சந்தாதாரையும் சேர்த்துக்கொண்டு (26-4-28) இரவு 10-மணிக்குச் சென்னைவந்து சேர்ந்தார். நமது பிரசாரகர்களை வரவேற்று உபசரித்த நமது செங்குந்த குலமக்களுக்கு நன்றியைச் செலுத்த தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் கடமைப் பட்டிருக்கிறது.

மேமூ 5-ம௳ நமது பிரசாரகர்கள் தென்னாட்டுக்குப் புறப்படுகின்றனர். இப்பிரயாணத்தில் அவர்கள் புதுச்சேரி,தம் தென்னார்காடு, தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் நம்மவர் வதியும் முக்கியமான இடங்களுக்கும் சென்று பிரசாரஞ்செய்வர். அவ்வவ்விடங்களிலுள்ள குலாபிமானிகளையும் செங்குந்தர் சங்கங்களையும் அவர்கள் பிரசாரத்துக்கு வேண்டிய உதவி புரியுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.



## செய்தித்திரட்டு.

### சென்னிமலை யூனியன் போர்டு பிரசிடெண்டு தேர்தல்.

சென்ற 26-3-28 தேதி திங்கள்கிழமை மாலை சென்னிமலை யூனியன் போர்டு ஸ்பெஷல் மீட்டிங்கில் ஷை யூனியன் போர்டு மெம்பரும் சென்னிமலை உண்மைச் செங்குந்தர் சங்கக் காரியதரிசியுமான மிஸ்டர் மு. பழனியப்ப முதலியார் அவர்கள் எல்லோராலும் ஏகமனதாக ஷை யூனியன் பிரசிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.—ஒரு நிருபர்.

### சிவகிரியில் திருவிழா.

சுமார் 10 வருஷ காலமாய் நின்றிருந்த ஸ்ரீ வேலாயுத சுவாமியின் ரதோற்சவத்தை ஈரோடு தாலூகா போர்டு பிரசிடெண்டும் ராய் பஹதூரும் குடிகளின் பட்டம் வகித்தவருமான என். நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியாரின் நன் முயற்சியாலும் இவ்விடம் தேவஸ்தான தர்மகர்த்தா மிராஸ்தாரர் பாலமேடு குமாரசாமிக் கவுண்டர் அவர்களாலும் தர்மகர்த்தா மிராஸ்தாரர் வலசு லிங்கண கவுண்டர் அவர்களபிமானத்தாலும், குடிகளின் ஒற்றுமையாலும் நாளது சித்திரைமீ 22௳ ஆகிய சித்திரா பௌர்ணமி தினத்தில் புதிதாய் அமைத்த ரதோற்சவமும் 25௳ தரிசனமும் நடைபெறுவதால் இதைக்கண்ணுறும் அன்பர்கள் ஷை உற்சவத்தை வந்து தரிசித்து ஆண்டவன் அருள் பிரசாதம் பெற்றுய்யவேணுமாயும் ஷை தினங்களில் செங்குந்தர்களால் ஸ்ரீகாமாக்ஷியம்மன் ஆலயத்தில் நடக்கும் ஓயாமட உண்டிக்கும் வந்து சேரவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

அ. தாண்டவராய முதலியார்,
காரியதரிசி, சிவகிரி செங்குந்த மஹாஜன சங்கம்.

## பாமாலைப் பகுதி

### செங்குந்தமித்திரன் காப்புமாலை.

### வாழ்த்துப்பாக்கள்.

**விநாயகர்.**

திங்கள்சடைவேய்ந்தபிரான்மதலையாய்விக்கினங்களெல்லாந்தீர்க்கு
மங்குசமார்பாணியனையமர்ந்திலங்குமானைதனையஞ்சலிப்பாம்
ஏங்குந்தனிசைபரப்பியிளங்கதிர்போற்சென்னைநகரிருந்துதோன்றும்
செங்குந்தமித்திரனும்பத்திரிகைநீடூழிசெழித்துவாழ்க. (1)

**சுப்பிரமணியர்.**

திருவாகுஞ்சென்னையினிற்செங்குந்தமித்திரனுஞ்செல்வன்மென்மேல்
பெருவாகியறிஞர்முதலியாவரையுநனிபழகிப்பேருற்றோங்க
மருவாருங்கடப்பலரின்வாகைபுனைவேல்வீரன்மறைவிரித்தோன்
குருவாகுமொருகுமரனிருசரணமுப்போதுமுச்சிகொள்வாம். (2)

**சிவபெருமான்.**

உலகாதிபுவனங்களசரசரவுற்பவமோங்குவித்தொருவனாகி
வில்காதிருந்துமுத்தொழில்செயுமமலனைவேணுகுழல்வாயினனும்
மலரோனுங்காணரியசிவபரம்பொருளினதுமலரடிவணங்குவோமால்
தலமேவுசென்னைசெங்குந்தமித்திரனைதலைவனீடூழிவாழ்க. (3)

**உமாதேவி.**

கூரணிசெவ்வேலவனைக்குஞ்சரக்கன்றனையானைக்குருவாய்த்தந்த
வாரணிமென்குயத்தாளைவளரிமயத்துதித்தாளைவணங்குவோமால்
தாரணியிற்சன்மார்க்கநெறிவாய்மையறமாதியெல்லாஞ்சாற்றுஞ்
சீரணிகொள்செங்குந்தமித்திரன்பல்சிறப்பெய்திசெழியுமாறே (4)

**திருமால்—இலக்குமி.**

ஓரானையோலமிடவந்தருளும்பெருமானையுவப்பினாலே
பேராதங்கவன்மார்பிற்குடியிருக்கும்பெண்கொடியைப்பிரியமாக
ஏரார்பொற்கழலேத்தியெஞ்ஞான்றுநம்முளத்தேயிருத்துவோமால்
சீரார்நஞ்சென்னையினிற்செங்குந்தமித்திரன்பல்சிறப்பின்வாழ்க. (5)

**சாஸ்வதி.**

சீரதிகமுறுஞ்சென்னைசெங்குந்தகுலநேசன்சிறப்பின்மேலான்
நாரதிகமனத்தவர்பால்நட்பாளன்நவையறுபல்நலத்தின்வாழ்க
காரதிகநாணமுறுங்கருங்குழலிவெண்கமலப்பொகுட்டின்மேய
பாரதிநன்மலர்ப்பாதம்பத்திசெய்துநித்தமுநாம்பரவுவோமால். (6)

**நவவீரர்.**

அம்பிகைசெம்பதுமமலர்த்திருவடிநூபுரத்துதித்தோரடல்கொள்வீரர்
தும்பிமுகற்கிளவல்துணையானவிறற்றம்பியர்கள்துகளொன்றில்லார்
வம்புசெயுஞ்சூர்க்கிளையைமாய்த்தநவவீரர்பதம்வணங்குவோமால்
நம்பியசெங்குந்தகுலமித்திரனேநன்மையுடன்நலமேவாழ்க. (7)
செங்குந்தப்படையோன்றிருவடி வாழ்க.

வை. ச. இராமலிங்க முதலியார், துணைத்தலைவர்,
சைவ சித்தாந்த செங்குந்தர் சமாஜம், கண்டாச்சிபுரம்.

**வாழ்த்துப் பாக்கள்.**

எங்குந்தமித்திரனுயெண்ணில்வளம்பெற்றுவளர்
செங்குந்தமித்திரனுஞ்செல்வமகன்—பொங்குந்தன்
அன்புதவிராமலவனிதழைத்தோங்க
இன்புதவிவாழ்கவினிது.

ப. தில்லை முதலியார், பெருநகர்.

ஏராருஞ்செங்குந்தமித்திரனும்பத்திரிகையின்பமோங்கிச்
சீராருஞ்செவ்வேளினின்னருளாற்றினந்தினமுஞ்சிறப்புமேவி
நாராருமனந்தழையுஞ்செங்குந்தரிதுகாறுநன்குசெய்த
பாராருந்தவமேயாய்வருநலந்தானிவ்வுலகோர்பகரற்பாற்றே

திருவளருநங்குலத்திலுதித்தபெருங்கவிவாணர்செந்நாவூறும்
மருவளருஞ்சொற்றேனார்செங்குந்தமித்திரனுமலர்வாடாமல்
உருவளருமணிக்கடல்சூழிவ்வுலகமுழுதுமணந்துலகம்போற்றுந்
தருவளருநகரளித்தகுகனருளானீடூழிதழைகமாதோ.

சு. பிச்சலிங்க முதலியார், பெருநகர்

செங்குந்தமித்திரனுஞ்செய்பிறந்தீரேழாகுந்
திங்களாயெவ்வுலகுஞ்சென்றனனால்—மங்கலைப்போல்
குந்தர்களுங்கையேற்றுக்கொண்டுபலவாபரணஞ்
சிந்தையுறச்செய்வார்தெரிந்து.

மித்திரனுஞ்செங்குந்தவேட்குழந்தைதான்வளர
வுத்தமமாங்காருகருமோங்கிபல—நற்றனமாம்
பாலூட்டித்தான்வளர்க்கப்பன்முறையுஞ்சொல்லேற்கார்
மேலுறவேசெய்வார்விரைந்து.

மு. தங்கவேலு முதலியார், பெருநகர்.



**செங்குந்தமித்திரன் வாழ்த்து**

அருமறையின் சிரப்பொருளா யாகமத்தின்
மெய்ப்பொருளா யமர்ந்து நாளும்
வருமுலைவன் வினையைவெட்ட வேற்குமரன்
விரைமலர்த்தாள் வழுத்தி யேத்துந்
திறமுடைய செங்குந்தர் சீரதனை
யுலகினுக்குச் சிறப்பாய்ச் செப்பும்
வரமுடைய செங்குந்த மித்திரனே
நீடூழி வாழ்க நன்றே.

து. தில்லைநாயக முதலியார்,
வாழைப்பந்தல்.

கல்விக்களஞ்சியமாய்க் கற்றோர்கள் பூடணமாய்ச்
செல்வத்திருமகனாய்ச் சென்னையினிற்—மல்கிடுஞ்
செங்குந்தமித்திரனுஞ் செல்வனனி வாழ்ந்திடுக
எங்குந்த னேற்ற மடைந்து.

வை. ச. இராமலிங்க முதலியார்,
கண்டாச்சிபுரம்.

## ஒரு விடுகவி வினா.

ஈரேறு வானிலதி ரிடியின் பேரும்
செந்திருவின் கொழுநன்பேர் மரத்தினோர்பேர்
செப்புமொழி பயில்விக்கும் பறவையின்பேர்
செகத்துளோர் வெறுக்குஞ் சசி யின்மைப்பேரும்
ஏரேறு மிளஞ்சிறார் கையிலவைத்து
இன்பமுடன் விளையாடுங் கருவியின்பேர்
எந்நீரு மனனீராத் தன்பாற்கொள்ளு
மிருங்கடலின் பேருடனோர் விலங்கின் பேரும்
நீரேறுஞ் சடைமுடியார் நிமலன்பேரும்
நிறைந்திடுமிச் சொற்கள் மூன் றெழுத்தாலாகி
நேருமெ வெழுத்தினுற் குறைதம்போழ்த
நெடுவேலோன் றிருப்பெரு நகைவால்மிக்க
பாரேறுஞ் செங்குந்த மித்திரன்றன்
பத்திராதிபர்ப்பெரும் வருதல் திண்ணம்
பைந்தமிழின் றுறையுணரும் கலைவலீர்காள்
மித்திரன் பாவிதனவிடையைப் பகருவீரே.

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர், சைவசித்தாந்த செங்குந்தர் சமாஜம்,
கண்டாச்சிபுரம்.

## செங்குந்தர் மறப்பேரருள்

**இணைக்குறள் ஆசிரியப்பா.**

தெண்ணீர் ஆடை மண்ணிய வுலகில்
மக்கட் பிறவியே மாண்பெரும் பயத்தது;
மக்க ளுள்ளுந் தொக்ககல் அறிவுடன்
ஆண்மை கடைப்பிடி ஓர்ப்(பு) என அமைந்த
நான்மைக் குணங்களை யுயர்ந்த பிறவியாம்
ஆண்மைப் பிறவியே ஆன்ற புகழது;
அப்பெரும் புகழை அடைந்தவர் பலருள்
திப்பிய அருளெனுந் திரைபெருங் கடலைத்
தமக்கே உரிமையாச் சமைத்தவர் சிலரே;
அருள்தான்,
மறத்தான் ஆயதூஉம் அறத்தான் ஆயதூஉம்
எனவிரு வகையே;
கனவிய அவற்றுள்,
வல்லான் கொடுமை மாநிலம் நீங்க
வல்லாண்மை காட்டிய செங்குந்த மக்கள்
பன்னிரு வர்களும் மன்னிய அருளே
மறப்பே ரருளாம்;
திறந்துறும் உலகில் திண்ணிய இருளை
இலவாய் ஆக்கும பன்னிரு
கலமிகு கதிர்கள் போலவும்,
ஆறுமா முகத்தெம் அண்ணலின் அமைந்த
விறலுயர் ஆறு விழிகளை மானவும்
பெருமபுகழ் எய்திய,
அவர்தம்,
அருளின வலிதான் அளவிடற்(கு) அரிதே;
பெருமைசால் வல்லாள அருமைசேர் ஆண்களைக்
கடக்கும பொருட்டுத் தம்மின்
அடற்பெருந் தலைத திறத்துடன் றணித்துப்
புனையெனக் கொண்டும,
செவவிய குருதியைச் சிறக்க எறிந்தும்
கடந்தபன னிருவரின கருணைதான் என்னே!
இடந்தரா வலவாள எங்கக
கையகப் பட்டுழிக் கற்பின் அவன்மனைத்
தையலின பரிபவந் தனைக்கண் டிரங்கி
விடுகென விடுத்த(து) என்னென் (று) இசைப்பது!
சாகரப் புவியிற சுடர்வடிலா ரெவருங்
காணு வலியுங் கரையா நெஞ்சம்
மாணுச் செயலையும் மறைந்த ஒழுக்கமுங்
கனறை விழியுங் கடவுட் படையும்
அனன்ற மொழியும் அமைந்த வல்லான்
இடியொலி கேட்ட நாகம் எனவுந்
துடியொலி கேட்ட அசுணந் தன்னவும்
உள்ளம் நடுங்கிக் கள்ளந் துறந்து
மொழிகள் குழறி விழிகள் துயரிக்
கைமெய்த் துதமொழச் செய்தவவ வீரரின்
வீரச் செயலை விளம்ப வற்றே!
சோரனைக் காணத் துணிந்துத் தம் உடலைப்
புணையெனக் கொண்டமை யென்னை கொன்கோ!
அயன்அரி முதலோர் அவலம் எய்த
வியனெப்ற வல்கொடு ஆடர்பல விளைத்த
சூரன் முதலோர் துணிபடச் சமர்புரி
வீரவேற்கை விமலன் துணைவராம்
குந்தஞ் செவ்வக கொடுஞ்சமர் இயற்றிச்
செங்குந்த வெனச் சிறப்புப் பெயர் புனை
வயவாகு முதலாம வானவா மரபிற்
சயமுடன் றோன்றிய நயமுள அவர்தமக்(கு)
அஃதுதான்,
இயல்பே ஆயினும்
வியனெண் ஞாலம் விம்முற்(று) உயங்கும்
கொடியவனை வலிதாவ மிடியுறும் வண்ணம்
தமதுயிர் ஈந்த தனிப்புகழ்
நிலத்தோர்
அமமென வியக்கும் அற்புதம் உடைத்தே.


ஐ. இராஜா முதலியார்)
தமிழாசிரியர், பூவிருந்தவல்லி.

80 வருஷ காலமாக் செ ன்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று, தனசரி லெட்டர்களால் புகழ்பெற்று, அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலுக்கா, டவுன், கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேபமரால் வாடை, அசல் பசும் மெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே அமையப்பெற்று, நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பயனளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டனம் பொடியே. இனிமேலாவது ஏமாந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்.

80 வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.

அசல்



ஷண்முகம்

— பட்டணம்பொடி

அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

[illegible] முதல் தரமானது [illegible]

[illegible] பார்சல் தபால் சார்ஜு

| பலம் | கிரயம் | தபால் சார்ஜு | பாக்கிங் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. |
| 8 | 1 0 0 | 0 5 0 | 0 1 0 | 1 6 0 |
| 20 | 1 12 0 | 0 8 0 | 0 2 0 | 2 6 0 |
| 40 | 3 8 0 | 0 14 0 | 0 3 0 | 4 9 0 |

2-வது தரமானது வீசை 1-க்கு ரூ. 3. ஸ்பெஷல் சரக்கு வீசை 1-க்கு ரூ. 4.
பாக்கிங் சார்ஜும் தபால் கூலியும் பிரத்தியேகமானது,

விநோதகதாமண்டலி, வெளிவந்து விட்டது!

மாப்பிள்ளை மருமகளாதல்

நூலாசிரியர்: பண்டித கதாரத்ன
சே. கிருஷ்ணசாமி சர்மா.

தமிழ்நாடு வெகு நாட்களாய் எதிர்பார்த்திருந்த அரிய புத்தகம் இதுவே. இது நாவல் அல்ல. புராணமல்ல. வேதாந்தமல்ல. காவ்யமல்ல. பிரபந்தமல்ல. இது ஓர் விநோத கதா களஞ்சியம். புத்தகத்தைப் படிக்கத் துடங்கியது முதல் முடியும்வரையில் மனதின் உற்சாகம் மிதமற்றிருக்கும். அநேக தடவைகள் படித்தாலும் ஆவல் தீராது. ஆண் பெண் அனைவரு மறியத்தக்க விஷயங்கள் அநேகமிருக்கின்றன. தமிழ்மக்கள் இதுவரை இவ்வித புத்தகம் படித்திருக்க மாட்டார். சில காபிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

ரப்காகிதம் ரூ. 1—0—0
கிளேஸ் காகிதம் ரூ. 1—8—0

ஜி எஸ். சாஸ்திரி அண்டு கோ.
தபால்பெட்டி நெ. 110 சென்னை.

விளம்பரம்.

'ஆரம்பாசிரியன்,' 'செங்குந்த மித்திரன்'
பத்திரிகாசிரியர்

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
இயற்றிய தமிழ் நூல்கள்.

| | | ரூ. அ. பை |
|---|---|---|
| 1. | சிறுவர்க்கான சிறு கதைகள் : முதற்புத்தகம் | 0 3 0 |
| 2. | ,, இரண்டாம் புத்தகம் ... | 0 3 0 |
| 3. | சிறு பொறி பெருந்தீ ... | 0 4 0 |
| 4. | பொறாமைப் பேய் ... | 0 4 0 |
| 5. | செய்யுட் கதைகள் ... | 0 12 0 |

முதல் நான்கும் வெகு இனிமையாய் மிகவும் எளிய நடையில் பிரைமெரி பாடசாலைகளில் கதா வாசகங்களாக உதவுமாறு எழுதப் பெற்றவை. ஐந்தாவது மேல் வகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக உதவும். இவை உபாத்தியாயர்களுக்கு நூற்றுக்கு இருபது தள்ளிக் கொடுக்கப்படும்.

கிடைக்குமிடம் :

டீசர்ஸ் பப்ளிஷிங் ஹௌஸ்,
200, தம்பு செட்டித் தெரு, சென்னை.



# செங்குந்த சீமான்களுக்கு இரண்டு விண்ணப்பங்கள்.

சென்னை, 1—4—28.

## i. செங்குந்தமாணவர் விடுதி.

பல இடங்களிலிருந்து வந்து சென்னையில் உயர்தரக்கல்வியை நாடும் நமது செங்குந்த மாணாக்கர்கள் தற்போது அவரவர்கள்கல்லூரிமாணவர் விடுதிகளிலோ College Hostels, பிராமணர் சாப்பாட்டுஹோட்டல்களிலோ தங்கி, அபரிமிதமான பணத்தைச் சாப்பாட்டுக்கும் குடிக்கூலிக்கும் இதர சௌகரியங்களுக்கும் செலவழித்தும், தனித்த அக்கரையுள்ள மேற்பார்வையின்றிச் சுகமும் நலனும் வேண்டிய அளவு பெறாமலிருக்கின்றனர். இக்குறையை நீக்க, நமது சங்கம் தனது ஆதரவில் திரு. ம. சண்முகசுந்தரமுதலியார், எம்.ஏ., எல்.டி., திரு. மா. பா. கந்தசாமி முதலியார், பி.ஏ., பி.இ., முதலிய அறிவாளிகளின் மேற்பார்வையோடுகூடிய ஒரு செங்குந்த மாணவர் விடுதியை (Senguntha Students' Hostel) சென்னையில் ஏற்படுத்தி, அதில் சேரும் நமதுமாணாக்கர்களுக்குக்கிரமமான செலவில் பல சௌகரியங்களையும் செய்து வைக்கத் தீர்மானித்திருக்கிறது.

இது சம்பந்தமான விவரங்களை அடுத்த பத்திரிகையில் வெளியிடுகின்றோம்.

அதற்குள்ளாக, நமது குலச்சீமான்களை, இம்முயற்சிக்கு வேண்டிய மூலப்பொருளுக்காகத் தம்மாலியன்ற நன்கொடையை எமது சங்கத்துக்கு அனுப்ப வேண்டுகின்றோம்.

செல்வத்துள் சீரியசெல்வமாம் கல்விச் செல்வத்தை நம்மவர் அடைவதற்காகச் செய்யப்படும் இச்சிறந்த தருமத்துக்கு நமது குலச்சீமான்கள் தாராள சிந்தையுடன் உதவிசெய்வார்களென்றே நம்புகின்றோம்.

சென்னை, 1—4—28.

## ii. ஏழைச் செங்குந்த மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளமும் தருமசாப்பாடும்.

உயர்தரக்கல்வியை அவாவும்ஏழைச் செங்குந்த குல மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளமளித்து உண்டி உடை இருப்பிடம் முதலிய வசதிகள் தேடி வைப்பதைத் தனது பெரு நோக்கங்களுள் ஒன்றாகக் கொண்டுளது நமது சங்கம். இவ்வருஷம் பல ஜில்லாக்களையும் சேர்ந்த பதினைந்து செங்குந்த மாணாக்கர்களுக்கு உபகாரச்சம்பளமளித்துவருகின்றது. அடுத்த வருஷமுதல் இன்னும் பலருக்கு உபகாரச் சம்பள மளிப்பதன்றிக் குறைந்த பக்ஷம் உயர்தரக் கல்வியை நாடும் இருபது மாணாக்கர்களுக்காயினும் சென்னையில் தருமசாப்பாடு போட்டுப் பாதுகாக்க உத்தேசித்திருக்கிறோம். இதற்கு மூலதனம் திரட்டுவது எமது கடமையாக இருக்கின்றது திரண்ட மூலதனமின்றி எந்தத் தருமமும் நிலையாக நடைபெறுவது அரிதென்பது எவரும் உணர்ந்ததே. ஏழைச் செங்குந்த மாணாக்கர்களுக்கென ஏற்படுத்த இருக்கும் இத்தருமத்தை நீடித்து நிலைக்கச் செய்து நமது குலத்தின் முன்னேற்றத்தை நாடுவதில் செங்குந்த மகாஜனங்கள் எங்களுக்கு ஒத்தாசையாக இருக்கப் பின்வாங்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு, ஒவ்வொரு செங்குந்தரையும் தங்களாலியன்ற நன்கொடையை இதைக் கண்டவுடன் நமது சங்கத்துக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
தி. நா. சபாபதி முதலியார்,
ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க [illegible]

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

ஸ்ரீஸ்ரீ கா. ச. ஸ்வாமிநாத தேசிகரால் கணிக்கப்பட்டது.

விபவஹு சித்திரை, வைகாசிமீ (1928ஹு மேமீ)

உத்தராயணம், வசந்த ருது, கலி-5030, சாலி-1851, பசலி-1337, பிரபவ 2.

| மே | சித்தி. | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | கண். | ஜீவன். | ஹோராத்தி. | யோகினி. | விரதாதிகள், முதலிய சுபதினங்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 19 | செவ் | துவா, 32-20 | உத் 21-34 | அ, 21-34 சி | 2 | 1 | துவா | வடக்கு | பரசுராம துவாதசி |
| 2 | 20 | புத | திர, 37-37 | அஸ்28-3 | ம, 28-3 சி | 2 | 1 | திர | தெ-கி | உமாபதி சிவாச்சாரி |
| 3 | 21 | வியா | சது, 43-22 | சித் 35-30 | சி, 35-30 அ | 2 | 1 | சது | தெ-மே | இசைஞானியார், நம்மாழ் |
| 4 | 22 | வெ | பௌ ○ 49-37 | சுவா42-40 | சி, 60 | 2 | 1 | பௌ | தெற் | திருக்குறிப்புதொண்டர் |
| 5 | (சித்திரை—மேஷம்) 23 | சனி | பிர, 56-7 | விசா50-25 | சி, 60 | 2 | 1 | பிர | மேற் | வைசாகபகுளம் |
| 6 | 24 | ஞா | துதி, 60 | அனு 60 | ம, 60 | 2 | 1 | துதி | வ-மே | சுபம்விலக்க |
| 7 | 25 | திங் | துதி, 2-27 | அனு 0 43 | சி, 60 | 2 | 1 | திரிதி | வ-மே | கிணறுவெட்ட |
| 8 | 26 | செவ் | திரி, 8-28 | கே 5-35 | மா, 5-35, அ | 2 | 1 | சது | வ-கி | சங்கஷ்ட சதுர்த்தி |
| 9 | 27 | புத | சது, 13-34 | மூ 12-13 | ம, 12-13 அ | 2 | 0 | பஞ் | ஆகா | வராஹஜயந்தி |
| 10 | 28 | வியா | பஞ். 17-45 | பூரா17-50 | சி, 60 | 2 | ½ | சஷ்த | பூமி | மாடுவாங்க |
| 11 | 29 | வெ | சஷ், 20-24 | உத் 22-5 | சி, 25-5 ம | 2 | 0 | சப் | கிழ | சுபமுகூர்த்தம் |
| 12 | 30 | சனி | சப், 21-24 | திரு24-40 | சி, 60 | 2 | ½ | அஷ் | வட | மாடுவாங்க |
| 13 | 31 | ஞா | அஷ், 20-30 | அவி25-25 | ம, 25-25 சி | 1 | ½ | ஞன் | தெ-கி | ரிஷபாவி, கா.15-50 |
| 14 | 1 | திங் | நவ, 17-47 | சத 24-20 | சி, 24-20 ம | 1 | ½ | ஞன் | தெ-மே | தானியஞ் செலவிட |
| 15 | 2 | செவ் | தச, 13-4 | பூ 21-23 | ம, 21-23 அ | 1 | ½ | ஏகா | தெற் | மந்திரம் ஜெபிக்க |
| 16 | 3 | புத | ஏகா, 6-53 துவா, 59-20 | உத் 16-55 | சி, 16-55 ம | 1 | ½ | துவா | மேற் | சர்வமத ஏகாதசி |
| 17 | 4 | வியா | திர, 50-52 | ரே 11-10 | சி, 11-10 அ | 0 | ½ | திர | வ-கி | பிரதோஷம் |
| 18 | 5 | வெ | சது, 41-45 | அசு 5-18 பர 55-15 | அ, 5-18 சி | 0 | ½ | சது | ஆகா | கழற்சிங்கர் |
| 19 | (வைகாசி—ரிஷபம்) 6 | சனி | அமா ● 32-25 | கி* 49-58 | அ, 49-58 சி | 0 | 0 | அமா | பூமி | அமாவாசை கிருத்திகை |
| 20 | 7 | ஞா | பிர, 23-14 | ரோ43-10 | சி, 60 | 0 | 0 | பிர துதி | கிழ | சரிநான், சந்திரதரிசனம் |
| 21 | 8 | திங் | துதி, 14-43 | மிரு36-45 | அ, 36-45 சி | 0 | ½ | திரி | வட | சர்வமுகூர்த்தம் |
| 22 | 9 | செவ் | திரி, 7-10 | திரு31-38 | ம, 31-38 சி | 0 | ½ | சது | தெ-கி | சதுர்த்திவிரதம் |
| 23 | 10 | புத | சது, 0-53 பஞ், 56-14 | புன 28-3 | சி, 60 | 1 | ½ | பஞ் | தெ-மே | |
| 24 | 11 | வியா | சஷ், 53-20 | பூச 26-13 | அ, 26-13 சி | 1 | ½ | சஷ் | மேற் | |
| 25 | 12 | வெ | சப், 52-23 | ஆயி26-10 | ம, 60 | 1 | ½ | சப் | வ-மே | |
| 26 | 13 | சனி | அஷ், 53-12 | மக 28-0 | அ, 28-0 சி | 1 | ½ | அஷ் | வ-கி | |
| 27 | 14 | ஞா | நவ, 55-10 | பூர 31-40 | சி, 31-40 அ | 1 | ½ | நவ | ஆகா | |
| 28 | 15 | திங் | தச, 59-58 | உத் 36-48 | சி, 60 | 2 | ½ | தச | பூமி | |
| 29 | 16 | செவ் | ஏகா, 60 | அஸ்43-10 | சி, 60 | 2 | 0 | ஏகா | கிழ | |
| 30 | 17 | புத | ஏகா, 5-13 | சித் 50-30 | சி, 60 | 2 | 1 | துவா | கிழ | |
| 31 | 18 | வியா | துவா, 11-10 | சுவா58-10 | அ, 58-10 சி | 2 | 1 | திர | வட | |

| | | | |
|---|---|---|---|
| அ | குரு சுக் | ராகு பு | |
| | 10 மிது-பு<br>18ரிஷ-சுக் | | |
| | சனி கேது | | |

சித்திரை மீ 21உ அக்கினி நக்ஷத்திரம் ஆரம்பம், சித்திரா பௌர்ணமி, 22உ ஐயங்குளம் கடபா உச்சவம், அவ்வமயம் செங்குந்தர்களால் பலவித தருமங்கள் நடைபெறும். பவானி, சோளங்கிபுரம் உச்சவ ஆரம்பம், 24உ சிதம்பரம் நடராஜர் அபிஷேகம், வைகாசி மீ 6உ சூரியக்கிரஹணம், இந்தியா முதலிய இடங்களில் தெரியாது. ஜோஹானஸ்பர்க் என்னும் பட்டணத்தில் தெரியும், ஸ்பரிசகாலம் பகல் மணி 3-20, மோக்ஷ காலம் 5-10, கிரஹணபரிமாணம் முக்கால், 10உ திருச்செங்கோடு, கொழும்பு உச்சவாரம்பம், 11உ குன்றத்தூர் சேக்கிழார் சுவாமி, சென்னையில் சந்திப்பு உச்சவம். 14உ அக்கினி நக்ஷத்திர முடிவு. 17உ சர்வ மத்வ ஏகாதசி. 18உ பிரதோஷம். இம்மாதம் 19உக்குமேல் கொஞ்சம் மழைபெய்யும்.

## மாணவர் பகுதி

### ஒரு புத்திமதி

**சதாநந்தன் :**—உலகில் மனிதப்பிறவி எடுப்பது அரிதெனும் ஆன்றோர் வாக்கியத்தை உணர்ந்த நாம், உலகில் எப்படி வாழ்வது என்பதை அவசியம் ஆராய்ந்துணர வேண்டாமா ?

**துர்க்குணன் :**—உமக்கு வேலை இல்லை. நீர் எப்பொழுதும் ஊருக்கு உழைப்பதே கடமையாகக் கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறீர். அது எனக்குச் சம்மதமில்லை.

**சதா :**—நாம் மனிதராகப் பிறந்தது எதற்காக? ஒரு துறையில் நின்று பலர்களுக்குப் பல நன்மைகளைச் செய்வது நமது கடமை அல்லவா ?

**துர் :**—நீர் உலகிற்கு நன்மைகளைச் செய்வதில் நல்ல பெயர் எடுக்கிறீரா ?

**சதா :**—பேஷ், பேஷ், உமது வார்த்தை நன்றாக இருக்கின்றது! பலர் என்னைப் புகழ்வதாலும் இகழ்வதாலும் பாதகமில்லை. என்னை இகழ்ந்து பேசுபவர்களே எனது நன்மையைக் கோரும் நண்பர்கள் எனச் சந்தோஷிப்பேன்.

**துர் :**—நீர் சொல்வது நன்றாகவில்லை. தூஷித்தவனை உடனே தூஷிக்கவேண்டாமா ?

**சதா :**—உமது வாழ்நாட்களையெல்லாம் பிறரைத் தூஷிப்பதும், ஏளனஞ்செய்வதும், பொறாமை பேசுவதுமாகக் கழிப்பதன்றி, உமது சினேகிதர்களையும் கெடுத்து, நீர் கெடுவதுமல்லாது பிறரையும் கெடுக்கும் நெறியில் உலவி வருவதை இன்றோடே விட்டுவிடும்—

**துர் :**—போதும், அம்மட்டோடு நிறுத்தும்.

**சதா :**—இன்னேரம் சகஜமாய் இருந்த உமக்குக் கோபம் வந்த காரணம் என்ன ?

**துர் :**—உம்மைப்போல் நினைத்துக்கொண்டீரா ? உமக்குத்தான் அறிவில்லை. பலர் பற்பல வித தூஷணை செய்தாலும், அவர்களை 'என் நன்மையைக் கோரும் அறிவாளிகள்' என்கின்றீர். என் அபிப்பிராயம் அதுவல்ல. என்னைத் தூஷிப்பவர்கள் எனக்குக் கொடிய விரோதிகளாவார்கள்? அவர்களை உடனே கண்டிப்பேன்.

**சதா :**—எம்மைப் பலர் தூஷிக்கிறார்கள் என்று நாம் எடுத்த சமூகநன்மைக்கான தொண்டை விட்டுவிடுவதா ? ஒரு நன்மையைச் செய்ய முன்வருவோமாகில் பல கெடுதல்கள் ஏற்படும். அதற்காகத் தொடுத்த தொழிலை விட்டுவிடுபவன் மனிதனாவானா ? இதை நீர் உணராது உரையாடுகிறீர். பண்டைய சரிதைகளை நீர் படிக்கவில்லையா ? அரிச்சந்திரன், நாயன்மார்கள், ஆழ்வாராதிகள் முதலிய பக்தர்களைப் பலர் தூஷிக்கவில்லையா ? கடைசியில் அவர்களையே பரம பக்தசிகாமணிகள் என்று தோத்திரஞ் செய்யவில்லையா ? உலகம் பலவிதம்; இகழ்வதும் புகழ்வதும் அதன் இயற்கை.

**துர் :**—நீர் கூறியது எனக்குப் பிடித்தமாகவே இருக்கின்றது. உமது வார்த்தையைக் கேட்டதாலும், உம்முடன் கலந்து உறவாடியதாலும் என்னைப் பிடித்திருந்த பொறாமை என்னும் பேய் ஓடி ஒளிந்துக்கொண்டது. நான் தேவரீரைக் குறைகூறியும், அதை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல், என்னை நல்வழிக்குக் கொண்டுவந்த உமக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?

**சதா :**—நீர் எனக்கு ஒரு கைம்மாறும் செய்ய வேண்டாம். பலர் உமக்குப் பல கெடுதல்கள் செய்வதாய்த் தெரிந்தாலும், அவற்றை அக்னி நக்ஷத்திரப் பனியெனக் கருதிப் பொருட்படுத்தாது உலகத்துக்குச் செய்யும் பணிவிடைகளைச் செய்வீராகில், அதுதான் எனக்கு நீர் செய்யும் கைம்மாறு.

**துர் :**—ஆம், அவ்வாறே செய்கிறேன்—

**சதா :**—ஆம், அதுவே தகுதி.

> "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
> நன்னயஞ் செய்து விடல்."

(இன்னும் வரும்.)

ஓஉ ஓஉ

## தலைச்சங்கப் பிரசாரகர்களின் சுற்றுப் பிரயாணம்

### மணிமங்கலம்

சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தென்னிந்திய செங்குந்தமகாஜன சங்கத்தின்பிரசாரகர்களாகிய திருவாளர்கள் காஞ்சிபுரம் பி. செ. மாணிக்கவாசக முதலியார், திரு. தி. அ. சண்முக முதலியார் ஆகிய இருவரும் சென்னையிலிருந்து 28-3-28 புறப்பட்டு அன்று மாலை 5-மணிக்கு மணிமங்கலம் அடைந்தனர். அங்கு திரு. கா. ந. கிருஷ்ணசாமி முதலியார் அவர்களை வரவேற்று வேண்டிய உபசாரங்கள் புரிந்தனர். அன்றிரவு 8-மணிக்கு மேற்படியார் வீட்டின் முன்புறத்தில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்கு மேற்படி திரு. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் தலைமை வகிக்கத் திரு. தி. அ. சண்முக முதலியாரவர்கள் ''செங்குந்தர் கடமை' என்பது பற்றியும், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் 'ராஜீய உணர்ச்சி' என்பது பற்றியும் நீண்ட சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பிறகு 'மணிமங்கலம் செங்குந்தர் சங்கம்' என்ற பெயரோடு ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு கீழ்க்கண்டவர்கள் நிர்வாக அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: திரு. கா. ந. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள்; பொக்கிஷதார்; பெ. கந்தசாமி முதலியார் அவர்கள்; காரியதரிசி; திரு. ந. மு. வைத்தியலிங்க முதலியார் அவர்கள்; மற்றும் 4 நிர்வாக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிரதி அமாவாசையிலும் கூட்டம் கூடவேண்டுமென்றும் அன்றைய தினத்திலேயே அங்கத்தினருடைய மாத சந்தாவாகிய ஓரணாவைச் செலுத்திவிட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. இரவு 12-மணிக்கு வந்தனோபசாரங் கூறப்பட்டுச் சபை முடிவுபெற்றது. மறுநாட் காலை செங்குந்த மித்திரனுக்கு அநேகர் சந்தாதாரர்களாகச் சேர்ந்தனர்.

### கீழ்ப்படப்பை.

29-3-28ந் தேதி காலை பிரசாரகர்கள் இருவரும் கீழ்ப்படப்பை கிராமத்தை யடைந்தனர். அங்கு திரு. ச. இரத்தினசபாபதி தேசிகர், திரு. மணியம் பொன்சாமி முதலியார் முதலிய அன்பர்கள் வரவேற்று உபசரித்தனர். அன்று மாலை 6-மணிக்கு அவ்வூர் போர்டு பாடசாலையில் ஒரு பொதுக்கூட்டம் திரு. ச. இரத்தின சபாபதி தேசிகர் அவர்கள் தலைமையில் கூட்டப்பட்டது. சுமார் 300 செங்குந்தர்களுக்குமேல் விஜயம் செய்திருந்தனர். முதலில் அவ்வூர்ச் செங்குந்தர் தேவார சபையினரால் தேவாரபாராயணம் செய்யப்பட்டதும் தலைவர் முன்னுரைக்குப் பிறகு திரு. தி. அ. சண்முக முதலியாரவர்கள் "கல்வியும் கைத்தொழிலும்" என்பது பற்றியும் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் "குலத்தொண்டே தேசீயத் தொண்டின் அடிப்படை" என்பது பற்றியும் ஒவ்வொருவரும் இரண்டுமணி நேரத்திற்குமேல் உபந்யசித்தனர். தலைவர் முடிப்புரை கூறியதும் அந்த இடத்திலேயே செங்குந்தமித்திரனுக்கு 25 சந்தாதாரர்கள் சேர்ந்தனர். பிறகு பிரசாரகர்களுக்குப் புஷ்பமாலைகள் சூட்டப்பட்டு இரவு 10 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

### காஞ்சிபுரம்.

30-3-28உ காலை படப்பையிலிருந்து புறப்பட்டுப் பிரசாரகர்கள் 10-மணிக்குக் காஞ்சிபுரம் அடைந்தனர். அன்று செங்குந்த மித்திரனுக்குப் பலர் புது சந்தாதாரர்களாகச் சேர்ந்தனர்.

### திருமாற்பேறு.

31-3-28உ காலை 12-மணி வண்டிக்குக் காஞ்சிபுரத்திலிருந்து பிரசாரகர்கள் புறப்பட்டு மாலை 3-மணிக்குத் திருமாற்பேறு அடைந்தனர். அவ்வூர்ச் செங்குந்த சிகாமணிகள் பலர் அவர்களை வரவேற்று உபசரித்தனர். அன்று மாலை 6-மணிக்கு அவ்வூர் சத்திரத்தில் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூடியது. அக்கூட்டத்திற்கு அவ்வூர்ச் சிவாலய தர்மகர்த்தராகிய திரு. த. காளத்தி முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். கூட்டத்தில் சுமார் 700-செங்குந்தர்களுக்குமேல் சத்திரத்தில் சிறிதும் இடமே இல்லாமல் நெருங்கிக் குழுமியிருந்தனர். தலைவர் முகவுரைக்குப்பின் திரு. தி. அ. சண்முக முதலியாரவர்கள் 'சமுதாய சீர்திருத்தம் அவசியமா' என்னும் பொருள் குறித்தும், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் "செங்குந்த சமூகமும் பத்திரிகை உணர்ச்சியும்', என்னும் பொருள்பற்றியும் உபந்யாசித்தனர். உடனே 30-சந்தாதாரர்கள் வரை செங்குந்த மித்திரனுக்குச் சேர்ந்தனர். இரவு 11-மணியாகியும் ஜனங்களில் ஒருவரும் கலையாதிருந்து அவர்கள் காட்டியஉற்சாகமும ஊக்கமும் அளவிடற்பாலதன்று. தலைவர் முடிப்புரைக்குப் பின் கூட்டம் முடிவுற்றபோது பல அன்பர்கள் "நீங்கள் அடிக்கடி வரவேண்டும், வரவேண்டும்" எனவேண்டினர். பிரசாரகர் இவ்வூரிலிருந்தபோது திருவாளர்கள் வெங்கடேச முதலியார், கோடிகணேச முதலியார், நாராயண முதலியார் (கிராமமுன்சீப்) அவர்களும் உடனிருந்து வேண்டிய உதவி புரிந்தமைக்குச் செங்குந்த உலகம் மிகவும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.



### நெம்மேலி.

1-4-28ந் தேதி காலை திருமாற்பேற்றிலிருந்து பிரசாரகர்கள் இருவரும் புறப்பட்டு நெம்மேலியை யடைந்தனர். அன்று மாலை 6 மணிக்கு அவ்வூர் பெருமாள் கோவிலில் கூட்டப்பட்ட செங்குந்தர் பொதுக் கூட்டத்தில் திருவாளர்கள் தி. அ. சண்முக முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார் இருவரும் முறையே 'செங்குந்தரின் போராட்டம்' 'நமது வெற்றிக்குறிகள்' என்பதுபற்றி நீண்ட நேரம் உபந்யசித்தனர். செங்குந்தமித்திரனுக்கு அநேகர் சந்தாதாரராகச் சேர்ந்த பின் இரவு 10-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது. அவ்வூர்த் திருவாளர்கள் செ. தங்கவேலு முதலியார், கணேச முதலியார், குமாரசாமி முதலியார் முதலியோர் பிரசாரகர்களுக்குச் செய்த உதவி என்றும் மறக்கற்பாலதல்ல.

### தக்கோலம்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரகர்களாகிய திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார், தி. அ. சண்முக முதலியார் ஆகிய இருவரும் சென்னையிலிருந்து புறப்பட்டு மணிமங்கலம், கீழ்ப்படப்பை, காஞ்சிபுரம், திருமாற்பேறு, நெம்மேலி முதலிய இடங்களில் பிரசாரம் செய்துவிட்டு 2-4-28உ காலை தக்கோலம் சேர்ந்தனர். அவ்வூர் பிரபலஸ்தராகிய திரு. அ. ராமகிருஷ்ண முதலியார் அவர்கள் குமாரர் திரு. எ. ஆர். செல்லப்ப முதலியாரவர்கள் பிரசாரகர்களை வரவேற்று வேண்டிய உபசாரங்கள் செய்தனர் அவர்களது முயற்சியால் அன்று மாலை 6-மணிக்குப் பிள்ளையார் கோவிலில் ஒரு பெருங்கூட்டம் கூட்டப்பட்டது. ஆயிரக்கணக்கான செங்குந்தர்கள் திரண்டு வந்திருந்தனர் கூட்டத்திற்கு யூனியன் போர்டு பிரசிடெண்ட் திருவாளர் சிங்கார முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். தலைவர் முன்னுரை கூறியதும் திரு. தி. அ. சண்முக முதலியாரவர்கள் "குலாபிமானம்" என்பதுபற்றியும், திரு. பி. செ. மாணிக்கவாசகமுதலியாரவர்கள் "கட்சிப்பிரதிகட்சிகளும் கைக்கோளரும்" என்பதுபற்றியும் மிகவிரிவாக உபந்யசித்தனர். கடைசியாக திரு. செல்லப்ப முதலியாரவர்கள் சங்கம் ஸ்தாபிக்க வேண்டியதின் அவசியத்தையும் அதன் நோக்கங்களையும் விளக்கிக் காட்டித் தலைச்சங்கத்தின் சட்ட திட்டங்களையும் படித்துக் காட்டினார். பின்பு "தக்கோலம் செங்குந்தர் சங்கம்" என்ற பெயரோடு ஒரு கிளைச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு அதற்கு வேண்டிய நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செங்குந்த மித்திரனுக்கு 70 சந்தாதாரர்கள் சேர்ந்தனர். கடைசியாக திரு. செல்லப்பரவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டதும் திரு. பி. செ. மாணிக்கவாசகமுதலியார் எழுந்து தங்கள் வேண்டுகோளுக்கிணங்கிக் கிளைச் சங்கம் ஒன்று ஸ்தாபித்ததுமன்றி, பத்திரிகையையும் பெருவாரியாக ஆதரித்தமைக்குத் தலைச்சங்கத்தின் நன்றியினைத் தெரிவித்தனர். பின்பு பிரசாரகர்கட்குப் புஷ்பமாலைகள் சூட்டப்பட்டு அனைவர்க்கும் சந்தன தாம்பூலம் வழங்கியதும் இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.—ஒரு நிருபர்.

### நரசிங்கபுரம்.

3-4-28உ காலை திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார், திரு. அ. ரா. செல்லப்பமுதலியார் முதலியோர் நரசிங்கபுரம் சென்றனர். அவர்களை அவ்வூர்ச் செங்குந்தர்கள் வரவேற்று உபசரித்தனர். அன்று மாலை 6-மணிக்கு அவ்வூர் போர்டு பாடசாலையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. ஏராளமான செங்குந்தர்கள் வந்திருந்தனர். கடவுள் வாழ்த்துபாடியதும் திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார் தி. அ. சண்முக முதலியார், அ. ரா. செல்லப்ப முதலியார் ஆகிய மூவரும் செங்குந்தரின் தற்கால நிலையினைக் குறித்து நீண்ட சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பிறகு செங்குந்த மித்திரனுக்கு 20 சந்தாதாரர்கள் சேர்ந்தனர். இவ்விருதினங்களிலும் செல்லப்ப முதலியாரவர்கள் பிரசாரகர்களின் உடனிருந்து செய்த நன்றி என்றும் மறக்கற்பாலதன்று.

### நாகவேடு.

4-4-28உ மாலை பிரசாரகர்களாகிய திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார், தி. அ. சண்முக முதலியார் ஆகிய இருவரும் நாகவேடு அடைந்தனர். அவ்வூரில் அரக்கோணம்தாலூக்கா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி திரு. ப. குப்புசாமிமுதலியாரவர்கள் வரவேற்று அவர்களை உபசரித்ததன்றி அன்று மாலை 6 மணிக்கு விநாயகராலயத்தில் பொதுக் கூட்டமும் கூட்டினர். திரு. காட்டகத்தி முதலியாரவர்கள் கூட்டத்திற்குத் தலைமைவகித்தனர். தலைவர் முன்னுரை கூறியதும் திரு. தி. அ. சண்முக முதலியார் 'செங்குந்தர் கிளர்ச்சி' என்பது பற்றியும், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் 'பிரசாரத்தின் பயன்' என்பது பற்றியும் நீண்டநேரம் உபந்யசித்தனர். கடைசியாக சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டுக் கூட்டம் நிறைவேறியது செங்குந்த மித்திரனுக்கு அநேகர் சந்தாதாரர்களாகச் சேர்ந்தனர்.

### பனப்பாக்கம்.

5-4-28உ காலை பிரசாரகர்கள் புறப்பட்டுப் பனப்பாக்கம் அடைந்தனர். அவர்களை அவ்வூர்ச் செங்குந்தர்களில் பிரபல்லியரான செல்வச்